Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டிச. 10-16, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 386

## தீர்வுத் திட்டத்துக்கு மாற்றுத் திட்டம் ஆராய்கிறது அரசாங்கம்



இச்சை ஊட்டும் பச்சை வைரம்

தலைப்பும் மலைப்பும்



மீசை வைக்கும் போட்டி



குறுக்கு சிறுத்தவளே

அஜித் கார் கொடுக்க தடை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## மத்தியஸ்தர்களின் கடமை!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

மாவீரர் தின உரையில்
விடுதலைப் புலிகளின்
தலைவர் பிரபாகரன்
பேச்சுவார்த்தைக்குத் தயாரெனத்
தெரிவித்துள்ளார்.
அதற்கான ஏற்பாடாக
நல்லிணக்கப் புறநிலையும்
இயல்பு நிலையும்
உருவாக்கப் பட வேண்டுமென்று
தெரிவித்துள்ளதுடன்,
எவ்விதத்திலும் இவற்றை
நிபந்தனைகளாகக் கருதவேண்டாமெனவும்
கேட்டுக் கொண்டுள்ளார்.
அவர் தெரிவித்துள்ளபடி
யுத்தமற்ற சூழலில்
பேச்சுவார்த்தைகள் நிகழ்வது
விரும்பத்தக்கதே.

அதேபோல்,
மக்களின் இயல்பு வாழ்வை
மீள ஏற்படுத்தக்கூடியவாறு
சகல விதமான
தடைகளையும் நெருக்கடிகளையும்
நீக்குகின்ற வகையில்
தங்கள் தங்கள் பங்களிப்பை
இருபுறமும் மேற்கொள்ள வேண்டியதும்
அவசியமானதே.
இவையிரண்டும் நிபந்தனைகளாகக்
கொள்ளப்படாவிட்டாலும்
இவற்றை மேற்கொள்வதற்கு
இருபுறத்தினரும் கடைப்பிடிக்க வேண்டிய
விதிமுறைகள் என்பன
வகுக்கப்பட வேண்டும்.

யுத்தமற்ற சூழ்நிலையில்
பேசுவதற்கு இணக்கம் கண்டால்
யுத்த நிறுத்தத்தில்
இருசாராரும் கடைப்பிடிக்கவேண்டிய
ஒழுங்குவிதிகள்
மத்தியஸ்தர்களால்
தெளிவாக வகுக்கப்படவேண்டும்.
அவை எவ்வித வன்முறைக்கும்
முற்றுப்புள்ளி வைப்பதாக
அமைய வேண்டும்.

அதேபோல்
இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு
இருதரப்பினரதும் பங்களிப்புகளை
மத்தியஸ்தர்கள் வரையறை செய்ய வேண்டும்.
இதில், அந்தந்தத் தரப்புகளின்
தேவைகள் என்பவற்றை விட மக்களின்
நலன்கள் என்பனவே
முதன்மைப்பட்டு நிற்பதை
மத்தியஸ்தர்கள்
உத்தரவாதம் செய்ய வேண்டும்.
உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப்
பொருட்களின் விநியோகத்திற்கான தடைகள்,
உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களின்
தடைகள், கடற்றொழில், மற்றும் விவசாயம்
போன்ற தொழிற்செய்கைகளிலுள்ள
கட்டுப்பாடுகள், உற்பத்திப் பொருட்களை
சந்தைப் படுத்துவதற்குள்ள தடைகள், எல்லா
மார்க்கங்களிலுமான போக்குவரத்துக்கான
தடைகள், நிர்வாக சேவைகள் இயல்பாக
நிகழ்வதிலுள்ள தடைகள், சுதந்திரமான
செய்திப் பரிவர்த்தனைகளிலுள்ள தடைகள்
என்பன நீக்கப்படுவதென்பது
இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு
அவசியமான விடயங்களாகும். அத்துடன்
தற்போது இடம்பெயர்ந்தும்,
அகதி முகாம்களிலும் வாழும் மக்கள்
தங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத்
திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவதுடன்
அதற்கான ஏற்பாடுகளும்
செய்து கொடுக்கப்படவேண்டும்.

இவற்றை இருதரப்பும்
தம்மீது சுமத்தப்படும்
அழுத்தங்களாக உணராமல்
மக்கள் பற்றிய தமது
கடப்பாடாக உணர்ந்து
தாமாகவே முன்வந்து
மேற்கொள்ளச் சித்தமாக
இருக்க வேண்டும்.
இல்லையேல் 'மக்களுக்காக' என்று
கூறிக் கொண்டு இருதரப்பும் கூறும்
நியாயங்கள் யாவும்
மக்களைப் பலிக்கடாக்களாக
வைத்துக் கொண்டு ஆடும்
சதுரங்க விளையாட்டாக
மாறிப்போய்விடும்.
இத்தகைய நிலைமையை
சமாளிப்பதென்பதே
மத்தியஸ்தர்களது
பாரிய பொறுப்பு.
இலங்கை அரசாங்கமும் கூட
பேச்சுவார்த்தைகளுக்குத் தயாரெனவே
சொல்லி வருகிறது.
பேச்சுவார்த்தைக்கு தயாரான
இருபகுதியும்
பேச்சுவார்த்தையில் இறங்காதிருக்கக்
காரணியாக இருக்கும்
விடயங்களை இனங்கண்டு
களைய வேண்டியது
மத்தியஸ்தர்களின் பொறுப்பே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## தட்டானைத் தொழுவோம்

மார்க்கண்டேயர் தனது பதினாறாவது வயதில் ஆயுள் முடிவதை அறிந்து கொண்டவர். ஆனாலும் பூமியில் வாழ ஆசைப்பட்டார். அதற்காக நல்லவர்கள், வல்லவர்களை நாடினார். இது சாத்தியமற்றதாயினும், கேட்கும் வரத்தை தட்டாமல் கொடுக்கும் தட்டானை (சிவனை) சரணடைந்து வேண்டினால், சாத்தியமாகுமென எடுத்துரைத்தனர்.

அதன்படி காலன் அண்மிக்கும் தறுவாயில் மார்க்கண்டேயர் நீயே கதியென சிவலிங்கத்தைத் தழுவியபடி இருந்தார். காலன் மார்க்கண்டேயரை நோக்கி பாசக்கயிறு வீச, அக்கயிறு சிவலிங்கத்தையும் சேர்த்து மார்க்கண்டேயர் கழுத்தில் விழ, வெகுண்டெழுந்த சிவன் காலனை எட்டி உதைத்து கீழே தள்ளினான். மார்க்கண்டேயர் மீண்டார்.

தட்டானை(சிவனை) தொட்டவனை(மார்க்கண்டேயரை) தொட்டவன் (காலன்) கெட்டான். என்ற முதுமொழிக்கொப்ப தட்டானைத் தொழுது சகலதும் பெற்று மரணத்தை வெல்வோமாக.

ஆண்டிமுனை-அசோக்.



## நோன்பின் மகத்துவம்

இஸ்லாமிய நம்பிக்கைகளும் கிரியைகளும் மனிதனின் உள்ளத்தையும் உடலையும் சிந்தனையையும் பக்குவப்படுத்தி, இவ்வுலகிலும் மறுவுலகிலும் இன்பகரமான நல்வாழ்வுக்குப் பயிற்சி கொடுக்கும் பயிற்சித்திட்டங்களே. இந்த இலட்சியத்தின் அடிப்படையிலேயே நோன்பு அமைகின்றது.

நோன்பை விசுவாசிகளின் மீது விதியாக்கிய வல்ல நாயன், நோன்பின் தத்துவம் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறான்! "விசுவாசிகளே! நீங்கள் (தீயவைகளை விடுத்து நல்லவைகளைக் கைக் கொண்டு) பக்தியாளர்களாக ஆவதற்காக உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதியாக்கப்பட்டது போன்று நோன்பு உங்கள் மீதும் விதியாக்கப்பட்டுள்ளது. (அல்குர்ஆன்)

இதன் அடிப்படையில் நாங்களும் நோன்பு நோற்று அல்லாஹ்வின் அருமை பெற்றுக் கொள்வோமாக!

(அமீன்)

எம்.ஐ.எம்.அஸாத்-வெள்ளைமணல்.

## தேவ அன்பு

அன்பைத் தேடி மனிதன் அலைகிறான். இந்த உலகில் உண்மை அன்பை கண்டு பிடித்து விடவே முடியாது. இந்த உலகம் மாயையானது-உலகிலுள்ள யாவுமே மாயையே. இந்த உலகின் அன்பெல்லாம் வெறும் பொய்யே.

உலகைப் படைத்த தேவன் பாவியான மனிதனைத் தேடி இந்த உலகத்திற்கு வந்தார். மனிதனாகவே வந்துதித்த அவர் மனிதனோடு மனிதனாக வாழ்ந்தார். பாவ பலியாக தம் உயிரையே சிலுவையில் ஈந்தார். தமது திரு உதிரத்தையே சிந்தி மரித்தார். தேவ அன்பின் மகத்துவத்தை விபரிக்க வார்த்தைகளில்லை. வேதம் கூறுகிறது: நாம் பாவிகளாக இருக்கும் போதே இயேசு கிறிஸ்து எமக்காக மரித்தார். நாம் பெலவீனர்களாக இருக்கும் போதே அவர் எமக்காக மரித்தார். நாம் தேவனுக்கு சத்துருக்க்ளாக இருக்கும் போதே அவர் எமக்காக மரித்தார். (ரோமர் 5:6,8,10)

மூன்றாம் நாள் உயிரோடெழுந்து இன்றும் ஆவியானவராக மனிதர் மத்தியில் ஜீவனோடிருக்கிறார். பாவிகளான எம்மை தேவ பிள்ளைகளாக்க இன்றும் பரிசுத்த ஆவியானவர் எம்மைத் தேடி வருகிறார். அவருக்கு எமது வாழ்வில் இடம் கொடுப்போம். தேவ அன்பே உண்மையான அன்பு. மனிதர்களது அன்பெல்லாம் மாயை- அன்பைத்தேடி அலையும் மானிடரே! இயேசு கிறிஸ்துவிடம் உங்கள் ஜீவியங்களை அர்ப்பணியுங்கள். தேவ அன்பு உங்களுடையதாகும்-தேவ சமாதானம் உங்களுக்கு கிடைப்பதாக!

போதகர் : வி.ஈ.வி.ஜோசப்-ஜிந்தோட்டை.

## கவிதைப் போட்டி இல.386



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.12.2000

கவிதைப் போட்டி இல.386
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல. 383

### பரிசுக்குரிய கவிதை

### தேடல்........

தாயோடு அறுசுவையும்
தந்தையோடு கல்வியும் போனபின்,
நாயோடு நடுவழி நிற்கும் நாம்
நாடவிரும்புவது நலன்புரி-நிலையமே!

வ.பாலமுருகன்-கொக்குவில் கிழக்கு.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### நன்றி

ஆறுகளின் பசிக்கொடுமையில்
ஐந்துக்கும் பங்குண்டோ...?
இதுவல்லவோ உண்மை நன்றி.
இமாலயத்திற்கும் உயர்வாக!

லரீனா நஸீர்-மாத்தளை.

### விருந்தோம்பல்

இரு கைகள் கன்னத்தில்
மறு கணம் மரணத்தில்
நன்றியுள்ள நண்பனவன்
விருந்தினராய் வந்திட்டான்
வருந்திடவில்லை நாம்
இருந்திருக்க இடம் கொடுத்தோம்
விரைந்து வா அம்மா
மருந்தாகினும்
மனமார வழங்கிடுவோம்!

மர்சூகா முத்தலிப்-ஹபுகஸ்தலாவை

### 'கதி'

எஜமானருக்கு எக்கதியோ
அக்கதியே எனக்கும்!
ஓர் ஐயறிவு ஜீவனின்
நன்றிப் புலம்பலா இது?

பஸ்மின் நஸீர்-மாத்தளை.

### சிறார் மனநிலை

அகதிச் சிறார் மூவர்
அவல நிலை அறிகிலர்
சுணங்கன் நன்றிக் காவல்
சுந்தரி கைதட்டல் ஆருக்கோ?

இ.பொன்னுத்துரை-பதுளை.

### இறைவா உனக்கும் தடையா?

அன்றழைத்த சம்பந்தன் பசிதீர்த்த
அம்மை அப்பரே!
இன்றெம் குரல் கேட்கவில்லையா
இறைவா?
நின்று நின் தடைக்கு எம்மவரை
அஃறிணை என்றழிக்க,
இன்று இறந்து பெற்ற வான்
குபீர், குபீர், ஆட்லறியா?

பா.சுந்தரம்-கொழும்பு-15.

### எந்தநாட்டுக்கு?

சிறுவர் உரிமையில்
சேர்க்கப் படாத-இந்த
வறுமைச் செல்வங்கள்
எந்த நாட்டுக்கு.
சொந்தமானவர்கள்?

அ.அச்சுதன்-சேனையூர்.

### யுத்தம்

பச்சிளம் பாலகரின்
பால்வடியும் முகம்-இன்று
பிச்சைக் கோலம் பூண்டு
வீதியில் ஆழ்த்தி விட்டதே!

எஸ்.கே.கிருபா-வவுனியா

### விதி!

பள்ளங்கள் எல்லாமே
கடல் என்றே விழுகின்றது
நதி பயங்கர வாதங்கள்
எல்லாமே உன் மீது விழுவதே
தமிழனுக்கான விதி

வி.ஜெயந்திரன்-அஸ்கவேலி.

### ஏன்..?

தாயோடு..
இருக்க வேண்டிய
நீங்கள்...!
நாயோடு
இருப்பதேன்...?

வ.கவிதா-சிலாபம்.

### நியாயம்

மூன்று பேர் கூடி
முடிவெடுக்க முடியவில்லையென்றால்,
நன்றியுள்ள நான் வரவா நடுவில்
நல்லதொரு நியாயம் சொல்ல!

கே.தங்கராஜா-சீனக்குடா.

### அவல நிலை

நாளைய சமுதாயத்தின்
இன்றைய நிலையைப் பார்த்தீர்களா?
இவர்களின் அவல நிலையைக் கண்டு
மனம் வருந்தத்தான் முடியுமே தவிர
வாய் திறக்க முடியாதே!

ச.சசிகரன்-தெஹிவளை.

### அப(ா)யம்

ஐயா பிந்துனு வெவவில்
வெட்டிக், குத்தி, அரிந்து
கிழித்து, சுட்டுப், பொசுக்கி
அழித்தது போல் எங்களையும்
ஒழித்து விடாதீர்கள்!

திருமதி.ம.ஞானராஜா-
வாழைச்சேனை



# வாசக[ர்]சாலை

அன்பின் முரசே!

உன்னை ஞாயிறு தோறும் தவறாமல் பெறுவதில் எனக்குத் தனி மகிழ்ச்சிதான். நீ தரும் ஆக்கங்கள் அறிவுரைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஆருடம் கூறுவதில் இவ்வுலகில் உனது தனித்துவமே தினத்துவம். உன்னைப் பாராட்ட என்னால் முடியாது. அவ்வளவு தலைசிறந்து விளங்கும் முரசே! இதை எழுதுவது என் மனக்குமுறலினால் பண்டாரவளைப் படுகொலையை பி.பி.ஸி. மூலம் கேட்டு தாங்க முடியாத வேதனை, உனது 380வது முரசில் 3ம் பக்கம் 'தமிழ்க் கைதிகளுக்குத் தீபாவளி விழா' இதைப் படித்ததும் வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போலானேன்.

சிறைக்கைதிகளின் மத்தியில் ஆன்மீக உணர்வை ஊட்டி அவர்களைச் சமுதாய நீரோட்டத்தில் சேர்ப்பதற்கும், தமக்கும் பிறருக்கும் தீங்கு இழைக்காத மனித நேயம் கொண்டவர்களாக மாற்றுவதற்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் உதவும் என்று ஊவா மற்றும் வடகிழக்கு மாகாண சிறைச்சாலைகள் சிரேஷ்ட நலன்புரி அலுவலர் ஐயா திரு.இராஜேஸ்வரன் தெரிவித்திருந்தார். அப்படுகொலைக்குப் பின்பும் இன்றும் தமிழ் கைதிகளுக்கு மட்டுமன்றி தமிழ் இனத்துக்கு உதவ என்ன உள்ளது ஐயா! தேவைதானா மேற்கூறிய அறிவுரைகள்.... மாற்றியமைத்து பழிவாங்கி விட்டனர்.

அன்ரனி ராஜ்-மட்டக்களப்பு-(குவைத்)

தித்திக்கும் தினமுரசே!

வியாழன் வந்தால் உன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். நீ தாங்கி வரும் அரசியல் கட்டுரைகள், 'நில்கவனி முன்னேறு', தொடர் சிறுகதைகள் 'தகவல் பெட்டி', 'சிந்தியா பதில்கள்', 'சினிமா பகுதி' ஆகியவை என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன. உன் சேவை தொடர்ந்து எமக்குத் தேவை. உன் பணி தொடர என் உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.

எம்.ஐ.எம்.ஷாபி-அக்குறணை.

அன்பின் முரசே...!

உன்னுள் அடங்கிய அம்சங்கள் அனைத்தும் இனிமையானவை. அவற்றுள் 'மன்னாதி மன்னன்', 'லேடிஸ் ஸ்பெஷல்', 'நில் கவனி முன்னேறு' என்பன முக்கிய அம்சங்களாக தொடர்கின்றன. 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் அரசியல் அலசல்களில் நீதியான நடுநிலையான கணிப்புகள் என்றும் தொடரவேண்டும். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக திகழ வேண்டும் என்பதே எனது ஆசை வளமுடன் வாழ்க வளர்க முரசே.....

சி.அபிராமி-சங்கானை.

பிரியமான முரசே....

முரசு 384ல் 'தேன் கிண்ணம்' பகுதியில் 'கரையை தொடாத அலைகள்' என்னும் என் கவிக்கும் இடம் தந்திருந்தாய். உனக்கு என் மனப்பூர்வமான நன்றிகள். என் நீண்ட நாள் கனவை நனவாக்கிய பெருமை உன்னையே சாரும். வளர்க உன் பணி.

எஸ்.மனோஹரன்-ஹட்டன்.

உயிரோடு சங்கமமாக இருக்க வேண்டியது தமிழ்மொழியின்-தமிழ் மக்களின் தன்மையே என்று புரிய வைக்கும் புதுமையான தினமுரசே....!

முரசு 382ல் வெளியான 'மலையகக் குழப்பங்கள்....' 'செய்திச் சிதறல்', 'அவதானம் அவசியம்', 'அதிரடி அய்யாத்துரையில்...' பண்டாரவளைச் சம்பவம், சிங்களப் பத்திரிகையொன்று... மேலும் அனைத்து அரசியல் கட்டுரைகளும் மிக மிக நன்றாகவும், தமிழ் மக்களின் நிலமைகளையும், உண்மையாக நடந்தது என்னவென்பதையும் அழகுத் தமிழில் அருமையாய் தந்ததற்கு எனது முரசிற்கு நன்றிகள் பல....! மேலும் தினமுரசே அரசியல் கட்டுரைகளை அதாவது புலிகள் இயக்கத்தின் 'வெற்றியின் இரகசியங்கள்...' மேலும் முன்னர் வெளிவந்த அரசியல் கட்டுரைகளை மீண்டும் தொடர்ந்து பிரசுரித்தால் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம். அத்தோடு அன்றைய நிலைகளை நாமும் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். உனது அரசியல் கட்டுரைகள் ஒவ்வொன்றும் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. என்ன வென்று வாழ்த்துவது எனக்கே தெரியவில்லை, புரியவும் இல்லை. ஆனால் சூப்பர்.

அஜந்தா-நாவலபிட்டி

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

அன்பின் முரசே,

தசாப்தம் காணவிருக்கும் உனது சேவையை நான் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. உனது சேவையானது மற்றைய தினசரிகளோ, வார மலர்களோ ஈடு கொடுக்கமுடியாத அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. சுமார் நான்கு வருடங்களிற்கு முன்னர் 'தினமுரசு வாரமலர்' என்ற பத்திரிகை வெளியாகின்றதா என்ற கேள்விக்குறி கூட எனது மனதில் தோன்றியது. இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவில் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளோடு ஒப்பிட்டாலும் தினமுரசு முதலிடத்தைப் பிடிக்கும் என்பது மிகையாகாது. பலஅம்சங்களை உள்ளடக்கிய இப்பத்திரிகையானது வாராவாரம் உலகில் வாழும் தமிழர்கள் வீடுகள் தோறும் சென்றடைந்து புன்னகைப்பூக்களை உதிர்க்கின்றது. அற்புதராஜாவின் இழப்பிற்குப் பின்னும், எட்டப்பர்களின் மிரட்டல்களிற்கும் மத்தியில் மிகவும் சிறப்பம்சமாக விளங்குவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். இன்றல்ல என்றும் இவ்வாறு வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இ.இ.வரன்-டோஹா-கட்டார்.

பிரியமுள்ள தினமுரசே!

உன்னில் உள்ள ஆக்கங்கள் அனைத்தும் தூள். நீ தரும் அனைத்து ஆக்கங்களுக்கும் உன்னை அதிக விலை கொடுத்து வாங்குவதில் எந்த தயக்கமும் இல்லை. என் வேண்டுகோள் எந்த சூழ் நிலையாக இருந்தாலும் உன் சேவையை நீ தொடர்ந்து எம் கைகளில் நீ தவழ வேண்டும்.

உன் விடாமுயற்சிக்கு என் வாழ்த்துக்கள்.

ஆர்.எப். நஸ்லியா-யடவத்த.

# கொழும்பிலிருந்து ஜயவர்த்தனபுரவுக்கு

# நாட்டின் தலைநகர் இடம் மாறுகிறது?

கொழும்பு மாநகரம் துரித கதியில் மாற்றமடைந்து வருகிறது. கொழும்பை தலைநகரமாகக் கொண்டு நேற்று வரை இயங்கி வந்த அமைச்சுகள் அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவையும் பாதுகாப்புடன் கூடிய தலைமை நிலையங்களும் மெல்ல மெல்ல ஜயவர்த்தனபுர கோட்டேயை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக முதன்முதலில் பதவியேற்ற ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்கள் தான் முதன் முதலில் இலங்கையின் தலைநகரை இடம் மாற்றி ஜயவர்த்தனபுர கோட்டேக்கு மாற்றுவதற்குத் திட்டமிட்டார். அவர் அவ்வாறு திட்டமிட்டதற்கு அடிப்படைக் காரணம் ஒன்றிருந்தது.

ஜயவர்த்தனபுர கோட்டே பண்டைய சிங்கள மன்னர்களின் இராஜ்ஜியமாக இருந்தது. இந்த வரலாற்று ரீதியான நிலை தன்னுடைய பெயருடன் இணைந்து நிலைபெற வேண்டுமென்று அவர் கண்ட கனவின் பயனாகவே அவரால் கொண்டுவரப்பட்ட ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே திட்டம் ஏற்படுத்தப்பட்டது என்று அப்போதிருந்த பல அரசியல்வாதிகள் மறைமுகமாகச் சுட்டிக் காட்டினர்.

திரு ஜயவர்த்தனாவையும் அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியையும் விமர்சிப்பதையே சிறப்பம்சமாகக் கருதும் இன்றைய ஆளுங் கட்சியும் ஜயவர்த்தனாவின் கனவை நனவாக்கவே இன்று செயற்பட்டு வருகின்றது.

இன்றுள்ள அரசியல் பிரமுகர்கள் அனைவரும் ஸ்ரீ ஜயவர்த்தபுர கோட்டேக்கு அரச நிர்வாக அமைப்புகள் இடம் மாறிச் செல்வதைத் தடுக்கவோ மறுக்கவோ முடியாத நிலையிலுள்ளனர். இதற்குப் பிரதான காரணமாக விளங்குவது பாராளுமன்றக் கட்டடம். ஆரம்பத்திலேயே கோட்டே பகுதிக்குக் கொண்டு செல்லப் பட்டதாகும்.

பல கோடிக்கணக்கான ரூபா செலவில் கோட்டே பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டுவரும் ஜனாதிபதி மாளிகையும் டிசம்பர் மாத மத்தியில் பூர்த்தியடைந்து விடுமென்றும் தெரியவருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதிகளும் சகல வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டு, பெரும்பாலான உறுப்பினர்கள் அங்கே வாசம் செய்கின்றனர்.

ஜப்பான் நாட்டு அரசாங்கம் அமைத்துக் கொடுத்த, சகல வசதிகளும் கொண்ட மருத்துவமனையும் ஜயவர்த்தனபுரவிலேயே அமைக்கப்பட்டுள்ளது. பல முக்கியமான அரசாங்கத்திணைக்களங்கள் ஜயவர்த்தனபுரவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன.

கொழும்பு நகரிலுள்ள இராணுவத் தலைமையகங்களும் இங்கிருந்து விரைவில் மாற்றப்படவிருக்கின்றன.

இது இவ்வாறிருக்க கொழும்பு மாநகரத்தின் எதிர் காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பதையிட்டு கொழும்பு மாநகரவாசிகள் கவலை கொள்ளாமலில்லை. கொழும்பு மாநகரை விட்டு இங்கு குடிவாழும் மக்கள் அனைவரும் வெளியேறிப் போய் விடுவார்களே என்ற கவலை எவருக்கும் ஏற்படத் தேவையில்லை. கொழும்பு மாநகரம் முற்று முழுதாக ஒரு வர்த்தகக் கேந்திர மையமாக மாற்றமெடுக்கப் போகிறது. எனவே இங்கு வாழும் மக்கள் கவலையடைய வேண்டியதில்லை.

புதிய அமைச்சரவையில் நகர நிர்மாணத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள மங்கள சமரவீர திடீரென்று நகரிலுள்ள அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தையும் எதுவிதமான முன்னெச்சரிக்கையுமின்றி தகர்த்தெறிந்ததற்கும், கொழும்பு மாநகரை வர்த்தகக் கேந்திரமாக துரித கதியில் மாற்றியமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக இருக்குமென்றே நம்பப்படுகிறது.

அமைச்சர் சமரவீரவின் இத்திடீர் நடவடிக்கையினால் பெரும் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்கள் சார்பில் போர்க் கொடியுயர்த்திய அமைச்சர் பௌஸியினுடைய எதிர்ப்பும் பிசுபிசுத்துப் போய்விட்டது. இரு அமைச்சர்களுக்குமிடையிலான முறுகல் நிலை இன்னும் தளர்ந்தபாடில்லை.

தலைநகரை கொழும்பிலிருந்து இடம் மாற்றுவதில் இங்கு வாழும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதை அவதானிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். ■

## மட்டு. அபிவிருத்திக் கூட்டம்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டமும், மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டமும் இம்முறை கொழும்பில் நடைபெற்றது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவான ஒரேயொரு தமிழ்ப் பிரதிநிதி திரு.சோ. கணேசமூர்த்தி. இன விவகார தேசிய ஒருமைப் பாட்டு கனியவள அபிவிருத்திப் பிரதியமைச்சரான கணேசமூர்த்தியே மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகவுமுள்ளார். ■

## "போரைத் தொடங்கியவர்களே போரை நிறுத்தட்டும்' பிரதம மந்திரி

"பயங்கரவாதத்தை ஆரம்பித்த பயங்கரவாதிகளே பயங்கரவாத யுத்தத்தை நிறுத்த வேண்டும். அரசு தமிழ் மக்களுக்கெதிராக யுத்தம் செய்யவில்லை. யுத்தத்திற்கான தீர்வு யுத்தம் மூலமே கொண்டு வரப்பட வேண்டும். ஜனாதிபதியும் தனது கொள்கை விளக்கக் கருத்துக்குமிடையில் எவ்வித முரண்பாடுகளுமில்லை. புலிகள் இயக்கத்தின் ஆயுதங்கள் களையப்படவேண்டும். புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக யுத்த நிறுத்தம் ஒரு போதும் கொண்டு வரப்படமாட்டாது. அதை அரசு விரும்பாது. ஐ.தே.க. உட்பட ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் கவனத்திற்கொள்ளப் படும்!" இவ்வாறு தமிழ் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

## தியான யோக சாதனை

தொடுகை சிகிச்சை நிபுணர்களான டாக்டர் சசிகாந்த் சேத் அவர்களும் டாக்டர் திருமதி ராஜ ஸ்ரீ சசிகாந்த் அவர்களும் தியான யோகா வகுப்பினை பம்பலப்பிட்டி தொடர்மாடி சமூக நல மண்டபத்தில் டிசம்பர் 10, 11, மற்றும் 12ம் திகதிகளில் மாலை ஐந்தரை மணிக்கு நடத்தவிருக்கின்றனர்.

இந்த வகுப்பில் சோந்து பயிற்சி பெற விரும்பியவர்கள் பம்பலப்பிட்டி கிறீன்லன்ஸ் ஹோட்டலில் தங்கியிருக்கும் டாக்டர் சேத் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட வாகனம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு!

மட்டக்களப்பு கட்டிடத் திணைக்களத்திற்குச் சொந்தமான 16-8313 இலக்க மாருதி வாகனமொன்று கடந்த 15ம் திகதி புலிகளால் கடத்தப்பட்டது தெரிந்ததே.

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்திற்குச் சமீபமாக நண்பகலில் வீதிக்குக் குறுக்கே சைக்கிளைப் போட்டு வழி மறித்து, புலிகள் அவ்வாகனத்தைக் கடத்திச் சென்றனர்.

திணைக்கள அதிகாரியைக் கீழே இறக்கி விட்டு சாரதியின் கழுத்தில் துப்பாக்கியை வைத்து புலிகள் வாகனத்தைக் கடத்தி பதுளை வீதியிலுள்ள இலுப்படிச்சேனைக்குக் கொண்டு சேர்த்ததாக பொலிஸில் முறையிடப்பட்டிருக்கிறது.

இச் சம்பவம் பற்றி சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் புலிகளுடன் பேச்சு வார்த்தையை மேற்கொண்டனர். அதன் பின்னர் அவ்வாகனம் செஞ்சிலுவைச் சங்கத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

21ம் திகதி மாலை புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கரடியனாற்றில் இவ்வாகனத்தைத் திருப்பிக் கொடுத்தனர்.

எனினும் அது இன்னமும் உரிய திணைக்களத்தாரிடம் ஒப்படைக்கப்படாமல் ஏறாவூர் பொலிஸிலேயே கிடக்கிறது. ■

## அகதிகளை வெளியேறக் கோரி வழக்கு புத்தளம் அகதிகள் போராட்டம்!

(மன்னார் நிருபர்)

புத்தளம்-கரம்பையிலுள்ள ஸபா, மர்வா அகதி முகாம்களில் வாழும் 320 இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்களை வெளியேறுமாறும், நட்டஈடு கோரியும் புத்தளம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு வன்னி எம்.பியாகவிருந்த அல்ஹாஜ் எஸ்.எஸ்.எம். அபூபக்கர் மூலமாக இக்காணி இடம்பெயர்ந்தோருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கெக்கரிபாம் என அழைக்கப்படும் இக்காணி அரசுக்குச் சொந்தமானதெனவும், 99 வருடக் குத்தகையில் தனி நபர்ஒருவர் பெற்றிருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்தோர் குடியேறி 7 ஆண்டுகள் கழிந்த இந்நிலையில், திடீரென வழக்கு வைக்கப்பட்டது குறித்து பல்வேறு ஊகங்கள் நிலவுகின்றன. இதன் பின்னணியில் யார் உள்ளனர் என்பதும் மர்மமாக உள்ளது.

அன்றாடம் உழைத்து 10 பேர்ச் காணி கூட வாங்க முடியாமல் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் ஒரு நேரச் சோற்றுக்கே, கஷ்டப்பட்டு வாழும் இம்முகாம் மக்களுக்கு வந்த இச் சோதனை குறித்து பல அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

இக்காணி விடயத்தில் புத்தளம் அரச அதிபர் சாதகமான முடிவைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். இருப்பினும், நீதிமன்றம் வரை இவ்விடயம் செல்வதால் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

டிசம்பர் 4ம் திகதி மேற்படி 320 குடும்பத்தலைவர்களும் நீதிமன்றம் செல்ல வேண்டியுள்ளது. அகதிகளின் சார்பில் பிரபலமான இரு சட்டத்தரணிகளான பஸால் மற்றும் அப்துல் காதர் ஆகியோர் ஆஜராகியுள்ளனர். ஸபா, மர்வா முகாமில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் கிழக்கில் பரவலாக மழை!

கடந்த இருவாரங்களுக்கு முதல் கிழக்கிலும் நாட்டின் வேறு பகுதிகளிலும் பெய்த பலத்த மழை காரணமாக கிழக்கு-அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டிருந்தது.

அந்த வெள்ளம் வடிந்து நிலைமை சீரடைந்து வரும் தறுவாயில், தற்போது மீண்டும் கிழக்கில் பலத்த மழை அவ்வப் போது பெய்து வருகிறது.

கிழக்கிலும்-வடக்கிலும் டிசம்பர் மாதப் பகுதி மாரிமழைப் பருவ காலம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் மாணவரில் அக்கறை! கல்விப் பணிப்பாளருக்கு பாராட்டு!!

(மன்னார் நிருபர்)

"மன்னார் மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் எதிர் நோக்கிய பல்வேறு பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து, முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கி வரும் மன்னார் வலயக் கல்விப் பணிபாளர் எம்.ஆபேல் றெவ்வல் என்றுமே பாராட்டுக்குரியவர்.

இவ்வாறு, மன்னார் மாவட்ட முஸ்லிம் மாணவர் அமைப்பு, கல்வி பிரதியமைச்சர் ஏ.எல்.அதாவுல்லாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 25, 26ம் திகதிகளில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற முஸ்லிம் அதிபர்களுக்கான கருத்தரங்கை முன்னிட்டு. மாணவர் அமைப்பு அனுப்பி வைத்த கடிதத்தில் தொடர்ந்து குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

1992 முதல் மன்னாரில் மீள்குடியேறிய முஸ்லிம்களில் தற்போது சுமார் 1000 வரையான மாணவர்கள் மன்னாரிலுள்ள 7 முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

முஸ்லிம் பாடசாலைகள் எதிர் நோக்கிய பல்வேறு குறைபாடுகைள மிகுந்த அக்கறையுடன் தீர்த்து வைத்த இவர், இனிவரும் காலங்களிலும் இவ்வாறான பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுத்து தீர்த்து வைப்பார் என நாம் நம்புகிறோம்."

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன் பிரதிகள் கல்வி அமைச்சர், மாகாணகல்வி அமைச்சு, ஜனாதிபதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## புனர்வாழ்வு முகாம் கொலையாளிகள் பலர் தலைமறைவு

பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் படுகொலை விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பலர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். கைதுசெய்யப்பட்டுள்ளோரில் பாதுகாப்புத் தரப்பினரும் அடங்குவர். எனினும் இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட வேறு பல இளைஞர்கள் இன்னமும் தப்பித் தலைமறைவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீவிரமாக அவர்கள் தேடப்பட்டு வருவதாக பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர்.

## மீளக்குடியேற்ற நடவடிக்கை!

குடாநாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக கோப்பாய், இருவாலைப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற தங்கள் கையொப்பங்கள் இட்ட மகஜர் ஒன்றினை யாழ் இராணுவ கட்டளை தளபதிக்கும் யாழ் அரச அதிபருக்கும் வழங்கியிருந்த போதிலும், அவர்களுக்கான வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப் படாமலே இருக்கின்றது. இது தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு தற்சமயம் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை தலைவர் செய்து வரு கிறார்.

யுத்தம் நடைபெற்ற காலகட்டங்களினால் நெல் வயல்கள் பாதிப்பிலிருந்த நிலையிலும் அதைப்பார்வையிடவோ களைகளைப் பிடுங்கி நல்ல விளைச்சலை பெற்றுக் கொள்ளவோ அப்பகுதி மக்கள் முடியாதுள்ளார்கள். தென்மராட்சிப் பகுதியில் நடைபெறும் யுத்தத்திற்காக கோப்பாய்ப் பகுதி மக்களின் இடம் பெயர்வானது அர்த்தமற்ற ஒன்றாகவே இருக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் முக்கிய கவனம் எடுக்க வேண்டும் என்பதே அம்மக்களின் வேண்டுகோளாகும். ■

## விசாரணையின்றி சிறையில் வாடுவோர் தொகை அதிகரிப்பு!

பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகளில் பெரும்பாலானோர் யுத்த முனைகளில் கடமையாற்ற வேண்டியுள்ளதால் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் வழக்கு விசாரணைகள் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நீண்ட காலமாக ஏராளமான கைதிகள் எதுவித விசாரணைகளுமின்றியும் விடுதலையின்றியும் சிறைச்சாலைகளில் அடைப்பட்டுக்கிடக்கிறார்கள்.

விசாரணையின்றிச் சிறைகளில் வாடுவோரின் கதி குறித்து தேர்தல் காலங்களில் பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதும் பின்னர் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளோரில் சுமார் எட்டாயிரம் பேர் மீது மட்டுமே விளக்கமறியல் விசாரணையில் உள்ளார்கள்.

இருபதாயிரம் பேர் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள்.

## போலியோ தடுப்பு யுத்த நிறுத்தத்தில் தாக்குதல்

(நமது நிருபர்)

போலியோ வைரஸ் கிருமித் தொற்றை இல்லாதொழிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு யுனிசெப் ஸ்தாபனத்துடன் புலிகள் சில தினங்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை வழங்கியிருந்தனர். படையினரும் இதற்கு இணங்கியிருந்தனர்.

டிசம்பர் 2ம் திகதி போலியோ சொட்டு தடுப்பு மருந்து வழங்கும் தினமாகும்.

அன்றைய தினம் வடக்கிலும் கிழக்கிலும் தாக்குதல் சம்பவங்கள் ஓயாது இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடியில் கோயிலுக்கு முன்னாலுள்ள பொலிஸ் காவரணைநோக்கிப் புலிகள் சுட்டதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கோயிலில் வழிபாட்டுக்குச் சென்று கொண்டிருந்த எண்பது வயது முதியவரான கே.அழகையா மற்றும் என்.ஸ்ரீதரன் (45) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒரு பொதுமகன் காயமடைந்தார்.

டிசம்பர் 2ம் திகதி யாழ் குடாநாட்டில் உரும்பராய், நாகர்கோவில், முகமாலை ஆகிய பகுதிகளில் புலிகள் தாக்குதலைத் தொடுத்ததாகவும், அதில் படையினர் இருவர் பலியானதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்குவதாக ஒக்ரோபர் 27ம், 28ம் திகதி யுத்த நிறுத்த நாட்களில் புலிகள் எழுதுமட்டுவாள், நாகர்கோயில் பகுதிகளில் இராணுவ நிலைகள் மீது ஷெல் மற்றும் மோட்டார்கள் கொண்டு தாக்கியதில் எட்டுப் படையினர் பலியானது இங்கு குறிப்பிடத்தக்கது.

யுனிசெப் ஸ்தாபனத்துடன் செய்து கொண்டு போர் நிறுத்த உடன்பாட்டைப் புலிகளே மீறினர் என்று படையினர் குற்றஞ் சாட்டுகின்றனர். ■

## அபிவிருத்தி நிறுவனங்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி!

(நமது நிருபர்)

அரசு சாரா அபிவிருத்தி நிறுவனங்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நெறி சமீபத்தில் கொழும்பிலுள்ள வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டட நிலையத்தில் நடைபெற்றது.


21 நாட்களாக தொடர்ந்து இடம் பெற்ற இப்பயிற்சி நெறியில் நாடு பூராவிலிருந்தும் பல்வேறு பட்ட அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இலங்கை 'சக்ரா' (CHAKRA) வலைப்பின்னல் அமைப்பின் அனுசரணையுடன் இடம்பெற்ற இப்பயிற்சி நெறிகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி விஜயகௌரி பழனியப்பன், செல்வி ஜோதிலட்சுமி வீராசாமி ஆகியோர் நடாத்தினர். "அரசு சாரா நிறுவனங்கள் மக்களின் தேவைகளை சரியான முறையில் இனங்கண்டு அபிவிருத்திச் செயற் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தத்தமது நிறுவனங்களை நிலைத்து நிற்கக்கூடிய வகையில் ஆக்கிக் கொள்ளுவதற்கும் இப் பயிற்சிநெறி வாய்ப்பளிக்கும் என்று விரிவுரையாளர் ஜோதிலட்சுமி முரசுக்குத் தெரிவித்தார். ■

## பிளவுக்குள்ளான கூட்டணி அலுவலகம்!

யாழ் கூட்டணி அலுவலகத்துக்குள் பெரும் பிளவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இப்பிரச்சனையின் கருப்பொருளாக பதவி நிலையே காரணமாகவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக அக்கட்சியில் இரு சாராருக்கிடையில் ஏற்பட்டுள்ள இம்மோதல், கூட்டணி மேல் மட்டத்தைப் பெரும் அச்சத்துக்குள்ளாக்கியிருப்பதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.



**1வது பிறந்தநாள் வாழ்த்து**

## செல்வன் பிருந்தன் பாலகுமாரன் (09.12.2000)

பிரான்ஸ் (Saint ouen) இல் வசிக்கும் பாலகுமாரன் தர்ஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிருந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை (09.12.2000) அன்று தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

அம்மம்மாவின் செல்லக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, (London), மாமா, மாமி, மச்சான் (Canada). சித்தப்பா (France), மாமி, சித்தி, பூட்டா, பூட்டிமார், பாட்டாமார், பாட்டிமார், மாமாமார், சித்திமார், மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் முத்துமாரியம்மன் திருவருளால் பல்கலையும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : *அம்மம்மா* (Mrs. Inparajah)
96/3, College St.

# 'மரணமடையாத' அதிபர்!

ஐயா,

தங்களது நவம்பர் 12-18 திகதிய 'தினமுரசு' வாரப் பத்திரிகையில் 'அதிபர் மரணமடையவில்லை' எனும் தலைப்பிலான செய்தி எங்கள் வித்தியாலயத்தையே குறிப்பிடுகிறது. ஆகவே பின்வரும் மறுப்பறிக்கையை தங்கள் வாரப் பத்திரிகையில் உடன் பிரசுரிக்குமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் வித்தியாலய சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் மேற்படி செய்தியில் குறிப்பிடப்படும் பதிவுகள் எதுவும் இல்லை என்பதையும், அதிபர் ஒரு நாள் அதிபர் கூட்டத்திற்கு சென்றமை பற்றி, சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப் பட்டிருந்தது என்பதையும்; குறிப்பிட்ட செய்தியைத் தந்த காரைதீவு நிருபர் '500 மாணவர்கள் தரையில் கற்கும் பரிதாபம்' என 'வீரகேசரி' நாளேட்டில் பொய்யான செய்தியை எழுதியமைக்கு நான் மறுப்பு தெரிவித்த காரணத்திற்காக பழிவாங்கும் நோக்கத்தோடு இச் செய்தியை தங்களுக்கு அனுப்பி உள்ளார் என்பதைத் தயவாகத் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

(ஒப்பம்) **எம்.சரவணமுத்து**
அதிபர்
சது/அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயம்.

*உங்கள் பாடசாலை சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் 'அதிபர் மரணமடையவில்லை' என்ற சம்பவம் பற்றி நீங்கள் கவலைப்படுவதில் நியாயமில்லை. வேறு பாடசாலை ஒன்றில் நடைபெற்ற சம்பவத்தை காரைதீவு நிருபர் எழுதியிருக்கலாம் அல்லவா?*

**-ஆசிரியர்-**

# பதவி வெற்றிடங்களுக்கு நியமிக்க வேண்டுகோள்!

வடகிழக்கு மாகாண சபையினால் 1998 ஜூன் மாதத்தில் பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை நடைபெற்றது. இப்பரீட்சையில் 152 புள்ளி களுக்கு மேல் பெற்றவர்களுக்கு முதலில் மட்டக்களப்பில் பதவிகள் வழங்கப் பட்டன. பின்னர் வெட்டுப் புள்ளி 150 ஆக குறைக்கப்பட்டு மேலும் பதவிகள் வழங்கப்பட்டன.

இதில் பதவியேற்ற பலர் இடையில் வேறு பல வேலைகளுக்குச் சென்று விட்டனர். இன்னும் சிலர் பல்கலைக் கழகங்களிலும் சேர்ந்து படித்தனர். இதன் காரணமாக மட்டக்களப்பு அரச அலுவலகங்களில் ஏற்பட்ட வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப் படாமல் இருக்கின்றன.

இத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்படி வெட்டுப் புள்ளியில் சற்றுக்குறைத்து கணக்கிட்டு அப்பரீட்சையில் பங்கு பற்றிய பரீட்சார்த்திகளுக்கு பதவிகளை வழங்குமாறு வேண்டுகோள்களை, பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும், வடகிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ளனர்.

# தீவுப்பகுதிக்கு பஸ் சேவை

யாழ் நகருக்கு தீவுப்பகுதியிலிருந்து அன்றாடத் தேவைகளுக்காக வந்து செல்லும் மக்களுக்கு போதுமான பயண வசதிகள் இல்லாமையினால் துவிச்சக்கரவண்டிகளிலும் கால் நடையாகவும் பல சிரமங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டியுள்ளது.

நெடுந்தீவு, நைனாதீவு, அனலைதீவு, எழுவை தீவு, ஆகிய இடங்களிலிருந்து யாழ் நகருக்கு வரும் பயணிகளுக்கே அப்பயணக்கஷ்டம் ஏற்படுகிறது.

இவர்களுடைய பயணக்கஷ்டங்களை நீக்கும் முகமாக யாழ் மாவட்ட பா.உ.குணேந்திரன்(ஜெகன்) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக இ.போ.ச.வினர் தினமும் மூன்று தடவைகள் யாழ் நகருக்கான பஸ் சேவையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்ணகி அம்மன் கோயில் இறங்கு துறையிலிருந்து யாழ் நகருக்கு இந்த பஸ் வண்டி பயணிகளை ஏற்றிச் செல்லும்.


## கணினி வகுப்பு

பாலர் வகுப்பிலிருந்து தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு Pentium III கணினியில் பயிற்சியளிக்கப்படும்.

வயதெல்லை : நான்கிலிருந்து எட்டு வரை
கட்டணம் : மணித்தியாலத்திற்கு ரூ 125.

**Tulliyam Data Managements,**
31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka
Tp. 074-613486, 078-686996

Intel Pentium iii, 512 K, Cache, 128 MB RAM, 16 MB. Voodoo, AGP- VGA, 40 GB Hard Disk, 52x Audio Xcel Creative CD-ROM, 64 Bit Creative Sound Blaster Multimedia கணினியை Windows me. Windows 2000. Office 2000, Visual Studio 6, Corel DRAW 9, Page Maker 6.52, Photoshop 5.5, Illustrator 9, Autocad 2000, Java, Oracle 8i போன்ற மேலும் அதிநவீன மென் பொருட்களில் தனிப்பட்ட தேவைகளுக்காகவோ, பிறருக்குக் கற்பிப்பதற்காகவோ பயன்படுத்தலாம். **மணித்தியாலத்திற்கு ரூ 125/-**

T.D.M.

31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka
Tp. 074-613486, 078-686996



**தபால் மூலம் தையற் கலை** டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை பயிற்றுவிக்கப்படும். பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். பெண்களுக்கு மாத்திரமே பயிற்சி அளிக்கப்படும். இன்றே முத்திரை ஒட்டிய கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

**London School of Scientific Tailoring.**
Director : Mrs. Sithy Kamila Rafi, No.05. Upaly Place, Vihara Road, Matale. Telephone: 066-33783.


## இருதய சிகிச்சைக்கு உதவுக!



கொழும்பு முகத்துவாரம் பீரிஸ் ஒழுங்கை, 93/7, இலக்க இல்லத்தில் வசிக்கும், மட்டக்களப்பைச் சேர்ந்த, ஏ.குமுதினி (வயது 28) என்ற இரு பிள்ளைகளின் தாயாருக்கு அவசர இருதய சத்திர சிகிச்சை செய்வதற்கு ரூபா. 200,000/- தேவைப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவ மனையில் சத்திரசிகிச்சையை (Bypass Surgery) செய்வதற்கு நிதியுதவி புரியும் வண்ணம் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

நிதியுதவி செய்ய விரும்புவோர், ஏ.குமுதினி அலு.த்கடை Hatton National Bank இலக்கம் 0211264016 என்ற இலக்கத்திற்கு பணம் செலுத்துமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர்.


தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036



## சித்தர் மாந்திரீகம்
## —கவலை வேண்டாம்—

சோதிட, வைத்திய பரிகார, மாந்திரீகத் துறையில் ஏழு தலைமுறையின் நம்பகத்தன்மை இன்றும் வெற்றிகரமாக "கலாநிதி-சக்தி சரவணா"வினால் பேணப்படுவதால் உங்கள் பிரச்சனை எதுவாயினும் உடனடியாய் வெற்றிகரமான தீர்வுபெற ஒருதடவை தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்-தொழில் விருத்தி, திருமண-பிரயாணத் தடங்கல்கள் , பாலியல் குறைபாடுகள்; அந்தரங்கமான விடயங்களை தீர்வு காணுதல் என்பவற்றோடு; நினைத்த காரியம், ஜாதக பலன், எண் சோதிடம் முதலான சோதிட ஆலோசனை துல்லியமான முறையில் பெறலாம். வெளிநாட்டு அன்பர்கள் துரித சேவை மூலம் பலன் பெறலாம். அந்தரங்கம் பாதுகாக்கப்படும். நேரில்:- காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தொடர்பு:
"DR.SHAKTHY SARAVANA"
48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA.

வியாழன் விடுமுறை.

T.P 723646



## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் டிசம்பர் 24 முதல் 30 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street, No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கல்முனையில் டிசம்பர் 02, 03 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் டிசம்பர் 09, 10 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.


கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**



## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



உலகப் புகழ்பெற்ற
## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

# தீர்வுத் திட்டத்துக்கு மாற்றுத் திட்டம்

# ஆராய்கிறது அரசாங்கம்

எப்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்ற கேள்வியே இன்று இலங்கையின் இனப் பிரச்சனையில் ஈடுபாடுள்ள சகலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. புலிகள் தலை வர் பிரபாகரனின் மாவீரர் உரையில் தாம் நிபந்தனைகளின்றிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று தெரிவித்த கூற்றையடுத்து இந்த எதிர்பார்ப்பு பலமடங்கு அதிகரித்து விட்டது.

ஆனால் இதற்குப் பின்னாலும் பல தடைகள் உள்ளனவென்பதை சாதாரண பொதுமக்கள் உணர முடியாவிட்டாலும், அரசியல் நிபுணர்கள் உணர்வர். முக்கியமாக பிரபாகரனின் உரையில் தெரிவித்த பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளென்பன நிபந்தனைகளாகக் கொள்ளப்படக்கூடாதென அவரே தெரிவித்திருந்த போதிலும், அவை நிபந்தனைகளா இல்லையா என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

நிபந்தனை என்றால் என்ன என்பதை வரையறை செய்யுமிடத்தில்தான் இவ்வேறுபாடுகள் என்ன வகைப்பட்டவை என்பதை அனுமானிக்க முடியும். நிபந்தனையென்பது என்னவென்றால் ஒரு காரியம் நடப்பதானால் அதற்கு இன்னென்ன விடயங்கள் அமைந்தாக வேண்டும் என்று விதிக்கப்படும் அடிப்படைகளாகும். அதாவது வேறு வகையில் சொல்வதானால் இன்னென்ன விடயங்கள் அமையாவிட்டால் அக் காரியம் நடைபெறமாட்டாது என்று விதிக்கப்படும் விடயங்களே நிபந்தனைகள்.

அன்றாட வாழ்வை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது குறித்த விடயத்தில் அவை ஒரு தமிழ் அமைச்சுக்கு உரிய பணிகளாக அடையாளப் படுத்துகிறது.

எனவே இவ்விரு விடயங்களும் நிபந்தனைகளாக எழாதிருக்கச் செய்வது அல்லது இவைகுறித்து இருதரப்பும் உடன்படச் செய்வதே இத்தடைகளை மேவி பேச்சுவார்த்தைகளைச் சாத்தியப் படுத்தும். அது மத்தியஸ்தர்களான நோர்வேயின் சாமர்த்தியத்தைப் பொறுத்த விடயம்.

இதேவேளை புலகளின் இக் கூற்றுக்கள் குறித்து, அவை நிபந்தனைகளா எனத் தெளிவுபடுத்தும்படி பிரித்தானியா புலிகளிடம் கேட்டுள்ளது. அதேவேளை ஜனாதிபதி லண்டன் சென்றுள்ள இச் சந்தர்ப்பத்தில் அங்கு பிரித்தானியப் பிரதமருடன் நடத்திய சந்திப்பிலும் பேச்சுவார்த்தை பற்றி ஜனாபதிபதிக்கு வலியுறுத்தப் பட்டிருக்குமென நம்பப்படுகிறது. எவ் வகையிலும் இச் சந்தப்பத்தைப் பயன் படுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து விட வேண்டுமென்பது சர்வதேச சமூகத்தின் எண்ணமாகவுள்ளது.

இதேவேளையில்தான் இப்போது இந்தியாவின் புதியதொரு அரசியல் நகர்வு கவனத்தை ஈர்த்துள்ளது. அதுதான் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்தித் தரும்படி இப்போது மீண்டும் விடுத்துள்ள கோரிக்கையாகும். இப்படியான ஒரு கோரிக்கையை இலங்கை இனப்பிரச்சனைக்கு தானிக்க முடிகிறது.

இந்தப் பின்னணியில்தான் இந்தியாவின் தற்போதைய புதிய அரசியல் நகர்வான, பிரபாகரனை நாடுகடத்தும்படியான கோரிக்கையும் எழுந்துள்ளது. முன்னைய காங்கிரஸ் அரசாங்கம் ராஜீவ் காந்திகொலையின் குற்றவாளியென்ற தீர்ப்பின் அடிப்படையில் விடுத்திருந்த இக் கோரிக்கையை இப்போதைய இந்திய அரசாங்கம் அவசரமாகப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதே இங்கு ஆச்சரியகரமானதாக உள்ளது. அதுவும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பத்தில், அவ்வுரையில் பேச்சுவார்த்தைக்கான விருப்பத்தை அவர் வெளியிட்டிருந்த வேளையில், அது குறித்து பாராமுகமாக இருந்தபடி புலிகளுக்கு பெருத்த அசௌகரியத்தையும் அபகீர்த்தியையும் விளைவிக்கும் முகமாக இந்தக் கோரிக்கையை இந்தியா விடுத்திருக்கிறது.

புலிகள் தலைவரை நாடுகடத்தக் கோருவதானது அவரை ஒரு குற்றவாளியாகச் சித்தரிப்பதன் மூலம் இனப் பிரச்சனைக்கான தீர்விற்கான பேச்சுவார்த்தையில் புலிகளுக்குரிய அரசியல் அந்தஸ்தை மாசுபடுத்தும் வகைப் பட்டதாக அமைந்துள்ளது. இந்தியாவின் இம் முனைப்பையிட்டு இலங்கையின் சில தமிழ்க் கட்சிகளும் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்தியாவுக்கு இவ்வாறான ஒரு அநாகரிகத் தன்மைகொண்ட அரசியல் செயற்பாட்டில் விதித்துள்ள தடையை நீக்கவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து இந்தியாவை மத்தியஸ்த முனைப்பிலிருந்து பின்வாங்க வைத்தனர். புலிகளின் அண்மைய மாவீரர் தின உரையிலும் இந்தியாவின் மத்தியஸ்தத்துக்கு எவ்வித இடமும் வழங்கப்படவில்லை என்பதுடன் யாழ்ப்பாணச் சமரில் தமது இலக்கை வெற்றிகொள்ள விடாது இலங்கை அரசுக்கு உதவி வழங்கிய சர்வதேச நாடுகள் குறித்து வருத்தம் தெரிவித்தபோது, இந்தியாவையும் குறிப்பிட்டிருந்தனர்.

இதேவேளை இலங்கையின் பொதுத் தேர்தல் முடிவுகளின்பின் பேச்சுவார்த்தைகளைப் புதுப்பிக்கும் விரைந்த முயற்சியில நோர்வே அரசாங்கம் இறங்கியிருந்தது. அது, மீண்டும் யுத்த முனைப்புகளில் இருதரப்பும் தீவிரமாக கால் வைக்குமுன்னர் இப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளைத் திறந்து விடுவதில் அவசரமும் ஆர்வமும் காட்டியது. அதன் முயற்சியாலும் சர்வதேச நாடுகளின் அழுத்தத்தாலும், புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரையில் வெளிப்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கான விருப்பத்தாலும், இலங்கை அரசாங்கததுக்கு இவ்வழைப்பை நிராகரிக்க நியாயமான காரணங்கள் தென்படாமையாலும் ஏதே ஒரு விதத்தில் இப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் என்ற சூழ்நிலை தோன்றியுள்ளது.

இக் கட்டத்தில் இந்தியா தனது முக்கியத்துவத்தை சகல தரப்பினருக்கும் உணரச் இதற்கு சர்வதேச சமூகத்தின் முன் இப்பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதற்கு வலுவான நியாயங்கள் இல்லாத நிலை. அவ்வாறு நிராகரித்தால் அரசாங்கம்தான் சமாதானத்துக்குத் தடையாக உள்ளதென்ற அபிப்பிராயத்துக்கு ஆளாக நேரிடும். எனவே, தாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறிக்கொண்டு ஆனால் அப் பேச்சுவார்த்தையில் தீர்வு காணப்படுமென்று எந்த நம்பிக்கையுமற்ற நிலையில் இருக்கிறது இலங்கை அரசாங்கம்.

எனவே இப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதிற்குக் கூட சந்தேகங்கள் தலைதூக்கியிருந்தாலும் அது முறிவடையுமென்பதில் சந்தேகமற்ற நிலைதான் இப்போது காணப்படுகிறது. எனவே இப் பேச்சுவார்த்தையில் நம்பியிருக்காமல் மாற்று அரசியல் தீர்வொன்றை வகுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இதில் கடந்த அரசாங்கக் காலத்தில் முன்வைத்த தீர்வுத் திட்டங்களை இப்போது நிறைவேற்றுவதென்பது மிகவும் கடினமானதாக மாறிவிட்டது. அப்போது பாராளுமன்றத்தில் ஏதோ வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஈட்ட முடியுமென்று இருந்த நம்பிக்கைகூட இப்போது இல்லை. எனவேதான் புதிய வழிவகைபற்றி அரசாங்கம் ஆராயத் தலைப்பட்டுள்ளது.

இத் தருணத்தில்தான் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் பலத்தை சாதகமாக்கிக்கொண்டு ஈ.பி.டி.பி. தனது மூன்று கட்டத் திட்டத்தை முன்வைத்துள்ளது. அதன்படி முதற்கட்டத்தில் மாகாண சபையை மீண்டும் நடைமுறைப் படுத்துவது. இரண்டாவது கட்டத்தில் மாகாண சபைக்கு, அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்திலும் அது நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் இதுவரை உடன்பட்ட விடயங்களை பாரப்படுத்தி அதிகாரங்களை அதிகரிப்பது. இவ்விரு விடயங்களுக்கும் அரசியல் சட்ட மறுவரைவுக்குச் செல்லத் தேவையில்லையென்பதுடன் சாதாரண பெரும்பான்மையுடனேயே தீர்மானங்களை நிறைவேற்றக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் மாகாண சபைத் தீர்வை வகுத்து அமுலாக்கியவர்கள் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு இருக்கமாட்டாது. இவற்றுக்கு மேலதிகமாக மாகாணசபைக்கு சூத்திரதாரிகளாக விளங்கிய இந்தியாவின் ஆசீர்வாதமும் இத் திட்டத்துக்கு இருக்கும். இதனையடுத்து மூன்றாம் கட்டமாக, தீர்க்கப்படாத எஞ்சிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாணுவதற்கு புலிகளையும் உட்படுத்தி பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்பதே ஈ.பி.டி.பி.யால் முன்வைக்கப்பட்டிருக்கும் மூன்று கட்டத் தீர்வுத் திட்டம்.

இத் திட்டம் குறித்து ஆராயும் அரசாங்கம் இதன் முதற்கட்டத்துக்கு ஏற்கெனவே இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதியின் பாராளுமன்ற அங்குரார்ப்பண உரையில் தாம் வடக்கு-கிழக்குக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த முடிவெடுத்துள்ளதாக அறிவித்திருந்தார்.

எனினும் இத்தகைய திட்டம் அதன் பாதிக் கட்டம்வரை செல்ல முடியுமாக இருந்தாலும் முழுமையாக நிறைவேறுமா என்பதில் சந்தேகங்கள் உள்ளன. ஆயினும் அரசாங்கத்துக்கு தனது தீர்வுத் திட்டத்தைப் பற்றி திரும்பவும் நம்பிக்கை தெரிவிக்க முடியாத நிலையில் ஏதாவது மாற்றுத் திட்டத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் உண்டு.

அத்தோடு அரசாங்கத்தில் கூட்டுப் பங்கு வகிக்கும் கட்சி என்ற வகையில் ஈ.பி.டி.பி.யின் ஆலோசனைகள் குறித்து செவிமடுக்க வேண்டிய நிலையிலும் அது உள்ளது. எனவே புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் சாத்தியப்படாது போனாலோ, அல்லது அப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காண முடியாது போனாலோ, அடுத்து இறங்குவதற்கான ஏற்பாடாக இத் திட்டத்தை அடியொட்டிய வழிவகைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

ஒரு விடயத்தை ஏதேனும் ஒரு காரியத்துக்கான நிபந்தனையா இல்லையா என்று தீர்மானிப்பதாயின் அவ் விடயம் நிகழாவிட்டாலும், அக் காரியம் நடைபெற முடியுமானால் அது நிபந்தனையே. அவ்விடயம் நிகழாவிட்டாலும் அக்காரியம் நடைபெற முடியுமானால் அது நிபந்தனையல்ல.

பேச்சுவார்த்தை குறித்து புலிகள் தலைவர் பிரபாகரனின் உரையில் நல்லெண்ணப் புறநிலை இயல்பு நிலை ஆகியவை பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமானவையெனத் தெரிவித்திருந்தார். நல்லெண்ணப் புறநிலையென்பது யுத்த நிறுத்தத்துடன் கூடிய அமைதி நிலையாகவும் இயல்பு நிலையென்பது, பொருளாதாரத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் நீங்கிய நிலைமையாகவும் அவரது விளக்கம் புரிய வைக்கிறது. இத்தகைய நிலமைகள் தோன்றாதவிடத்தில் பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லையென்ற நிலைப்பாட்டை அவர் வலியுறுத்துவதானால் அவை நிபந்தனைகளாக மாறுகின்றன. அவ்வாறின்றி இவ் விடயத்தை நல்ல நோக்குடன் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி மட்டும் எதிர்த் தரப்புக்கும் மத்தியஸ்தர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறி, அவை குறித்த முடிவுகளில் தங்கியிராது பேச்சுவார்த்தைக்கு முன்வரத் தயாராக இருப்பாராயின் அவை நிபந்தனைகளாக அமையாது. எனினும் யுத்தம் நிகழும் போது பேச்சுவார்தைகள் சாத்தியமில்லையென அவர் அவ்வுரையில் குறிப்பிட்டிருப்பது யுத்த நிறுத்தத்தை நிபந்தனையாக வலியுறுத்துகிறதா என்ற ஐயத்தை தோற்றுவித்திருந்தது. எவ்வாறாயினும் புலிகள் தலைவர் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகத் தெரிவித்த இவ் விடயங்கள் மக்களின் நலன்களை முன்னிறுத்துபவையாக அமைந்திருப்பதால் அவற்றை மறுதரப்பும் ஏற்றுக் கொண்டால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம்.

ஆனால் அரசாங்க தரப்பில் இவை குறித்து வேறு விதமான கருத்துக்களே நிலவுகின்றன. அதாவது யுத்த நிறுத்தமென்பதைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கான கால அவகாசமாகவே பயன்படுத்துவர் என்ற சந்தேகம் அவர்களிடையே நிலவுகிறது. எனவே யுத்தத்தை நிறுத்தாமலே பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டுமென்பதே அவர்களின் கருத்தாக உள்ளது. இதைவிட, பொருளாதாரத் தடைகளை நீக்கி மக்களின் அரசியல் தீர்வு காணும் நோக்கில் புலிகளுடனான பேச்சுவார்த்தை முயற்சி பயனளிக்கக் கூடும் என்று யாவரும் எதிர்பார்த்திருந்த தருணத்தில் இத்தகைய அறிவித்தலை இந்தியா விடுத்துள்ளது.

இதன் நோக்கம் என்னவென்பதும் இது இப் பேச்சுவார்த்தையில் என்ன பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது என்பதும் இப்போதுள்ள கேள்விகள். இந்தியாவின் இந்த அறிவிப்பானது தற்போது இந்திய அரசாங்கம் புலிகள் தொடர்பாக மென்போக்குக் கொண்ட நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதாக நம்பப்பட்ட கருத்துக்களையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்தியாவின் தற்போதைய இந்திய அரசாங்கம் முன்னைய இந்திரா காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரானதென்றும், அதனால் புலிகள் தொடர்பாக சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருக்குமெனவும் பலர் நம்பினர். இதற்கு தற்போதைய பி.ஜே.பி. அரசாங்கம் இந்து அடிப்படைவாதிகளது செல்வாக்கினுள் கட்டுண்டு கிடப்பதால், சிங்கள அரசாங்கத்துக்கு எதிரான போக்கே அங்கு முதன்மை வாய்ந்ததாக நிற்குமென சிலர் பாமரத்தனமாக நம்பியிருந்தனர். அத்தோடு இந்த அரசாங்கம் கூட்டரசாங்கம் அமைந்திருக்கும் தென்னிந்தியக் கட்சிகளான வை.கோபாலசாமியின் மறுமலர்ச்சிக் கழகம், எஸ்.ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போன்ற தீவிர புலி ஆதரவுக் கட்சிகளின் அழுத்தம் காரணமாக இந்திய அரசாங்கம் புலிகளுக்குச் சார்பாக இயங்குமெனவும் சிலர் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான முடிவுகளை மட்டுமல்ல, உள்நாட்டிலும், புலிகள் மீதான தடையை நீக்குவது, ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனையிலிருந்து மன்னிப்பளிப்பது போன்ற விடயங்களைத் தன்னும் சாதிக்க முடியவில்லை. மாறாக மத்திய அரசாங்கத்தின் முடிவுகளை அனுசரிப்பவர்களாகவே தம்மைப் பேணி வருகிறார்கள். இதே போல் தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதியும் ஐ.பி.கே.எஃப். காலத்தில் புலிகளுக்கான ஆதரவாகச் செயற்பட்ட நிலையிலிருந்து மிகவும் பின்வாங்கிவிட்டார். அவரது அண்மைக்காலக் கருத்துகள் புலிகளை அங்கீகரிக்க மறுப்பவையாக அமைந்திருப்பதை அவ இறங்கவேண்டிய அளவுக்கு என்ன அவசியம் விளைந்துள்ளது என்பதை இங்கு எடுத்துப் பார்க்கவேண்டிய விடயமாகிறது.

இலங்கைப் பிரச்சனையில் தனக்கே முதல் உரிமை உள்ளதாக உணரும் நாடு இந்தியா. இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுத்தது முதல் இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகள் யாவற்றிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் முக்கிய பங்காற்றி வந்தது இந்தியாவே. இறுதியாக இந்திய இலங்கை ஒப்பந் தத்தின் மூலம் இலங்கையின் யாப்பில் திருத்தம் செய்வித்து, அரசியல் தீர்வொன்றை வகுத்ததோடு அதை நடைமுறைப்படுத்த தனது படைகளையே நேரடியாக அனுப்பியும் முயன்றது.

ஆயினும் இந்தியா புலிகளாலும் அன்றைய பிரேமதாஸா அரசாங்கத்தாலும் நிராகரிக்கப்பட்டு பின்வாங்க நேர்ந்தது. அந்த அவமானத்தின் பின்னர் நிகழ்ந்த ராஜீவ் காந்தி படுகொலை பிரிவினைப் போராட்டம் தொடர்பான எதிர் நிலைக்கு அதனைத் தள்ளிவிட்டது.

எனினும் இவ் வனுபவங்களைத் தொடர்ந்து இந்தியா இலங்கையின் இனப்பிரச்சனையில் விலகியே நின்றுகொண்டது. இப்படியான இடைவெளி மெதுவாக சர்வதேச நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சனையில் ஈடுபாடு காட்டுவதற்குத் தலைப்பட வழி சமைத்தது. சர்வதேச நாடுகளின் தலையீடு படிப்படியாக அதிகரித்து, இறுதியில் பேச்சுவார்த்தைக்கான மத்தியஸ்தர்களாக நோர்வே நாட்டை உருவாக்கும் அளவுக்குச் சென்று விட்டது.

இதுகுறித்து இந்தியா வெளிப்படையாக எதிர்ப்பேதும் காட்டாவிட்டாலும், அண்டை நாடான தான் மத்தியஸ்தராக ஏற்றுக் கொள்ளப்படாத அளவுக்கு நிராகரிக்கப் பட்டுள்ளதான உள்ளுணர்வைக் கொண்டதாகவே இருக்கும். இதற்கு பிரதானமான ஒரு காரணியாக புலிகள் தமது மத்தியஸ்தத்தை அங்கீகரிக்க மறுத்து வருவது அதற்கு உள்ளூர வெறுப்பளிப்பதாகவே இருந்து வந்தது. அண்மையில் யாழ்ப்பாணத்தின் மீதான புலிகளின் தாக்குதலின்போது, இலங்கைக்கு ஏற்பட்ட இக்கட்டான கட்டத்திலும் இந்தியா இருதரப்பும் அழைப்பு விடுத்தால் தான் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று கூறிப் பார்த்தது. ஆனால் அதற்கு புலிகள் மசிய வில்லை. மாறாக இந்தியா புலிகள் மீது செய்ய வேண்டுமென்ற நோக்கிலேயே இந் நாடுகடத்தல் கோரிக்கையை மீண்டும் பூதாகரப் படுத்த விழைந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனையில் இந்தியா தன்வசம் சில பிடிமானங்களை வைத்துக்கொண்டுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் இந்தியாவுக்கு உள்ள கடப்பாட்டை அது ஒருபோதும் கைவிட்டுவிட்டதாகக் கூறியிருக்கவில்லை. அத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுரீதியான பிணைப்பானது இப் பிரச்சனையில் தலையிடுவதற்கு தனக்கு தார்மீக உரிமையொன்றை வழங்குவதாகவும் அது காட்டிக் கொள்கிறது. மேலும் தென்னிந்தியாவிலுள்ள, இன்னும் வந்து சேர்ந்துகொண்டிருக்கும் இலங்கை அகதிகள் குறித்த அக்கறையும் தனக்கு உண்டெனக் கூறிக் கொள்கிறது. இவற்றைவிட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிகழும் அரசியல் மாற்றங்கள் தனது நாட்டின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நலனில் சம்பந்தப்பட்டவையென அது சாதித்து வருகிறது. இவற்றுக்கு மேலதிகமாக அது தனது நாட்டில் புலிகளைத் தடை செய்திருப்பதும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலிகள் தலைவரை தனது நாட்டின்

**நரன்**

குற்றவாளியாகத் தீர்ப்பளித்திருப்பதும், அத் தீர்ப்பினடிப்படையில் அவரை நாடு கடத்தும்படி இலங்கையிடம் கோரியிருப்பதும் இப் பிரச்சனையில் தனது பிடிமானத்தை எப்போதும் இறுக்கிக் கொள்வதற்கான ஏற்பாடாகவே அமைந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் தருணத்தில் இந்தியா இந்த முட்டுக்கட்டையை முன்னே தள்ளியிருப்பதானது "என்னை மிஞ்சி நீங்கள் அதிக தூரம் சென்று விட முடியாது!" என்பதற்கான உணர்த்தலாகவே புலப்படுகிறது.

இந்தச் செய்தியுடன் ஆரம்பிக்கும் பேச்சுவார்த்தையில் எந்த நேரமும் இந்தியா தனது ஆதிக்கத்தைச் செலுத்தலாம் என்ற எண்ணம் நோக்கர்கள் மத்தியில் தலைதூக்கியுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கமும் இப் பேச்சுவார்த்தையில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாகக் காணப்படவில்லை.

## செய்திச் சிதறல்

✿ யாழ். ஆயர் அருள் திரு.தோமஸ் சௌந்தரநாயகம் கடந்த வாரம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்து விட்டு, கொழும்பு வந்திருக்கிறார். சமாதான பேச்சு வார்த்தைத் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அடிகளார் பிரபாகரனிடம் எடுத்து விளக்கியதாகவும் பிரபாகரனுடைய நிலைப்பாட்டை அறிந்து கொண்டு அவர் வன்னியிலிருந்து கொழும்பு வந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் மிக விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் விரைவில் முன்னெடுக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

✿ அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளைக் கண்டிக்கும் முகமாக நாடெங்கணும் அரசாங்க எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு ஐ.தேசிய கட்சி தீர் மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. அண்மையில் கண்டி மாநகரில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இதேவேளை அரசாங்கத்தை எதிர்த்து ஜே.வி.பி.யினரும் நாடுதழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக அக் கட்சி அறிவித்திருக்கிறது.

✿ கடந்த 13 வருடங்களாக சென்னை நகரில் தங்கியிருந்த ஈழவேந்தன் கடந்த 4ம் திகதியன்று திங்கட்கிழமை இந்திய குடிவரவு அதிகாரிகளால் நாடுகடத்தப் பட்டு, இலங்கை வந்து சேர்ந்துள்ளார், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் கால உறுப்பினரான எம்.கனகேந்திரன் என்ற ஈழவேந்தன், மத்திய வங்கியில் மொழிபெயர்ப்பாளராகக் கடமை பார்த்தவர். பின்னர் கட்சியிலிருந்து விலகி தமிழர் விடுதலைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி பல வருடங்கள் செயற்பட்டார். சென்னையிலிருக்கும்போது, முன்னாள் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் கோவை மகேசன், முன்னாள் யாழ் மேயர் டாக்டர் தருமலிங்கம் ஆகியோருடன் இணைந்து பணிபுரிந்தார். இவருடைய புத்திரிகள் இருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய குடிமக்கள் இருவரையே திருமணம் செய்துள்ளனர். ஈழவேந்தன் தமிழ்நாட்டில் புலிகள் இயக்கம் சார்பாக பகிரங்கமாகவே செயற்பட்டமையினால் இவர் நாடுகடத்தப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

✿ படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா சிறிரங்கநாதன் கடந்த திங்கட்கிழமையன்று விடுதலை செய்யப்பட்டார். இவர் கைது செய்யப் பட்டதைத் தொடர்ந்து தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்தனர்.

# அண்டை மண்டலத்தில்....

## தமிழிசையின் அவல நிலை - திரு ஆரூரான்

'என்னை நன்றாகப் படைத்தனன் இறைவன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்கிறார் திருமூலர். 'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்று இசையை முன்னிறுத்துகிறார் திருநாவுக்கரசர். இறைவனே இசை வடிவானவன். கையில் உடுக்கையும் ஆடிய பாதமுமாய் அம்பலத்தில் ஆடுகின்ற சிதம்பரநாதன் தமிழர்களின் கலைவடிவின் வெளிப்பாடு.

ஆனால் இன்றைய தமிழகத்தின் நிலைமை என்ன? ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்படவில்லையென்றாலும் தமிழகத்தின் தமிழிசைக்கு முதலிடம் இல்லை என்பது நிதர்சனமான உண்மை. இதைச் சொல்லும்போது சமீபத்தில் நான் எதிர்கொண்ட மூன்று சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. இந்த மூன்று தனித்தனி நிகழ்வுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

முதல் சம்பவம்–முதல்வர் கருணாநிதி தெரிவித்தது. "மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் அறையில் 24 மணிநேரமும் நாகசுர இசை ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்றார்."

இரண்டாவது சம்பவம்–முன்னேறி வரும் ஒருதவில் வித்வான் என்னிடம் கூறியது. இந்த டிசம்பர் சீசனில் இதுவரை எந்தக் கச்சேரிக்கும் அவர் அழைக்கப்படவில்லை. தற்போது ஏதாவது அழைப்பு வந்திருக்கலாம்.

மூன்றாவது ஓர் இளம் வயலின் கலைஞர் தெரிவித்தது. முன்னணி கலைஞர்களுக்குப் பக்கவாத்தியம் வாசிக்கும் அவருக்கு டிசம்பரில் உட்கார இடம் இல்லாத அளவுக்கு கச்சேரிகள் புக் ஆகிவிட்டன. வெளிநாட்டில் இருந்து இறக்குமதியான இந்த வாத்தியம் சக்கைப்போடு போடுகிறது.

இந்த மூன்று நிகழ்வுகளும் எதைத் தெரிவிக்கின்றன? தமிழகத்தில் மிகப் பெரிய செல்வாக்குப் படைத்த அதிகாரத்தில் உள்ள ஒருவர் நாகசுர ரசிகராக இருக்கிறார். இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. ஏனெனில் அவர் இசை வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் தமிழகத்தின் பாரம்பரிய இசையான நாகசுரத்தையும் தவிலையும் சீந்துவாரில்லை. இசைவிழா தொடக்க நிகழ்ச்சியின் போது வாசிக்கப்படும் மங்கள வாத்தியமாகத்தான் நாகசுரம் இன்று உலவி வந்து கொண்டிருக்கிறது. முழு நேரக் கச்சேரி என்பதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாது கோவில்களில் சுவாமி புறப்பாட்டின் போது வாசிக்கப்படுகிறது. மற்றபடி திருமண நிகழ்ச்சிகளில் ஓர் ஓரமாக அமர்ந்து கெட்டி மேளம் வாசிக்கும் நிலை.

நகசுரத்துக்கு சென்னையில் உள்ள சபாக்கள் அளிக்கும் கௌரவம் சொல்லி மாளாது. மியூசிக் அகாதெமி என்று அழைக்கப்படும் சங்கீத வித்வத் சபை (பெயரில் கூட தமிழ் கிடையாது) உள்பட எல்லாவற்றிலும் நிகழ்ச்சிகள் எல்லாமே ஆங்கிலமயம். அரைகுறை ஆங்கிலத்தில் இந்த சபைகளில் உள்ள சிற்றுண்டி விடுதிகளில் மசால் தோசையையும் பஜ்ஜிகளையும் கபளீகரம் செய்யும் கூட்டத்தைக் காணக் கண்கோடி வேண்டும்.

ஏதோ போனால் போகிறது என்று சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு நாகசுர வித்வான் ஷேக்சின்ன மௌலானாவுக்கு சங்கீத கலாநிதி விருதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கினார்கள். அடுத்த ஆண்டில் அவர் இந்த உலகத்தை விட்டே போய் விட்டார். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த வித்வத் சபையில் இதுவரை மூன்று நாகசுர வித்வான்களுக்குத்தான் சங்கீத கலாநிதி விருது வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளைக்கோ. காருக்குறிச்சி அருணா, சலத்திற்கோ, அவர்கள் வாழ்ந்த காலத்தில் விருது அளிக்கவேண்டும் என்று இவர்கள் கருதியதில்லை. ஆனால் இப்போதும் மேடைதோறும் ராஜரத்தினத்தின் தோடி வாசிப்பையும் அருணாசலத்தின் கரகரப் பிரியா ஆலாபனையையும் சிலாகித்துப் பேசுகின்றனர். இறந்தபின் அரியணை ஏற்றும் கலாசாரம் தமிழகத்துக்குப் புதிதல்லவே?

இங்கே தொடக்கத்தில் முரசொலி மாறனைப் பற்றி குறிப்பிட்டது, அவரைக் குற்றம் சொல்லும் நோக்கத்தில் அல்ல. ஏனெனில் இன்று இசையும் நாட்டியமும் தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சொத்து என்ற அளவுக்கு மாறிப்போய் விட்டது. தமிழை முன்னிறுத்தி இந்த மாநிலத்தில் அதிகாரத்துக்கு திராவிட இயக்கத்தினர் தமிழிசைக்கும் தமிழ் கலாசாரத்துக்கும் மிகப்பெரியப் பங்கை அளித்திருக்க முடியும். ஆனால் அந்த இயக்கத் தலைவர்களுக்கு சினிமா வசனம் எழுதவே நேரம் சரியாக இருந்தது.

முதல்வர் கருணாநிதியும் தான் பங்கேற்கும் இசை விழாக்கூட்டங்களில் எல்லாம் நாகசுரத்தின் பெருமையை எடுத்துரைக்காமல் இல்லை. தமிழகம் முழுவதும் இசைப்பள்ளிகளும் கல்லூரிகளும் தமிழக அரசால் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் அது போதுமா என்றால் போதாது. இன்று சென்னையில் 30க்கும் மேற் பட்ட இசை சபைகள் உள்ளன. ஆனால் தமிழிசைக்கென்று இருப்பது ஒன்றுதான். ராஜா அண்ணாமலை மன்றத்தில் உள்ள தமிழிசைச் சங்கத்தில் எல்லாக் கச்சேரி களுமே தமிழில்தான் இருக்கும். மற்ற இடங்களில் எல்லாம் சுந்தரத் தெலுங்குக் கும் சம்ஸ்கிருதத்துக்கும் இடையில் அவ்வப் போது தமிழ் எட்டிப்பார்க்கும். தமிழில் பாடினாலும் உச்சரிப்பில் சம்ஸ்கிருதம் கொடிகட்டிப் பறக்கும். சதானந்தத் தாண்டவம் செய்யும் என்ற பாடலை ஷதானந்த தாண்டவம் என்று உச்சரிப்பார்கள். சிவ சிவ என்ற பாடலை ஜிவ ஜிவ என்று செம்மங்குடி சீனிவாசய்யர் பாடியதை கல்கி கேலி செய்து விமர்சித்திருக்கிறார். ஆறுதலான ஒரு விஷயம் என்னவென்றால், துக்கடா என்ற பெயரில் நிறைய தமிழ்ப் பாடல்களைப் பாடுவார்கள். தமிழ் இசையை விட்டு விடுங்கள். சினிமாவில் கூட ஆங்கிலம் கலந்து எழுதிய பாடல்களைத்தான் தமிழ் அடலேறுகள் முணுமுணுக்கிறார்கள்.

ஏன் இந்த நிலை? ராஜாஜியும் கல்கியும் அண்ணாமலைச் செட்டியாரும் டி.கே.சிதம்பரநாத முதலியாரும், நடத்திய தமிழிசை இயக்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. மாறாக ஒரு பிரிவினர் தெலுங்கில் பாடுபவர்களை வசைபாடுவதில் காலத்தை ஓட்டினார்களேயொழிய ஆக்கபூர்வமாக தமிழிசையைப் பரப்ப எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இன்று தமிழிசையைப்பற்றிப் பேசுபவர்கள் செய்ய மறந்தது என்ன?

தமிழகத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம் என்ற ஒரு நக்சலைட் அமைப்பு இருக்கிறது. இவர்கள் தமிழின விடுதலை பற்றியும் பேசுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு திருவையாறு தியாகராஜர் உற்சவத்தின் போது கும்பலாகச் சென்று தமிழில் பாடு, தமிழில் பாடு என்று கூக்குரல் எழுப்பினார்கள்.

முன்னர் ஒரு முறை இசை முரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர் அந்த மேடையில் பாடி முடித்த பிறகு, அவர் அமர்ந்திருந்த இடத்தைக் கழுவி சுத்தம் செய்தனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

தேசிகருக்கு ஏற்பட்ட அவமானம் கண்டிக்கத்தக்கது. ஆனால் தியாகராஜர் என்ன செய்வார். அவர் ஒரு தெலுங்கு பிராமணர். அவர் தன்னுடைய தாய் மொழியில் கீர்தனை பாடியுள்ளார். அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியில் தமிழில் பாடு என்றால் எப்படி?

மாறாக இந்த கலை இலக்கியக் கழகம் செய்திருக்க வேண்டியது என்ன? தியாகராஜர் உற்சவத்தைப் போல் தமிழ் மூவர்களான மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர், முத்து தாண்டவர் ஆகியோருக்கு உற்சவம் நடத்த முயற்சித்திருக்க வேண்டும். தேவார விழா நடத்தியிருக்கலாம். கோபாலகிருஷ்ண பாரதியாருக்கும் பாபநாசம் சிவனுக்கும் ஆண்டு தோறும் விழா எடுத்திருக்கலாம்.

அற்புதமான கர்நாடக இசைப்பாடல்களுக்கு தமிழில் பஞ்சமா என்ன? சிவன் பிரம்படிபட்டது, கற்களால் அர்ச்சிப்பட்டது போன்ற கதைகளை எடுத்துக் கூறி, 'தந்தை தாய் இருந்தால் உலகத்தில் உமக்கு இந்தத் தாழ்வெல்லாம் வருமோ அய்யா' என்று கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பாடல் கேட்போர் நெஞ்சத்தை உருக்குமே, சுத்த நாத்திகர்கள் கூட இசையில் ஆர்வமும் உடையவர்களாக இருப்பின் அத்தகைய தமிழ் பாடல்களில் தங்களையே இழந்துவிடுவர்.

ஆனால் கலை இலக்கிய கழகத்தார்க்கு கடவுள் நம்பிக்கையும் இல்லை. இசை கேட்கவும் நேரம் கிடையாது. எதையாவது எதிர்க்க வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, மாற்றாக ஒன்றை உருவாக்க இவர்கள் என்றுமே முனைந்ததில்லை. ஆனால் இது அவர்களுக்கு மட்டுமல்ல தமிழிசைக்காக குரல் கொடுக்கும் எல்லோருக்குமே பொருந்தும்.

இன்று டிசம்பர் சென்னை முழுவதும் மூலைக்கு மூலை சபைகள். ஆனால் தமிழிசைதான் சீந்துவாரற்றுக் கிடக்கிறது. தமிழிசைக்கு புத்துணர்ச்சி கொடுக்க விரும்பியவர்கள் செய்ய வேண்டியது–முதலில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது. தமிழிசை இயக்கம்தான் மக்கள் செல்வாக்கை அதற்கு பெற்றுத் தந்தாக வேண்டும், தமிழனின் பொழுது போக்கு அம்சமாக இன்று சினிமாவும் சின்னத்திரையும் மாறிவிட்ட இக்கால கட்டத்தில் தமிழிசைக்கென ஒரு இடம் பெற்றுத்தர பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளது.

இயந்திர கதியில் இயங்கும் இன்றைய உலகில் புத்தகம் படிக்கவும், இசையைக் கேட்கவும் பிராமணர்களால் எப்படியோ நேரம் ஒதுக்க முடிகிறது. இதை மற்றவர்கள் பின்பற்றினாலொழிய தமிழிசையை ஈடேற்ற முடியாது. சரக்கை விற்க வேண்டுமானால் முதலில் நுகர்வோரைக் கண்டறிந்தே ஆக வேண்டும். இந்த வியாபாரக் கணக்கு இசைக்கும் பொருந்தும்.

தமிழ்மொழியின் பாதுகாவலர்களாகவும் உலகத் தமிழர்களின் ஒரே தலைவர்களாகவும் தங்களை வரித்துக் கொள்பவர்கள் உண்மையிலேயே அதில் அக்கறைக் கொண்டவர்களாக இருந்தால், தமிழிசைக்கான மக்கள் இயக்கத்தை நடத்தியாக வேண்டும். வீராவேசப் பேச்சுக்களும் வசைமாறிகளும் எப்பயனையும் தராது. ■



## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

அண்மையில் இராணுவத்தில் சேரவிடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்தமைக்கான பாராட்டுதலை முஸ்லிம் சமூகம் பெற்றுள்ளது.

புலிகள் மட்டக்களப்பு-அம்பாறை அரசியல் தலைமைப்பீடம் விட்ட அறிக்கையைத்தான் குறிப்பிடுகின்றேன்.

புலிகளை இராணுவரீதியில் அடக்குவதற்கு ஆளணிப் பற்றாக்குறையே காரணம் என்பதனால் பள்ளிவாசல் படுகொலைகள் முதல் பையதுல்லா கொலை வரை பட்டியலிட்டு "பாசிசபுலிகளை பழிவாங்க எம் பாசறைக்குள் வாருங்கள்" என இராணுவத்தினர் வினியோகித்த பிரசுரங்களுக்கு விலைபோகாததற்கே இந்தப் பாராட்டை முஸ்லிம் சமூகம் புலிகளிடம் பெற்றுள்ளது.

ஆண்டாண்டு காலமாக அண்ணன் தம்பியாக; சொந்தங்களாக; பிட்டு மாவும் தேங்காய்ப் பூவுமாக கலந்து வாழ்ந்த இரண்டு சமூகங்களும் இஸ்ரவேல் நலன் பிரிவின் வருகையால் 'ஊர் இரண்டு பட்டு கூத்தாடிக்கு கொண்டாட்ட'மாகிய நிகழ்ச்சியை காரைதீவு கிராமம் சூறையாடப்பட்டபோதும் பின் பதிலடியாகவென கூறி காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையிலும் கண்டு வேதனைப்பட்ட நிகழ்வுகளை நினைவு கூருகின்றேன். சொந்தச் சகோதரர்கள் போல் வாழ்ந்தவர்கள் செத்து மடிதலும், சொத்துக்கள் அழிதலும் சொல்லொணாத் துயரத்தை தந்த காலமது.

தொடர் நிகழ்வாக 'பனையில் அடித்தால் தென்னையில் நெறிபோடுவது' போல வடமாகாண முஸ்லிம் மக்கள் ஆண்டாண்டுகாலமாக தாம் வாழ்ந்த சொந்த மண்ணைவிட்டு, தம் சொத்துக்களை விட்டு விரட்டியடிக்கப்பட்ட நிகழ்வானது இன்று ஒரு தசாப்தத்தைக் கடந்து விட்டது.

இன்றுவரை அவர்களின் ஏக்கங்கள் தீர்க்கப்படவில்லை. எந்த மந்தையிலும் கறுப்பு ஆடுகள் இருக்கத்தான் செய்யும். அதற்காக மந்தையையே நாம் மாற்றுக் கண் கொண்டு நோக்கலாமா?

ஒவ்வொரு செயலுக்கும் எதிர்செயல் உண்டு என்ற தத்துவத்தையே மறுதலித்து செயல்பட்ட முஸ்லிம் மக்களின் செயல்பாடு பாராட்டத்தக்கது. பழிக்குப் பழி எனப் புறப்பட்டு எடுப்பார்கைப் பிள்ளையாகாது தங்கள் இருப்பு நிலையை சுய கௌரவத்துடன் பெற்றுக் கொள்ள விளையும் அவர்களின் நோக்கம் நேர்மையானது.

அதற்கான பதிலை பெற 10 வருடங்களுக்கு மேல் காத்திருக்கும் அவர்களுக்கு காத்திரமான பதில் இன்னமும் கிடைக்கவில்லையே.

படையணியில் சேரவில்லை என்பதற்கான பாராட்டுமட்டும் அவர்களின் நாளாந்த பிரச்சனைக்கான விடையாகி விடமுடியாது.

'யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே சொந்தம்,' என்ற மாவீரர்தின உரையில் உறுதியுடன் கூறப்பட்ட விடயம், அங்கிருந்து அகற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம் மக்களுக்கும் பொருந்துமல்லவா?

என்னை அடக்க நினைப்பவனை எதிர்க்கும் உரிமை எனக்கு இருப்பது போல் என்னோடு வாழ்ந்த என் சகோதரனின் சுதந்திரத்தைப் பறிக்கும் உரிமை எனக்கு இல்லையல்லவா?

சுமுகமான சூழ்நிலைதான் யுத்த நிறுத்தத்தையும், நிரந்தர சமாதானத்தையும் கொண்டு வருமென்றால் சுமூகமான சூழ்நிலை கடந்த 10 வருடங்களாக நல்லபதிலுக்காக காத்திருக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்படவேண்டும்.

படையணியில் இணையாதவரை அவர்கள் தம்மை தக்கவைத்துக் கொண்டதற்கான பாராட்டு மட்டுமல்ல, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஒன்றாக வாழ்த்தவர்கள் இன்று இடம் பெயர்ந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாக இன்னல் படும் நிலைக்கும் மாற்றீடு செய்யப்படல் வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றாதலே எம் சொந்தங்களை வலுப்படுத்தும். அனைவரின் தாகமும் ஒன்றுபட்டு உரிமைகளைப் பெறுவது தான். ■

~குத்தியன்~

# அலசுவது - இராஜதந்திரி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இத்தடவை மாவீரர் வார உரை பல்வேறு விதத்திலும் அரசியல் முக்கியத்துவம் மிக்கதாகவே அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வு சமரச முயற்சிகள் பற்றியப் பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இத்தருணத்தில் திரு.பிரபாகரன் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் வன்னிப் பிரதேசத்தில் நோர்வே விஷேட பிரதிநிதி திரு எரிக் சொல்ஹெய்ம் எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்புப் பற்றிய விபரங்களை வெளியிட திரு.சொல்ஹெய்ம் மறுத்திருந்தார். இருந்தபோதிலும் மாவீரர்

குறிப்பாக மேற்குலக நாடுகள் பலவற்றின் ஒத்தாசையுடன் நோர்[illegible]க இனப்பிரச்சனை தீர்வு [illegible] ஆரம்பித்துள்ள சமரச முயற்சி; ஒரு நல்ல பலனைக் கொண்டுவரவேண்டுமென்பதே இலங்கையர்கள் பலரினதும், எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் திரு.பிரபாகரன் நிகழ்த்திய உரையையடுத்து இந்தியா அவரை நாடுகடத்துவது தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் தற்போதைய சூழலில் கவலைக்குரியவையாகவே இருக்கின்றன.

1983ம் ஆண்டு வரை இலங்கையின் இனப்பிரச்சனை முற்றிலும் இலங்கையின் அரசியல் வரம்புக்குள்ளேயே இருந்துவந்தது. ஆனால் 1983ம் ஆண்டின் ஆடிக்கலவரம் ஏற்படுத்திய தாக்கமே இலங்கையின் இனப்பிரச்சனையை உலகறியச் செய்திருந்தது.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த திருமதி.இந்திரா காந்தி இலங்கைத் தமிழர்கள் மீது மிகுந்த பரிவு

ஏற்றுக்கொண்ட நாடு இந்தியாவே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்திலேயே இலங்கையின் இனப்பிரச்சனை முதல் தடவையாக சர்வதேச கவனத்தையும் பெற்றிருந்தது.

ஐக்கிய நாடுகள் ஸ்தபானத்தில் பண்ருட்டி இராமச்சந்திரன் என்ற இந்திய அரசியல் பிரமுகரை இந்திரா காந்தி அன்று இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாகப் பேசவைத்திருந்தார்.

இவ்வாறு இந்தியாவின் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி இலங்கைத் தமிழர்கள் மீது வெளிப்படுத்திய கரிசனையே வடக்கு-கிழக்குத் தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக தீவிரவாதப் போக்கைக் கொண்டிருப்பதற்கும் உறுதுணையாக விளங்கியிருந்தது.

ஆயினும் இந்திரா காந்தியின் திடீர் மறைவுக்குப் பின்னர் இந்திய அரசியல் அரங்கில் நிகழ்ந்த மாற்றங்கள், இலங்கைத் தமிழர்களின் அரசியல்

அமுலாக்குவது தொடர்பாக ராஜீவ் காந்தி அரசாங்கம் கையாண்ட இராணுவ நடவடிக்கை, இந்தியாமீது இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ்கள் கொண்டிருந்த பெரும் நம்பிக்கையையும் தவிடு பொடியாக்குவதாகவே அமைந்திருந்தது!

இருந்த போதிலும் இக்கடந்த கால கசப்புணர்வுகளை ஒரந்தள்ளி இந்தியாவும் சர்வதேச சமுகத்துடன் இணைந்து இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண ஒத்துழைக்குமென்ற நம்பிக்கையையே இலங்கைத் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

இந்த நம்பிக்கையையும் தகர்த்து விடுவதாகவே இந்தியாவின் உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி கடந்த வாரம் இந்தியப் பாராளுமன்றில் ஆற்றிய

விட்டதாகக் கூட வதந்தியைப்பரப்பி விட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனைத் தமது கைப்பொம்மையாக வைத்திருப்பது, அல்லது அவரைக் கைது செய்வது என்ற திட்டத்தை ராஜீவ் காந்தி உயிர்வாழ்ந்த காலத்திலேயே இந்தியா கொண்டிருந்தது.

இந்நிலையில் மீளவும் எல்.ரி.ரி.ஈ தலைவர் வே.பிரபாகரன் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதன் மூலம் இந்தியா தனது சுயநலப் போக்கை வெளியிட்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

எது எப்படியிருந்த போதிலும் இலங்கை

# 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும்' இந்தியா!



வார இறுதியில் திரு.பிரபாகரன் நிகழ்த்தவிருக்கும் உரையின் மூலம் அவரது தற்போதைய நிலைப்பாட்டை அனைவரும் அறிந்து கொள்ள முடியும் என்று நோர்வே விசேட பிரதிநிதி கூறியிருந்தார்.

எனவே அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமது மாவீரர் வார உரையை திரு.பிரபாகரன் கடந்த வாரம் வன்னியிலிருந்து நிகழ்த்தியிருந்தார். இந்த உரை வழமைபோலன்றி இத்தடவை அவரது அரசியல் கண்ணோட்டத்தையே பெரிதும் புலப்படுத்துவதாக அமைந்திருந்தது.

கடந்தகாலங்களில் திரு.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் வார உரைகள் இராணுவ ரீதியான அவரது நிலைப்பாட்டை கோடிட்டுக்காட்டுவதாகவே அமைந்திருந்தன. இருந்தபோதிலும், நியாயமான வெளிநாட்டு மத்தியஸ்தமொன்று ஏற்படும் பட்சத்தில் அரசியல் பேச்சுவார்த்தைகள் பற்றித் தம்மால் பரிசீலிக்க முடியுமென அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இத்தடவை நோர்வே சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த பின்னர் திரு.பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் வார உரை அரசியல் தீர்வொன்றில் அவருக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

திரு.பிரபாகரனின் உரையை இலங்கையின் முக்கிய அரசியல் வட்டாரங்கள் மட்டுமல்ல; சமரச முயற்சிகளைப் பொறுத்தவரை சாதகமான கருத்துக்கண்ணோட்டங்களை அவ்வுரை கொண்டிருப்பதை சர்வதேச சமுகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சனை 1983ம் ஆண்டுமுதல் ஒரு கொடிய உள்நாட்டு யுத்தமாகவே மாற்றமடைந்துள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை தொடருகின்ற யுத்தம் காரணமாக முழு இலங்கையுமே பெருமளவிலான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது.

பல்வேறு சமாதான முயற்சிகள் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் அவை அனைத்துமே எவ்வித பயனையும் தராதவையாகவே இருந்தன.

இந்நிலையில் சர்வதேச சமுகத்தின்,

காட்டியதோடு, இனக்கலவரத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இந்தியாவில் புகலிடமும் வழங்கியிருந்தார். இனக்கலகத்தின் கொடூரத்தைத் தாங்க முடியாது தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற வடக்கு-கிழக்குப் பிரதேச மக்களைமட்டுமல்ல. இலங்கையின் மித வாத மற்றும் தீவிரவாத அரசியல் தலைவர்களுக்கும் இந்திரா அம்மையாரின் ஆட்சியில் பரிபூரண அடைக்கலம் கிடைத்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் மட்டுமல்ல. இன்று ஜனநாயக வழிக்குத்திரும்பி அரசியல் வாதிகளாக இருக்கும் அன்றைய தமிழ்த் தீவிரவாதத் தலைவர்கள் பலருக்கும் மறைந்த பிரதமர் இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பாதுகாப்புடன் கூடிய புகலிடம் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் இளைஞர்கள் பலருக்கும் தீவிர வாத நடவடிக்கைகள் தொடர்பாக ஆயுதப் பயிற்சியை வழங்கவும் இந்தியா அன்று முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் இலங்கையில் இனவாத அடாவடித்தனங்களிலிருந்து தமிழ் மக்கள் தமது தற்பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்பதை முதலில்

நடவடிக்கைகளைக் கொச்சைப் படுத்தவதாகவே அமைந்திருந்தன.

அரசியலுக்கே பரிச்சயமில்லாது பதவிக்குவந்த இந்திரா காந்தியின் புதல்வர் ராஜீவ் காந்தயின் இலங்கை விவகாரம் தொடர்பான அணுகுமுறைகள் அவசரப்பட்டவையாகவும், எவ்வகையிலும் வடக்கு-கிழக்குத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தவறியவையாகவுமே இருந்தன.

இலங்கை-இந்திய ஒப்பந்தமென்ற ரீதியில் மறைந்த இந்திய, இலங்கைத் தலைவர்களான ராஜீவ் காந்தி, ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோருக்கிடையே கைச்சாத்தான தீர்வுத்திட்டம் இந்தியாவின் நலன்களையும், இலங்கை ஆட்சியாளர்களது நலன்களையும் பாதுகாப்பதாக இருந்ததேயன்றி, வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அத்தீர்வுத்திட்டம் அமைந்திருக்கவில்லை.

அத்துடன் அத்தீர்வுத்திட்டத்தை அமுல் செய்வதற்கு ராஜீவ் காந்தி அரசு இராணுவ நடவடிக்கைகளைக் கையாண்டமை இலங்கைத் தமிழர்களிடையே வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் ஒரு செயலாகவே விளங்கியிருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை

உரை விளக்குகின்றது.

இந்தியாவின் பிரதமர் அடேன் பிஹாரி வாஜ்பாய் அரசாங்கம் இலங்கை இனப்பிரச்சனை குறித்துப் பல தடவைகள் கடந்த காலங்களில் கருத்து வெளியிட்டுள்ளது.

அச்சமயங்களிலெல்லாம் இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே அவசியம் பேச்சுக்கள் இடம் பெறவேண்டுமென்பதை பிரதமர் வாஜ்பாயும், அவரது அரசைச் சேர்ந்தவர்களும் வலியுறுத்தியே வந்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் நோர்வேயின் சமரச முயற்சியைக் கூட இந்தியா வரவேற்றிருந்ததுடன், அம்முயற்சி வெற்றிபெறத் தனது ஆதரவை வழங்குவதாகவும் நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி, ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே.பிரபாகரனை நாடுகடத்துவதுபற்றி இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளமை விஷமம் கலந்த குறும்புத்தனமாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகக் கையாளுவதில் 1987ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டுவரை இந்தியாவும் பெரிதும் களைப்புற்றே போயிருந்தது.

இதன் காரணமாக பிரதமர் ராஜீவ் காந்தி பதவியிலிருந்த காலத்தில் கூட எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே.பிரபாகரனை உயிருடன் அல்லது உயிரற்ற நிலையில் கைப்பற்ற வேண்டுமென்பதில் இந்தியா தீவிரமாகவே இருந்தது.

திரு.பிரபாகரனைத் தேடிக்கண்டுபிடிப்பதில் தோல்வியுற்ற இந்தியப்படையினர், அவர் இறந்து

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தைப் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரன் ஒரு முக்கிய பாத்திரமாகவே விளங்குகின்றார்.

இலங்கையின் அரசியலாளர்கள் கூட இனப்பிரச்சனையின் தாக்கம் காரணமாகவே திரு.பிரபாகரன் ஒரு முக்கிய சக்தியாக உருவாகியுள்ளார் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா கூட அரசியல் மேடைகளில் பேசும்போது, இலங்கையின் இனப்பிரச்சனை தீர்த்து வைக்கப்படாத பட்சத்தில் ஒரு பிரபாகரன் அல்ல. மேலும் மேலும் பிரபாகரன்கள் தோன்றுவார்கள் என்று அடிக்கடி குறிப்பிடுவதையும் அவதானிக்கமுடியும்.

எனவே இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக எல்.ரி.ரி.ஈ தலைவரிடமிருந்து இலங்கை மக்களும் சர்வதேச சமுகமும் நிறையவே எதிர்பார்த்திருக்கும் இத்தருணத்தில் இந்தியா வெளியிட்டு வரும் கருத்துக்கள் வெண்ணை திரண்டு வரும் போது தாளியை உடைப்பது போன்ற செயலாகவே இருக்கின்றது.

அண்மைக்காலங்களில் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கரிசனை வெளியிட்டு வரும் நோர்வே, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளும் இந்தியாவை அனுசரித்தவர்களாகவே தமது நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மேற்குலக நாடுகள் இந்தியாவிடம் இலங்கை இனப்பிரச்சனைப்பறிப் பேசும் போது, அப்பிரச்சனையைத் தீர்ப்பதில் தனக்கிருக்கும் ஆர்வத்தை இந்தியா அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறது.

ஆனால் தனது தனிப்பட்ட நிலைப்பாட்டை வெளியிடும்போது, இந்தியா நடந்து கொள்ளும் முறை 'தொட்டிலையும் ஆட்டிப்பிள்ளையையும் கிள்ளிவிடும்' போக்கிலேயே அமைந்திருக்கிறது.

## அதிரடி அய்யாத்துரை



**'மாட்டுக்கு மாடு** சொன்னால் கேட்காது. மணி கட்டின மாடுதான் சொல்லவேணும்?' இது நம்மவர்கள் மத்தியில் புழங்கும் ஒரு வாசகம். வெளிநாட்டுக்காரர்கள் வந்து மந்திரக் கோலை அசைப்பதன் மூலம் எந்த மாற்றமும் வந்து விடாது என்று வெள்ளைத் தோல் இராஜதந்திரி அனுபவ முத்துக்களை உதிர்த்து இருக்கிறார். உள்ளூர்க்காரர்களுக்கு இது புரிந்தால் சரிதான்.

**உதவிக்கு வாறவையால** உபத்திரமும் வரலாம். ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை வீரர்கள் உலக நாடுகளுக்கு எல்லாம் உதவிக்கு எண்டுதான் போறவை. அவையளால உபத்திரவமும் வருகுது என்பது அண்மைய கண்டு பிடிப்பு. ஆம்! ஐ.நா. பாதுகாப்பு படை வீரர்களில் பலர் எயிட்ஸ்காரர்களாம்.

**நோர்வேயின் சமாதான** முயற்சிக்கு இந்திய மத்திய அரசு உதவி அளிக்க வேண்டும் என்று அக்கரையில் இருந்து ஒரு கொன்னைக்குரல் கேட்குது. உள்ளூர்ப் பிரச்சனைகளைப் பேசி ஒரு எம்.எல்.ஏ. சீற் கூட எடுக்க முடியாதவை எல்லாம் உலக விவகாரங்களில் ஆலோசனை கூற வந்திட்டினம். என்ன செய்யிறது? காட்டுக்குள்ள போய்வரக் கூடிய தெம்பும் துணிவும் இருக்கிற ஆக்கள் என்னத்தைச் சொன்னாலும் அது தானே பலருக்கு தேவவாக்கு.

**இளம் பிள்ளை வாதம்** ஒரு பொல்லாத நோய். அதை தடுக்கிறது முக்கியமான வேலைதான். ஆனா இதுக்கு அடிக்கடி தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும். ஏனெண்டா அப்பதானே போர் நிறுத்தம் வரும். சத்தம் சந்தடி இல்லாமல் இருக்கும்.

**கூட்டணியின் தலைவர்மார்** குடாநாட்டுக்கு விஜயம். முதலே போக யோசிச்சவையாம். ஆனா மாவீரர் வாரத்துக்குள்ள போனால் சிலவேளை பிரச்சனை வந்தாலும் எண்டிட்டு, விஜயத்தை ஒத்தி வைச்சவையாம். நல்ல நேரமா சொட்டு மருந்து குடுக்க துப்பாக்கிகள் வெடியாது எண்டு அறிவிப்பு வந்ததும் உடனேயே பறந்து போனவையாம்.

**குடாநாட்டில் தொண்டர்** மத்தியில் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்களில் படு சூப்பர். "வேலை வாய்ப்பு சலுகைகள், நிவாரணங்கள் எங்களிட்டைக் கேட்கக் கூடாது, என்றொரு அறிவிப்பு." கொழும்பில் தான் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் ராஜதந்திரிகள் சந்திப்புகள் எல்லாம் இருக்கு. எங்களுக்கு வேலையள் கனக்க" என்றொரு பிரகடனம். "அடிக்கடி வராமல் இருக்கிற சந்தர்ப்பத்தை பயன் படுத்தி வீணைக் கச்சேரி நடத்தி சனத்தை மயக்குறார்கள். அதுக்கு தொண்டர்கள் இடங்குடுக்கக் கூடாது" என்றொரு கட்டளை. "அவங்களையும் விட ஒர் ஆசனம் கூடக் கிடைச்சிருந்தால் கண்ணுக்குள்ள விரலை விட்டு ஆட்டியிருக்கலாம்" என்றொரு கர்ஜனை. அவையள் பாவம். மேடை ஆடின ஆக்கள் வயது போனதும் கதிரையில இருந்து கொண்டு தாலாட்டுற மாதிரிக் கதைக்கினம்.

# திகில் தொடர்

ரத்னா, மேற்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக பட அதிபர் தன்னுடைய படகு போன்ற வெளிநாட்டு காரில் ஏற்றினார்.

தாயார் சவுந்திரவல்லி அருகில் அமர்ந்து, தன் மடியில் படுக்க வைத்து, பிடித்துக் கொண்டாள்.

காரோட்டியின் அருகில் கவலை நெஞ்சோடு அமர்ந்திருந்த பட அதிபர் மிகுந்த மனத்தளர்வுடன் ரிப்போர்ட்டர் யோகேஷை அருகில் அழைத்தார்.

"மிஸ்டர் யோகேஷ்..."

"ஸார்...."

"மிஸ் ரத்னாவின் நிலையை நினைத்து மிகவும் பயந்துவிட்டேன். கடவுள் உங்கள் ரூபத்தில் வந்து காப்பாற்றி விட்டார். ஆனா, எதிர்பாராதவிதமாக ஹீரோ சிவப்பிரகாஷ்..." என்று இழுத்தார்.

"விபத்து நடப்பது சகஜம். அதற்கு யார் என்ன செய்ய முடியும்?" என்றான் யோகேஷ்.

"செய்ய முடியாது தான்..." என்று



கர்சிப்பால் முகத்தின் வியர்வையை ஒற்றி எடுத்த பட அதிபர், செய்தி எதுவும் பத்திரிகைகளில் வராதபடி பார்த்துக் கொள்ளும்படி யோகேஷைக் கேட்டுக் கொண்டார்.

யோகேஷ் தலையசைத்தான்.

"அது மட்டும் போதாது. இன்னொரு



விஷயம் நீங்க பண்ணணும்."

"என்ன அது?"

"சிவப்பிரகாஷ் பாடியை எடுத்துச் செல்லவும் நீங்க தான் உதவணும். போலீஸ் மூலம் தான்!"

"சரி"

"எங்க புரொடக்ஷன் மானேஜர் முரளி தான் உங்களுக்கு துணையாக இருந்து உதவுவார்."

"இனி நான் பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை," என்று நம்பிக்கை அளித்தான் யோகேஷ்.

"நல்லது தம்பி... எல்லா வேலைகளையும் முடிச்சு, பாடியை போஸ்ட்மார்ட்டம் செய்து, பாடியை அவரோட செகரட்டரி அழகுகண்ணனிடம் ஒப்படைத்து விட்டு, நேராக 'குகா நர்ஸிங் ஹோமுக்கு' வாங்க.. அங்கதான் நான் ரத்னாவை 'அட்மிட்' பண்ணிவிட்டு தங்கப் போறன்".

யோகேஷ் சம்மதித்தான்.

உடனே டைரக்டர் வசீகரை கூப்பிட்டு "மிஸ்டர் வசீகர்... யூனிட்டில் யாரும் அப்செட் அடைய தேவை இல்லை. ஷூட்டிங்கை 'கேன்சல்' பண்ண வேண்டாம். ஹீரோ, ஹீரோயின் இல்லாத சீன்களா பார்த்து ஷூட் பண்ணுங்க."

"ஓ.கே., ஸார்..."

"மிஸ்டர் குருமுத்து... ஷூட்டிங் பிரேக் இல்லை... டைரக்டர் சொல்லுகிற படி பொருத்தமான சீன்களா சூஸ் பண்ணிக் கொடுங்க."

எங்கோ கவனமாக நின்றிருந்த கதை, வசன கர்த்தாவான கவிஞர் குருமுத்து அருகில் வந்தான்.

"ரொம்ப சரி ஸார்... இனி நீங்க கவலைப் படாம போங்க... நாங்க பார்த்துக்கிறோம்."

பட அதிபரின் கார் அந்த இடத்திலிருந்து நகர்ந்தது.

"ஞான் சொன்னேன். யாருமே என்னை ஒரு மனுஷனாகவே மதிக்கவில்லை." என்று வருத்தத்துடன் சொன்னான், கிழட்டு வாட்ச்மேனான சம்பூர்ண.

ரிப்போர்ட்டர் யோகேஷ் அப்போதுதான் காவல் துறையினர் மூலம் நடிகர் சிவப்பிரகாஷ் உடலை பெற்று, போஸ்ட்மார்ட்டத்துக்காக அனுப்ப ஏற்பாடு செய்து விட்டு, மங்கள விலாஸ் மாளிகைக்கு வந்திருந்தான்.

அங்கே வாட்ச்மேன் மட்டுமே குழப்பமான மனநிலையில் முன் ஹால் தரை விரிப்பின் மீது ஒரு காலைத் தூக்கி மடித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பருத்து, தடித்த கொழுக்கட்டை போன்ற சுருட்டு ஒன்றை சுருங்கிப் போன உதடுகளால் கவ்வியிருந்தான். சுருட்டு நுனியில் தீ கங்குகளுடன் சாம்பல் தெரிந்தது.

பத்திரிகை அலுவலகத்தில் வேலைக்குச் சேரும் முன்பு தனியாக டிடெக்டிவ் ஏஜன்ஸி ஒன்றை நடத்தி வந்தான் யோகேஷ். அவன் வெற்றிகரமாக செய்து முடிக்கும் பணிகளுக்கு கூட பேசிய தொகை சரிவர கிடைக்காததால் பத்திரிகை துறையில் நுழைந்தான் யோகேஷ்.

அவனது துப்பறியும் மூளையில் சிலபல எண்ணங்கள் வந்து மோதின. மங்களவிலாஸ் மாளிகையில் இப்போது அந்த இரண்டு பேரை தவிர வேறு யாரும் இல்லை.

பயங்கரமான விபத்துக்கு பிறகும், நடன அழகிகள் மலைஜாதிப் பெண்கள் உடையில் வந்து ஆட, சிரிப்பு நடிகர்கள் இருவர் வந்து நையாண்டித்தனமாக ஆடிப்பாடும் காட்சிகள் மாறுபட்ட இடங்களில் படமாக்கப்பட்டு

**திகில் கதை மன்னன்**

**பி.டி.சாமி**

வந்தன.

ஸ்டாண்ட் மாஸ்டர் குபேரடி குப்பா, சண்டைக் காட்சிக்காக தன் பத்து நடிகர்களுடன் ஒத்திகையும் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது.

ஹீரோ நடிகர் சிவப்பிரகாஷின் துர்மரணம் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை.

ஆனால், வாட்ச்மேன் சம்பூர்ண தன் சொந்த மகனை இழந்து விட்டது போன்ற சோக வேதனையை யோகேஷிடம் வெளிப்படுத்த ஆரம்பித்தான்.

பழம் பெரும் ராட்சதகரமான பெரிய சோபாவில் வாட்ச்மேனை பார்த்தபடியே யோகேஷ் மவுனமாக அமர்ந்திருந்தான்.

பத்திரிகை நிருபர் என்பதால் பேட்டி எடுக்கும் தோரணையில் பேச்சை ஆரம்பித்தான். யாஷிகா ஸ்டில் கேமிரா தோளில் தொங்கிக் கொண்டிருந்தது.

"பெரியவரே... யார் மதிக்கவில்லை என்று சொல்றீங்க?" என்றவாறு அவர் அருகில் வந்து அமர்ந்தான் யோகேஷ்.

திமிர் பிடித்த கிழட்டு வாட்ச்மேனாக இருப்பானோ என்ற எண்ணத்தில் கேட்டான். பார்வை அவனை தாக்கும் தோரணையில் இருந்தது.

வாட்ச்மேன் அதை கவனித்து விட்டானோ, என்னவோ உடனே சுதாகரித்து கொண்டான்.

"தம்பி... நீங்க எனக்கு பேரன் போல.. பறயின்னது கேட்டோ... அது கொண்டாண ஞான் ஈ சுருட்டை வலிச்சது... எனிக்கி பல்லு வலியாக்கும்! சொத்தப் பல்லு அசையுது. சுருட்டு வலிச்சா நல்லா இருக்கும்"

வாட்ச்மேன் கிழவன் பேசியது மலையாளம் கலந்து ஒலித்த போதிலும் மலையாளி என்று சொல்ல முடியாது. தமிழில் பேசுவதால் தமிழன் என்றும் ஒப்புக் கொள்ளமுடியாது. பீகாரி, ஒரியா, அசாமி போன்ற மொழிகளின் சாயல் எதிரொலித்தது.

அவன் தன்னுடைய தோற்றத்தால் அசல் தமிழன் போலவோ, மலையாளி போலவோ இல்லை.

பார்வையாலேயே ஆராய்ந்தான்.

எதுவாக இருந்தால் என்ன இப்போது அதைப்பற்றிய பிரச்சனை எதுவும் இல்லை.

"சுருட்டு வலிக்கலாமா?"

"வலிக்கலாம்."

யோகேஷ் அனுமதி கொடுத்ததும் வாட்ச்மேன் கிழவன் நிமிர்ந்து உட்கார்ந்து சுருட்டை ஆழமாக உறிஞ்சி, புகையை பாதிக்கு மேல் உள்ளுக்கு இழுத்து, மீதியை வெளியேற்றினான்.

"பெரியவரே... உங்களுக்கு உரிய மதிப்பு கிடைக்க நான் ஏற்பாடு பண்றேன். அதுக்கு முன்னால நான் கேட்கப் போற கேள்விகளுக்கு பதில் சொல்லுவீரா!"

"சத்யம் பறயாம்... சொல்வேன்."

வயோதிகம் காரணமாக குகை போன்ற வாய் திறந்து வார்த்தைகள் மென்று தின்று ஒலித்தன.

"முதலில் நீர் தமிழனா?"

"அப்போதே ஞான் சம்சயித்து. எனக்கி அப்படி எல்லாம் தெரியாது. மலையாளத்தில் சம்சாரிக்கிறதினால நான் மலையாளியும் இல்லா."

"பின்ன...?"

"நான் சின்ன பிராயத்தில மலபாரில் இருந்தேனாம், என்றே அம்மே எனிக்கு தெரியாது. அச்சன்றே பேரும் அறியாம் பாடில்ல... யாரோ ஒரு சிறுக்கி என்னைப் பெத்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு ஓடிப்போய் விட்டாளாம். தாய், தந்தை பேரு தெரியாத அனாதை அய்யா."

சொன்ன வாட்ச்மேன் கிழவன் தொண்டை இறுக்கிக் கொண்டது போல் வார்த்தைகள் திக்கு முக்காடலாக வெளிவந்தன. குவிந்த கண்களிலும் கண்ணீர் வழிந்து, முகத்தின் தோல் சுருக்கங்களை நனைத்துக் கொண்டு சென்றன.

"நான் எங்கோ வளர்ந்தேன் எப்படியோ ஜீவிச்சு பிறகு இங்ஙன வந்து தீர்த்தகிரி அய்யாகிட்டே வாட்ச்மேனாக வேலைக்கு சேர்ந்து..."

"தீர்த்தகிரி இப்போது எங்கே?"

"அவரு சில கொல்லங்களுக்கு முன்னாடி சினிமா எஜமான் தா.. தா.. தாணுமால அய்யாவுக்கிரயம் பண்ணிக் குடுத்திட்டு போயே போயிட்டார்."

அவன் சொன்ன தோரணை தீர்த்தகிரி என்ற முன்னாள் பங்களா உரிமையாளர் உயிருடன் இல்லை என்று சொல்லுவது போலவே தெரிந்தது.

"போய் விட்டாரா..? அப்படி என்றால் இந்த உலகத்திலேயே இல்லையா?"

"அது எனக்கு தெரியாது சாமி. ஒரு வேளை செத்தும் போயிருக்கலாம்." வாட்ச்மேனின் வேகச் சுருதி தணிந்தது.

"சரி பெரியவரே.. முதலில் பேசிய விஷயத்துக்கு வருவோம். நீர் யாரிடம் என்ன சொன்னீர்?"

"ஆமாம்.. எஜமான் தாணு முதலாளி ஈ பங்களாவுக்கு வரப்போற விஷயமே தெரியாது. சினிமா ஆளுங்களோட இங்கே வந்தவுடனேயே நான் பேடிச்சுப் பேயி."


"ஏன் பேடிச்சே... அதாவது பயந்தே?"

"இது பேய் வாசம் செய்யற கூடமுங்க. ஈ பங்களாவிலே தீர்த்தகிரி மந்திரவாதிகளுக்குத் தங்க இடம் குடுத்து நாசமாக்கிட்டாரு... மந்திரவாதிங்க அவரை பழிவாங்கிட்டாங்க... இது சூனியமான பேய் மண்டலம். நடிகர் செத்ததும் பேயோட வேலை தான்! ஏரியில முக்கிக் கொன்னுட்டுது."

(திகில் தொடரும்)

# தத்துவம் பாடிய முத்தையா 5

**டாக்டர். சு. சண்முகசுந்தரம்**



"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்
-கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு
-அவைதாம் என் செய்யும்"

என்பது கலித்தொகையின் கவி வரிகள். இவர் கைப்பட்டு,

"மலையின் சந்தனம் மார்புக்குச் சொந்தம்
மங்கையின் இதயமோ காளைக்குச்
-சொந்தம்"

என்று 'பட்டணத்தில் பூதம்' படத்தில் கனியாகி விட்டிருக்கிறது.

காளமேகப் புலவர் ஒரு பாடலில் 'உன்னை ஒருத்தி போட்டாளே வேலையற்று போய்' என்று பாடியுள்ளார். அதனைக் கவிஞர் 'லட்சுமி கல்யாணத்துக்காக', "போட்டாளே உன்னையும் ஒருத்தி பெத்துப் போட்டாளே" என்று பாடல் எழுதி விட்டார்.

ஒரு முறை கவிஞர் பாண்டிச்சேரியில் இருக்கும் போது மிக்சர் வாங்கிச் சாப்பிட்டார். அப்பொட்டலத்தாளில், "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான்" என்ற பாடல் இருந்தது. உடனே இவர்,

"அத்தான் என்னத்தான் அவர் என்னைத்
தான் எப்படிச் சொல்வேனடி"

என்று பாட ஆரம்பித்துவிட்டாராம்.

"கண்ணதாசனின் 'அத்தான் என்னத்தான்' என்ற பாடலின் மூலம் 'கல்லைத்தான் மண்ணைத்தான்' என்பதல்ல. அதற்கும் முதல் மூலம் இராமச்சந்திரக் கவிராயர் பாடிய, "ஒப்பத்தான் உண்மை மிகுஞ் செப்பத்தான் தீவினைகள் தப்பத்தான்" என்ற பாடலை எடுத்துரைக்கிறார் கவிஞர் சுரதா.

"அத்திக்காய் காய்காய் ஆலங்காய்
-வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னைப்போல்
-பெண்ணல்லவோ"

என்ற 'பலே பாண்டியா' பாடல் கூடத் தனிப்பாடலின் தழுவல்தான்.

இதனைக் கண்ணதாசன் மறுக்கவுமில்லை. மறைக்கவும் இல்லை. ஒரு முறை கண்ணதாசனிடம் ஒருவர் "சில்லென்ற பூத்த சிறு நெருஞ்சிக் காட்டினிலே நில்லென்று கூறி நிறுத்தி வழி போனாய்" என்று எழுதியிருக்கிறீர்களே. எப்படி இவ்வளவு உன்னதமாக எழுதினீர்கள் என்று கேட்டார்.

அதற்கு இவர், "நீங்கள் நகரவாசியாய் இருப்பீர்கள், நாட்டுப்புறமானால் அதுவும் நகரத்தார் சமூகமானால் கேட்டிருக்க மாட்டீர்கள். நீங்கள் சொன்ன வரி நான் செட்டி நாட்டில் ஒரு ஒப்பாரியில் கேட்டது. இரண்டாம் வரிதான் என்னுடையது" என்றாராம். "இதனால் இவரது அற்புத ரசனை, தான் ரசித்ததை அடுத்தவரும் ரசிக்க வேண்டும் என்று எண்ணுகிற ஆவல், தத்து பிள்ளையைப் பெற்ற பிள்ளை என்று சொல்லாத பேராண்மை, அதற்கு அடிப்படையான சுய பலம், அதை அறிந்த சுய உணர்வில் முளைத்த தன்னம்பிக்கை-போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்" என்பார் நாக வேணுகோபாலன்.

"ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாய்
இல்லையொரு பிள்ளையென்று
ஏங்குவோர் பலரிருக்க
இங்குவந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே"

என்ற 'பாகப் பிரிவினை'ப் பாடல் ஒரு தாலாட்டின் தழுவல்தான்.

"சாந்துப் பொட்டு தளதளங்க
சந்தப் பொட்டு கம கமங்க
மதுரைக் கோபுரம் தெரிந்திடச் செய்த
மருது பாண்டியர் பாருங்கடி"

என்ற 'சிவகங்கைச் சீமை' பாடல் ஒரு கும்மிப் பாடலின் கூடல்தான்.

"வட்ட வட்டப் பாறையிலே
வரகரசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலை
ஆலவட்டம் போடுதடி"

என்ற 'பழநி' பாடல் ஒரு தெம்மாங்கின் திரட்டுத்தான்.

இதுபோல ஏராளமான பாடல்களை எடுத்துக் காட்டலாம். இதனால் கவிஞர் எவ்வளவு தூரம் கிராமியப் பாடல்களில் தன்னை இழந்து விடுகிறார் என்பது புரிகிறது.

பொது மக்களின் பேச்சு வழக்கில் உள்ள பழமொழிகள் போல பழக்கப்பட்ட கருத்துக்களையும் கண்ணதாசன் கையாண்டுள்ளார். 'சட்டி சுட்டதடா கை விட்டதடா', 'போனால் போகட்டும் போடா', இப்படி நிறைய. இதனால்தான் அமுதவன் 'கலை இலக்கியம்' என்று வந்துவிட்டால் அதில் படைப்பாளி எவ்வளவு பெரிய மேதையாய் இருக்கிறான் என்பது முக்கியமல்ல. அவன் ஜனங்களைத் தொடுகிறானா? அவனால் ஜனங்களைத் தொட முடிகிறதா? எவ்வளவு அதிகமான ஜனங்களை அவனால் தொட முடிகிறது? என்பதுதான் முக்கியம். "கம்பனைப் படிக்காதவர்களையெல்லாம் கூடத் தொட்டவர் பாரதி. பாரதியையும் மிஞ்சியவர் கண்ணதாசன்" என்பது எண்ணிப் பார்க்கத் தக்கதே இது புகழ்ச்சி.

ஆனால் சுரதாவோ, "கண்ணதாசனின் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் பிறரைப் பார்த்து எடுத்தெழுதியது" என்கிறார். "ஓராயிரம் பார்வையிலே உன் காதலை நான் அறிவேன்" என்ற 'வல்லவனுக்கு வல்லவன்' பாடல் அப்படியே இந்திமொழி பெயர்ப்பு.

"தூக்கமுன் கண்களைத் தழுவட்டுமே" என்ற கண்ணதாசன் வரிகள் சேக்ஸ்பியரின் மொழியாக்க வரிகள் தான்.

"எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த
-என் தலைவன்"

"கையளவு கடல்"

ஆகியவை தமிழ் விடுகதைகளில் உள்ள வரிகள்,

"கண்ணதாசனின் ஆச்சரியமான சிந்தனைகள் எல்லாம் எங்கெங்கோ இருந்து திட்டமிட்டு திருடப் பட்டவை" என்று குற்றம்சாட்டுகிறார் நா.காமராசர்.

"திருடித்தான் எழுதினார் சேக்ஸ்பியர்" என்று கண்ணதாசன் கூட ஒரு சமாளிப்பு கட்டுரை எழுதியதாகக் கேள்வி.

ஒரு நோக்கில் பார்த்தால் கண்ணதாசனே இவ்வளவுதான். எளிமை, இனிமை, நம்பிக்கை. பாரதிதாசனுக்கு பக்தியில்லை; கவிமணி[illegible] யில்லை; நாமக்கல்லாருக்கு அழகியல் குறைவு; எதிலும் சிரத்தை இல்லா விட்டாலும் எல்லாவற்றிலும் பங்கு கொண்டதால் இவர் பாரதிக்கு நேர் வாரிசு ஆகிறார். இங்கு வாரிசு என்பது பாரம்பரியத்தைக் காட்டுமே அல்லாது பலத்தை அல்ல. அவரது மனம் அறிவியல் மனமல்ல; அழகியல் மனம், அவர் இருதயத்தினாலே சிந்தித்த மனிதன். தானாக எதையும் தேடி உணர்ந்து சொல்லாமல் தனக்குக் கிடைத்த அனுபவங்களை உடனே கவிதையாக்கிய குழந்தை" என்பார்.

சினிமாப் பாடல்களின் அமைப்பு முறையே மாற்றினார். தமிழிலே கவிதைத் துறையில் பல வகையான சீர் முறைகள் உண்டு. நாற்சீர், அறுசீர், எண்சீர் இவை பிரபலமானவை. இவற்றோடு இவர் புதிய சீர் அமைப்புகளைத் தர முயன்றார். ஒரு சீரில் சில பாடல்கள். உதாரணத்திற்கு 'வரவா' என்று காதலி பாடினால் 'தரவா' என்று காதலன் பாடுவது. இரு சீர் பாடல்களுக்கு உதாரணம்; 'சுமை தாங்கி'யில் வரும் 'மாம்பழத்து வண்டு'. 'பாத காணிக்கை'யில் வரும் 'வீடுவரை உறவு' மூன்று சீர் பாடல்களுக்கு உதாரணம், 'கர்ணன்' படத்தில் வரும் 'போய் வா மகளே போய் வா' 'பாசமலரில்' வரும் 'வாராய் என் தோழி வாராயோ' இவை மட்டுமன்றி வஞ்சிப் பாட்டு. வண்ணங்கள், சிந்து முறைகள் அனைத்தையும் கையாண்டு பார்த்திருக்கிறார். எளிமையான ரசனைகளுக்காக டப்பாங்குத்துகளும் எழுதியிருக்கிறார். சித்தர் ஞானத்திலும் இறங்கியிருக்கிறார்; பக்தித் துறைக்கும் படைத்திருக்கிறார்

"சாதாரணமாகவே பாட்டெழுத உட்கார்ந்தால் ஒரு சுகமான உலகத்தில் மிதப்பது போல் எனக்குத் தோன்றும். அகக் கவலை, புறக் கவலை எதுவும் தோன்றாது. குடிபோதையை விட அதிகமான போதை எனக்குப் பாட்டு எழுதுவதில் ஏற்படும். அதுவும் மரியாதையுடன் வரவேற்கும் இடங்களில் அற்புதமான கற்பனைகள் பூத்துக் குலுங்கும்!" என்பார் கவிஞர்.

ஒரு இடத்தில் பாட்டுப் போடும் போது அந்த இடத்துக்குள்ளே தான் சுற்றிச்சுற்றி வரவேண்டும் என்பது இல்லாமல் அதைவிட்டு அப்பாலும் போய் வேறு விஷயங்களைச் சொல்லலாம் என்ற நிலையை உருவாக்கினார் இவர். ஏறக்குறைய இரண்டாயிரம் பாடல்களை எழுதி முடிக்கிற வரை இவரே 'மோனாபலி'யாக இருந்தார். பின்னால் பலர் வந்தார்கள். இவரைப் பின்பற்றி எழுதத் தொடங்கினார்கள். இன்று எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

(தொடரும்)



## தவழும் போட்டி

← நீளமான நாடா ஒன்றைத் தொட்டு நிற்கும் இந்த மழலையின் பெயர் சானா சோர்ன். தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கில் நடந்த போட்டியில் முதலிடத்தைப் பெற்ற இந்தப் பாலகனின் வயது பதினொரு மாதங்கள்.

எதில் முதலிடம் பெற்றான் என்று கேட்கிறீர்களா? தவழும் போட்டியில் தான். அண்மையில் இளையர் (இளைஞர் அல்ல) தினத்தை முன்னிட்டு 10 மீட்டர் தவழும் போட்டி நடத்தப்பட்டது.


## தகவல் பெட்டி



## பழமை வாய்ந்த பச்சை வைரம்

→ இந்தப் புன்னகை அழகி அணிந்திருக்கும் பொன்னகை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வைரத்தால் இழைக்கப்பட்டது. இந்த நகையில் இழைக்கப்பட்டிருக்கும் பச்சை வைரம், சுமார் 300 வருடங்கள் பழமையானது. அதுமட்டுமல்லாமல் இதுதான் உலகிலேயே மிகபெரிய பச்சை வைரமும் கூட.


41 கரட்டான இந்தப் பச்சை வைரம் இப்போது அமெரிக்காவில் வோஷிங்டன் நகரின் ஆய்வுக்களகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.



## நீ.......ண்ட சுருட்டு

← ஸ்பெயின் நாட்டில் உள்ள வலன்னியா நகரில் சுருட்டுக்கடை வைத்திருக்கும் ஒரு தம்பதி தயாரித்துள்ள நீண்ட சுருட்டுத்தான் இது.

3.3 மீட்டர் நீளமுடைய இந்தச்சுருட்டை உருவாக்க இருவரும் ஐந்து மணிநேரம் உழைத்துள்ளனர். இவர்களது உழைப்பினால் உருவான இந்தச் சுருட்டுத்தான் உலகிலேயே மிக நீண்ட சுருட்டு என்ற உலக சாதனை படைத்துள்ளது.



## அலங்காரத் தொப்பி

→ இந்தப் பெண்மணி அணிந்திருக்கும் தொப்பியில் தான் எத்தனை அலங்காரம்? ஒலிம்பிக் சின்னம், பந்துகள், டென்னிஸ் மட்டை, குதிரை, போத்தல் என்று எல்லாம் பொம்மைகளாகத் தொப்பியில் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

நடந்து முடிந்த சிட்னி ஒலிம்பிக் போட்டியின் போது நடைபெற்ற டென்னிஸ் போட்டியைக் கண்டுகளிக்க அம்மணி அணிந்து வந்த அலங்காரத் தொப்பி இது.



## குடிநீருக்காக மழைநீரில்

← வெள்ளக்கடலாக இருந்தாலும், குடிநீர் கிடைக்காத நிலை தான் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தின் பல பகுதிகளில், உருவாகியுள்ளது.

சமீபத்தில் அங்கு பெய்த கடும் மழையால் ஏற்பட்ட கழுத்துயர மழை வெள்ளத்தையும் பொருட்படுத்தாது குடிநீர் எடுப்பதற்காகத் தலையில் பாத்திரத்துடன் செல்கிறான் சிறுவன் ஒருவன். அருகில் கார் ஒன்று முக்கால் பகுதி மழைநீரில் மூழ்கியபடி காணப்படுகிறது.

திரையுலக மறுபக்கம் 178

# அடிக்கடி வெளியூர் போன நடிகைக்கு கிடுக்கிப்பிடி போட்ட அதிகாரிகள்

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கும் மேலாக தமிழ்த் திரையுலகில் கதாநாயகியாக வலம் வந்து கொண்டிருக்கும் ஒரே நடிகை இவர். பிரபல நடிகைகள் சிலா இடை, தொடை சமாச்சாரங்களுக்குப் புகழ்பெற்றது போல் இந்த இரண்டெழுத்து நடிகை கயல்விழிகளுக்குப் புகழ் பெற்றவர்.

சில வருடங்களாக அருகில் இருக்கும் கடைத் தெருவுக்கு ஷொப்பிங் செல்வது போல் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் வந்தார்-வருகிறார் நடிகை.

தவிர நடிகை உள்ளூருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதை விட வெளியூர்களுக்கு அதாவது வெளிநாடுகளுக்குத் தொடர்பு கொள்வது தான் அதிகம்.

கடந்த 3 மாதங்களில் ஏறக்குறைய 20 தடவைகளுக்கும் மேலாக சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் உட்பட பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார் நடிகை.

இதைச் சில சினிமா நிருபர்கள் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். இதற்குமேல் நிருபர்களால் நடிகை தொடர்ந்து வெளிநாடுகளில் என்ன செய்கிறார் என்று அறியமுடியவில்லை.

ஆனால் வருமானவரித்துறையினரோ, நடிகையின் போக்கு அவ்வளவு சரியில்லை, விசாரித்து விட வேண்டும். என்று கூடிப்பேசி முடிவெடுத்தனர். அத்துடன் நடிகையை மடக்குவதற்காக அனைத்து விவ காரங்களையும் சேகரிக்கத் தொடங்கினர்.

நடிகையைக் கிடுக்கிப்பிடி போட அதிகாரிகள் போடும் திட்டம் அங்கு வேலை பார்க்கும் ஊழியரும், நடிகையின் தீவிர இரசிகருமான ஒருவருக்கும் தெரிந்துவிட்டது. உடனே நடிகையிடம் ஓடோடிச் சென்று சொல்லி விட்டார் அந்த ஊழியர்.

இதைக் கேள்விப்பட்ட நடிகையின் தாய் தனது அபிமான அரசியல்வாதியும் 'மூத்த தலைவருமானவரிடம் விஷயத்தைக் கூறி உதவி கேட்டிருக்கிறார்.

உடனே அந்த அரசியல்வாதியும் அம்மா-மகள் ஆகியோரிடம் உள்ள 'அன்பு' காரணமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அமைதிப்படுத்தியிருக்கிறார். அதன் பின் தான் நடிகையும் தாயும் நிம்மதிப்பெருமூச்சு விட்டிருக்கிறார்கள்.

படவாய்ப்புகள் குறைந்து வருவதனால் வெளிநாட்டில் 'கலைச்சேவை' செய்து தொழிலதிபர்களையும் சில பெரிய நடிகர்களையும் மகிழ்ச்சிப்படுத்தவே அடிக்கடி அசலூருக்கு அம்மணி பறந்திருக்கிறார்.

உள்ளூரிலேயே 'கலைச் சேவை' செய்யத் தொடங்கினால் விஷயம் வெளியே கசிந்து விஷமாகி விடும் என்ற பயம் தான் நடிகை வெளியூர் பறப்பதற்குப் பிரதா[illegible] காரணம்.

இப்போது நடிகை [illegible] நாடு செல்வதற்குக் கொஞ்ச[illegible] தயக்கம் காட்டி வருகிறார்.

# நாரதரில் கலகம்

சத்யராஜ் நடிக்க ஷக்தி சிதம்பரம் இயக்கிவரும் 'மிஸ்டர் நாரதர்' படத்தில் விவேக் நகைச்சுவை வேடத்தில் நடிக்கிறார்.

தான் நடிக்கும் படங்களுக்கு தான்தான் நகைச்சுவைப் பகுதியை எழுதி நடிப்பேன் என்று விவேக் கூற, இயக்குநர் மறுக்க, விளைவு-கலகம்.

இப்போது 'மிஸ்டர் நாரதர்' படத்தில் விவேக் நடிக்க மாட்டார் போல் தெரிகிறது. இவருக்குப் பதிலாக சின்னிஜெயந்த் நடிக்க வுள்ளார்.



அஜித் - லைலா
படம்: தீனா



# மாதேஷ் படத்தில் பிரசாந்த்

இயக்குநர் ஷங்கரின் படங்களில் இணை இயக்குநராகவும், 'முதல்வன்' படத்தின் இணைத் தயாரிப்பாளராகவும் இருந்த மாதேஷ், தனியாக வந்து படமொன்றைத் தயாரிக்கிறார். இப்படத்தின் நாயகனாக பிரசாந்த் நடிக்கிறார். இப்படத்தை 'மகாபிரபு' பட இயக்குநர் வெங்கடேசன், இயக்கவுள்ளார். வெங்கடேசன் ஷங்கர் இயக்கிய 'ஜென்டில்மன்' படத்தில் இணை பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



கார்த்திக்-மானவிகா
படம்: தீனு



டயானா
படம்: பத்தா

# கனவு கலைந்தது

'பத்தா' படத்தில் கதாநாயகியாக நடித்த டயானா இன்னமும் அப்படம் வெளிவராததால் சின்னச் சின்ன வேடங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

கதாநாயகிக் கனவோடு வந்த டயானா அதைக் கலைந்து விட்டு, கிடைக்கும் வேடங்களை ஏற்று நடித்து வருகிறார்.

பார்த்திபன்-தேவயானி நடிக்கும் 'நினைக்காத நாளில்லை' படத்தில் பார்த்திபனின் தங்கையாக நடித்து வருகிறார் டயானா.

# 'கலர்:புல்' கார்த்திக்

'மக்களாட்சி' படத்தைத் தயாரித்த திருப்பூர் செல்வராஜ் அடுத்து 'கலர்புல்' என்ற படத்தைத் தயாரிக்கிறார். 'என்னம்மாக் கண்ணு' ஷக்தி சிதம்பரம் இயக்கும் இப்படத்தில் நாயகனாக பிரபு தேவா நடிப்பார் என முதலில் அறிவிக்கப்பட்டது. இப்போது இதில் பிரபு தேவாவிற்குப் பதிலாக கார்த்திக் நடிப்பார் எனத் தெரிகிறது.

# கமல் ரசிகை

'வானவில்' படத்தில் அர்ஜுன் ஜோடியாக அறிமுகமான அபிராமி, கமலஹாசனின் தீவிர ரசிகையாம்.

கமலின் 'குணா' படத்தை 30 தடவைகள் பார்த்துள்ளாராம் அபிராமி. 'வானவில்' படத்திற்காக திவ்யா என்ற தனது சொந்தப் பெயரை அபிராமி என்று மாற்றியதற்குக் காரணம் 'குணா'வில் கமல் அடிக்கடி 'அபிராமி... அபிராமி...' என்று உச்சரித்ததனால் தானாம்.




# காதோடு சொல்லுகிறோம்

வேற்றுமொழிகளில் இருந்து தமிழில் நடிக்க வரும் நடிகைகள் தமக்கு வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுப்பதற்காக சில நடிகர்களை வளைத்துப் போட்டு வைத்திருப்பார்கள். இந்தப் பட்டியலில் புதிதாய் இடம் பிடித்திருப்பவர் மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்து நடிப்பில் 'சபாஷ்' வாங்கிய நடிகையாம். முன்னணி நடிகர் ஒருவர் இவருக்குப் பலமான சிபார்சு செய்து வருகிறாராம்.

இமய இயக்குநரின் வாரிசான அந்த இளம் நடிகர் வில்வித்தைக்காரர் பெயரில் உருவாகும் படத்தில் அறிமுகமாகும் வட இந்திய இறக்குமதியுடன் வாலாட்டியபடி இருந் தாராம். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நடிகை ஒரு கட்டத்தில் கொதித்துப்போய் கொட்டித் தீர்த்து விட்டாராம். அப் படத்தை இயக்கும் மூன்றெழுத்து இளம் இயக்குநர் இடையில் புகுந்து நடிகையை அமைதிப்படுத்தினாராம்.

தீபாவளிக்கு வெளியான சூப்பர் நடிகரின் மூன்றெழுத்துப் படத்தில் தாடி இயக்குநர் தனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லையே என்ற கோபத்தில் இருக்கிறாராம் நீலாம்பரி நடிகை. தனக்குத் தொடர்ந்து வாய்ப்புக் கொடுத்தால் தான் தயாரிக்கும் படத்தை இயக்கும் வாய்ப்பைக் கொடுப்பதாக ஆசையும் காட்டியிருந்தாராம் நடிகை. தாடி இயக்குநர் சொன்னபடி செய்யாதால் வேறு ஒரு இயக்குநரை வைத்துத் தனது சொந்தப்படத்தைத் தொடங்கி விட்டாராம் நடிகை.

நட்சத்திரக்குடும்பத்திற்கு போட்டியாக இறங்கி விட்டாராம் ரமில் நடிகை. திரையுலகப் புள்ளிகள் கலந்து கொள்ளும் பார்ட்டியை நடத்திப் புகழ்பெற்றவர்கள் நட்சத்திரக் குடும்பத்தினர். இப்போது அவர்களுக்குப் போட்டியாக தனது வீட்டில் அடிக்கடி பார்ட்டி வைத்து திரையுலகப்புள்ளிகளை ஒன்று கூட்டி வருகிறாராம் நடிகை.

## வி.சி.குகநாதனின் 'வாராய் என் தோழி'

தெலுங்குப் பட நிறுவனம் ஒன்று முதல் முதலாக தமிழில் தயாரிக்கும் படம் 'வாராய் என் தோழி'. லிவிங்ஸ்டன்-ரோஜா-மும்தாஜ் உட்பட பலர் இதில் நடிக்கின்றனர்.

தமிழில் பல படங்களை இயக்கிய வி.சி.குகநாதன் உருவாக்கும் இப்படத்திற்கு இசையமைக்கிறார் சந்திரபோஸ். வி.சி.குகநாதனின் வித்தியாசமான கதையமைப்போடு உருவாகும் இப்படம் வரும் தைப்பொங்கல் தினத்தன்று வெளியாகவுள்ளது.

## ஐஸ்வர்யாவுக்குப் பதில் ரம்யா

ஒளிப்பதிவாளர் ஜி.எச்.அசோக் என்பவர் இயக்கத்தில் உருவாகும் 'மேடம்' என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கவிருந்த ஐஸ்வர்யாவுக்குப் பதிலாக ரம்யா கிருஷ்ணன் நடிக்கவுள்ளார்.

மாணவன் ஒருவன் ஆசிரியை மேல் காதல் கொள்ளும் கதையுடைய இப்படத்தின் கதாநாயகி மாற்றப்பட்டது போல், படத்தின் பெயரும் மாற்றப்பட உள்ளது.

## திடுக்.... திடுக்.....படம்

'துரோகம் 2 ' படத்தை அடுத்து பிரேம் தயாரித்து இயக்கி நடிக்கும் படத்திற்கு 'ராஜ ராஜன்' என்று பெயரிட்டுள்ளார்.

இது முழுக்க முழுக்க கிராமத்தைச் சுற்றி நடக்கும் திடுக்... திடுக்.... திருப்பங்களுடன் கூடிய மர்மப் படமாம்.

## மோனல் அறிமுகமாகும் படம்

'காதலர் தினம்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான குனால்-சிம்ரனின் தங்கை மோனல் ஜோடியாக நடிக்கும் படம் 'பார்வை ஒன்றே போதுமே'. இவர்களுடன் ராம்ஜி, தாமு, வையாபுரி உட்பட பலர் இதில் நடிக்கிறார்கள். 'பெரியண்ணா' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான பரணி இப்படத்திற்கு இசை அமைக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் புதியவரான முரளி கிருஷ்...



பிரசாந்த்-ஷாலினி-கோவை சரளா படம்: பிரியாத வரம் வேண்டும்



## அஜித் கார் கொடுக்கத் தடை

தன்னை வைத்து 'வாலி', 'அமர்க்களம்', 'முகவரி' ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர்களுக்குக் கார் பரிசளித்தார் அஜித்குமார். இவற்றின் பின்னும் தன்னை வைத்துப் படங்களை இயக்கும் இயக்குநர்களை மகிழ்விக்கும் முகமாக விலை உயர்ந்த பரிசுகளை வழங்கி வந்தார் அஜித்.

இப்போது 'தீனா' படம் நன்றாக வந்திருப்பதால் அதன் இயக்குநர் முருகதாஸிற்குக் கார் ஒன்றைப் பரிசளிக்க நினைத்திருந்தார் அஜித். இதை மனைவி ஷாலினியிடமும் கூறியிருக்கிறார். இனிமேல் யாருக்கும் கார் பரிசளிக்கக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார் ஷாலினி.

## மினி சினி

✦ 'நீ வருவாய் என' உட்பட சில படங்களில் கௌரவ வேடத்தில் நடித்துள்ள அஜித்குமார், இப்போது 'என்னைத் தாலாட்ட வருவாளா' என்ற படத்தில் கௌரவ வேடத்தில் நடித்து வருகிறார்.

✦ அருண்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'புத்தன்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க திவ்யா உன்னியை ஒப்பந்தம் செய்திருந்தார்கள். இப்போது திவ்யா உன்னிக்குப் பதில் மாளவிகா நடிக்கிறார்.

✦ 'சேது' பாலா இயக்கத்தில் 'நந்தா' படத்தில் நடித்து வருகிறார் சூர்யா. இதையடுத்து இவர், இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் இயக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

✦ 'வானத்தைப் போல' படத்தைத் தயாரித்த ஆஸ்கார் ஃபிலிம்ஸ் நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படமொன்றில் விஜய் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். சரண் இயக்கும் இப்படத்தில் இந்தி நடிகை ஒருவர் விஜய் ஜோடியாக நடிக்கவுள்ளார்.

✦ பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'சூப்பர் குடும்பம்' என்ற படத்தில் ரோஜா, சங்கீதா(ரசிகா) நாயகிகளாக நடிப்பதாக இருந்தது. இப்போது சங்கீதாவை நீக்கி விட்டு 'மனுநீதி'யில் நடிக்கும் பிரதிக்ஷாவைப் போட்டுள்ளனர்.

✦ சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் கமல் இரட்டை வேடத்தில் நடிக்கும் 'ஆளவந்தான்' தமிழில் வெளியாகும் அதே தினத்தில் இந்தியிலும் வெளியாகவுள்ளது. இந்தியில் இப்படம் 'அபய்' என்ற பெயரில் வெளியாகவுள்ளது.

✦ பிரபு தேவா ஜோடியாக 'டைம்' படத்தில் அறிமுகமான ராதிகா சௌத்ரி இப்போது 'உள்ளத்தைக் கிள்ளாதே' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் தோன்றி கவர்ச்சி நடனமாடியுள்ளார்.

✦ அர்ஜுனை வைத்து 'சாது' என்ற படத்தை இயக்கிய பி.வாசு மீண்டும் அர்ஜுனை நாயகனாக வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார். இப் படத்திற்கு 'வலது கை' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## சிவாஜி வேடத்தில் ராஜ்கிரண்?

'சேது' பாலா இயக்கும் 'நந்தா' படத்தில் சற்று ...வித்தியாசமான வேடத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ...போவதாகச் செய்திகள் வெளிவந்தன. இப்போது சிவாஜி ...த்தில் ராஜ்கிரண் நடிப்பார் எனச் செய்திகள் அடிபடுகின்றன.

## ...படியும் இயக்குகிறார்

...' வழியாக சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்டு பலரது ...யும் பெற்ற பாலுமகேந்திராவின் 'கதை நேரம்' நிறைவடைந்து ...

...ர்ஸ்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த 52 வாரத்தொடரை ... செய்யும்படி சன் தொலைக்காட்சி நிறுவனம் கேட்டுக் கொண்டும் ...டார் பாலுமகேந்திரா.

...'கதை நேரம்' தொடரைத் தயாரித்த 'மீடியா ட்ரீம்ஸ்' நிறுவனத்திற்காக ... இயக்குநராகவுள்ளார். இம்முறை இவர் இயக்குவது சின்னத்திரைக்காக ...ரியதிரைக்காக.

...ி படத்தை அடுத்து 'மீடியா ட்ரீம்ஸ்' தயாரிக்கும் இந்தத் திரைப் ...ாத்தின் நாயகனாக நடிப்பார் எனத் தெரிகிறது.

## புது வரவு கொட்டாச்சி

'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் விவேக்கின் பின்னால் வேட்டியைத் தூக்கிப்பிடித்தபடி அலையும் நகைச்சுவை நடிகரின் பெயர் கொட்டாச்சி.

அப்படத்தின் பின் விவேக்குடன் 'பாளையத்து அம்மன்' படத்தில் இணைந்து நடித்த இந்தக் கொட்டாச்சியின் சொந்த இடம் பொள்ளாச்சி.

நடிப்பு ஆசையில் சென்னைக்கு ரயிலேறிய கொட்டாச்சி இப்போது 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்', 'வாஞ்சிநாதன்', 'ப்ரண்ட்ஸ்' என்று பெரிய நடிகர்களின் படங்களில் எல்லாம் நடித்து வருகிறார்.

## ஹைடெக் கமல்

'ஹேராம்' கமலின் கையைக் கொஞ்சம் அதிகமாகக் கடித்து விட்டாலும் 'ஆஸ்கார்' போட்டிக்கு அது தெரிவாகி அவரது வலியைக் கொஞ்சம் மறக்கடித்திருக்கிறது.

அண்மையில் வெளியான 'தெனாலி'யும் நன்றாக வசூல் செய்து கொண்டிருக்கிறது.

அடுத்து கமல் நடிக்கும் 'ஆளவந்தான்' ஷங்கர் இயக்கத்தில் நடிக்கும் 'ரோபோ', கதிர் இயக்கத்தில் நடிக்கும் பெயரிடப்படாத படம் எல்லாம் கம்ப்யூட்டர் உட்பட உயர்தொழில்நுட்பத்தில் தயாராகும் ஹைடெக் படங்கள் ஆகும்.

# இளம் புறாக்கள்

தமிழ்த் தோட்டத்தில் தளிர்த்த
ரோஜாக்கள்!
சிட்டுக்குருவிகளாய் சிறகடித்துப்
பறந்தவர்கள்!
வாழ்க்கையின் எல்லைக்குள்
காலடி வைக்கையில்!
வட்டமிட்ட வல்லூறுகளின்
தொட்டில் குழந்தை
சந்தேகப் பேயின் சவுக்கடியால்
சருகாகிப் போனவர்கள்!
இருபத்தொன்பது இளம்புறாக்கள்
இரும்புக்கரங்களின் இம்சிப்பால்
பிணமாகிப் போயினவே பிந்துனுவெவில்!

இளவழுதி-திருமலை.

# உறவைத் தேடும் சிறுமி

தமிழ்ச் சிறுமியா-நீ?
உன் முகம் சோகமாய்த் தள்ளாடுதே?
சிறார்களுடனும் சிரித்து
துள்ளி விளையாடிய முற்றம்
எங்கே?
விடுதலைக் கதை சொல்லிய
வீரத்தை உணவுடன்
ஊட்டிய உன் அன்னை
எங்கே?
மாலையில் மறைந்து போகும்
சூரியனுக்கு கண்சிமிட்டி விட்டு
தலை குனிந்திடும் மலர்களை
காட்டி ஊஞ்சல் ஆட்டி
கதை சொல்லும் தந்தை
எங்கே?
பள்ளிக்குச் செல்லும் போது,
பாதை வழியில் செல்லும்
உறவுகளுக்கு கை அசைத்து
செல்வாய்-அந்த உறவுகள்
எங்கே?
மௌனமாய் ஏன்
சிறுமி இருக்கிறாய்-நீ
பள்ளி முடித்து
பசியுடன் வீடு வந்தாய்- ஓ....
உன் குடிசையையும்
உன் உறவையும் காணாது தேடுகிறாயா?
அந்த அரக்கனின் கழுகுப் பறவை
பறந்து உனது உறவுகளை
கொத்தி விட்டுச் சென்றுவிட்டதா?
ஆ...
சிறுமியே, உன்னைப் போல்
எத்தனை சிறுமிகள்-இந்த
ஈழத்தில் உறவுகளை தேடுகிறார்கள்....?

சி.றஜனி-கிளிநொச்சி.

# வடுக்கள்

வானம் அழுது கொண்டே இருந்தது
அந்த அகதிகளுக்குப் பதிலாக
யுத்தத்தின் அனர்த்தங்களை
இவர்களும் கேட்டுள்ளனர்-
செய்திகளாகத் தான்!
***
யாருடைய முகங்களும் விடியவில்லை
அந்த நீண்ட இரவின்
விடியலுக்குப் பின்னரும் கூட.....!
அன்று அவர்களும் வெளியாகியிருந்தனர்;
அகதி என்ற அந்தஸ்தோடு
இன்றைய புதிய செய்தியாக.
***
பாவம் இவர்களது கால் நடைகள்!
வேறு எந்த ஞாபகமும் வரவில்லை;
இவர்களும் கால் நடையாகத் தான்
நேற்றைய இரவில் ஓடி வந்தார்கள்!
***
யாரையோ எதிர்பார்க்கிறார்கள்-
வாக்குக் கேட்ட பிரதிநிதிகள்
வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில்;
பாவம் ஆறுதலை மட்டும் தானே
அவர்களாலும் கூற முடியும்....!?
***
வருகிறது வாகனம்; அதில்
பிரதிநிதிகள் அல்ல-பிரேதங்கள்!
நேற்றைய 'ஷெல்'லில் சிதறிப் போன
சின்னாச்சியும் அவள் பேத்தியும்!
***
ஆயுதத்தைப் பற்றி அறவே தெரியாத
அப்பாவிகளின் மரணங்களே
நாளையும் வரும்-
போர்முனைச் செய்தியாக!
நேற்றுவரை வீட்டோடு
நிம்மதியாய் இருந்தோம்;
யாரோ வெற்றி பெற
வேறோர் இடத்திற்கு விரட்டப்பட்டோம்!
இப்படித் தான் அழுகிறார்கள்-
என் ஊர்க்காரர்கள்!
***
அழுது அழுது
வீங்கிய முகங்களுக்குள்
நேற்றைய பதற்றம்
பரவிக்கிடக்கிறது.
சண்டையை விரும்பவில்லை
இந்தச் சாதாரண மக்கள்!
***
சத்தியமாய் தெரிகிறது
சண்டையின் மூலம் தீர்வு
சாத்தியமில்லை என்பது...!
சாட்டுக்கேனும் சண்டைபோடும்
சாத்தான்களுக்கு இது தெரியாது
போகுமோ தெரியலையே!
***
இன்னும் கொஞ்ச நேரம் இவர்களோடு
இருந்துவிட்டுப் போகத் தான் ஆசை!
இருட்டிவிட்டால் வருவார்களாம்
இழவு வீட்டுவிருந்தாளிகள்!
***
தொடர்ந்து நிற்பது நல்லதல்ல,
நான் போவதையே பொதுவாக
எல்லோரும் விரும்புகிறார்கள்!
நாளைய விடியலில் வரும் போது
இதில் எத்தனை பேரை
மீண்டும் பார்க்க முடியும்....?
விடையில்லா வினாக்களைச் சுமந்தவாறு
பிரிகின்றோம் நானும் என் உறவுகளும்!

திருமலை-தாமரை மகன்.

# யுத்தமே! சிந்தனை செய்துபார்!

யுத்தமே!
நீ
கொஞ்சம்
சிந்தனை
செய்துபார்!
***
நீ
வெடிப்பதனால்
எங்கள்
மானிட
யுகங்கள்
மரணித்துக்
கொண்டிருக்கின்றன.
***
உன்
கோரப்பிடிக்குள்
விழுங்கப்படும்
மனித-உடல்களின்
எண்ணிக்கை
புள்ளி விவரங்களாக
தொடர்பு சாதனங்களில்
சிறிது நேரம்
சமிஞ்ஞை
செய்வதோடு
முடிந்து
விடுகிறது....!
***
உன்
கரங்கள்
நீளுவதால்
எத்தனையோ
மனித-முகவரிகள்
அகதிமுகாம்களாகி
விட்டன.
நீ
நீண்டகாலமாக
வசித்து விட்டுப்
போவதனால்
சோற்றுக்கு
ஏங்கும்
சோமாலியாக்களும்
விடிவுக்காக-வாடும்
பலஸ்தீனங்களும்
அதிகரிக்கின்றன.
***
ஏன்?
யுத்தமே-நீ
கொஞ்சம்
சிந்தனை
செய்துபார்...!
***
நீ
வாழவேண்டும்
என்பதற்காக
சமாதானப்
பேச்சுவார்த்தைகளை
தலைப்பிலேயே
முடித்து விடாதே!
***
ஆயுதத்தால்-உன்
வயிற்றை
நிரப்ப வேண்டும்
என்பதற்காக
மனிதத்தை
அழித்து விடாதே!
***
எங்கள்-அருகில்
மட்டுமல்ல,
தொலைவில்-கூட
நிற்காதே!
இந்த
உலகத்தை விட்டே
வெகு தூரம்
சென்று விடு! ஏனெனில்
எங்கள்
மனிதம்
வாழ வேண்டும்!

எம்.ஏ.ஜமானியா-
காத்தான்குடி-06.

# எதைக் கொடுமையென்பது

பெண்ணாகப் பிறந்து
பெரியவளாகி
பெரியோர்களின் கண்டிப்பு
என்ற பெயரில்
அடிமையாகிவிட்டதை
கொடுமை என்பதா?
***
திருமணம் என்ற
பெயரில்
பொருளையும் வாங்கி
பணத்தையும் வாங்கும்
புதிய வியாபார
பொருள்களாய்
ஆகிவிட்டதை
கொடுமை என்பதா?
***
பணத்தையும் பெற்று,
பொருளையும் பெறுபவர்கள்
அதைப் பாதுகாக்காது
பரிதவிக்க விடுவதைத் தான்
கொடுமை என்பதா?
எதைக் கொடுமையென்பது?

கே.எஸ்.மலர்-
பின்னோகமாவை.

# தேன் கிண்ணம்

# கடைசியாசை!

என்னுயிரே...!
உன்னை-நான்
காதலித்ததை,
மெச்சுகிறேன்!
***
உன்னால்...,
தர முடிந்ததையெல்லாம்,
எனக்குத் தந்தாய்!
***
உனக்கு-நான்
கொடுக்க முடியாததை,
கேட்போருக்கு,
கொடுப்பதற்காக-உன்
உடலுறுப்பை விற்க
முனைகிறாய்!
***
நீ....,
வெறுக்கும்!
சீதனத்தை,
நானும் வெறுக்கிறேன்!
***
ஆனால்....,
அதை-இன்னும்
உலகம்,
வெறுக்கவில்லை!
***
என்னை
உன்னுடன் இணைக்க,
சீதனப்பாலத்தை,
கட்டுவதற்கு-உன்
உடல் கட்டமைப்பை
மாற்றுவதற்கு-நான்
சம்மதிக்க மாட்டேன்!
***
பாலத்தை அமைக்கும்
முன்பே-நான்
மடிகிறேன்-நீ
மடிகனமுள்ளவளை,
மணந்து....,
மனப்பூர்வமாய்,
வாழ வேண்டும்
என்பதே-என்
கடைசியாசை!

மு.சசிகலா-
கோமாரி-01.

# வித்தியாசமான போட்டி



மீசை இல்லாத



நிஜ மீசையுடன்

சந்தனக்கடத்தல் வீரப்பன் என்றால் பலருக்கு வீரப்பனது கடா மீசைதான் உடனே ஞாபகத்துக்கு வரும்.

வீரப்பனால் நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதும் வீரப்பனின் பெயர் எல்லா இடங்களிலும் பரவி விட்டது. இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து வெளியாகும் 'பாலரமா' என்ற குழந்தைகள் இதழ் வீரப்பனை வைத்து வித்தியாசமான போட்டி ஒன்றை நடத்தி விட்டது.

'பாலரமா' இதழில் மீசை இல்லாத (கம்பியூட்டர் முலம் மீசை நீக்கப்பட்ட) வீரப்பனின் புகைப்படத்தைப் போட்டு வீரப்பனுக்கு வித்தியாசமான வகையில் புதிய மீசை வரைந்து அனுப்பும்படி பிரசுரித்தது.

இப்போட்டியில் வீரப்பனுக்குப் பொருத்தமான மீசை வரைந்து அனுப்பும் 12 வயதுக் குட்பட்ட சிறார்களுக்கு விலையுயர்ந்த பரிசுகளும் வழங்கப்படவிருப்பதாக அறிவித்துள்ளது.

# நில்–கவனி–முன்னேறு

★ உங்கள் பணம், பதவி, படிப்பினால் சாதிக்கத் தவறியவைகளை இனிமையான பேச்சினால் வசப்படுத்திக் கொள்ள முடியும்.

★ மற்றவர்களிடம் சிநேகமாய் சிரித்து, அன்பாய் வெளிப்படுத்தும் வார்த்தைகள் ஏற்படுத்தும் நெருக்கத்திற்கு ஈடாக வேறு எதையும் செய்ய முடியாது.

★ 'மனம்போல் வாழ்வு' இனிய மனத்திலிருந்து இனிய வார்த்தைகள். உத்தரவாதமான இனிய வாழ்க்கை.

★ சிறு தவறு செய்தவரை கடுஞ் சொற்களால் தண்டிப்பதை விடுத்து, இன்சொற்களால் பெருந்தன்மையாய் தவறை உணர வையுங்கள்.



★ இனிமையாய் பேசுவதென்பது முதலீடேயில்லாமல் இலாபம் தரக்கூடிய செயல்! பிறகு ஏன் தயக்கம்? உடனடியாய் செயல்படுத்துங்கள்.

★ அதிகாரத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டவை. அன்பிற்கு வரையறையில்லை. எல்லையில்லா ராஜ்ஜியத்திற்கு எஜமானன் ஆவதற்குத் தொடர்ந்து செயல்படுங்கள்.

★ தினமும் காலையில் எழுந்தவுடன், இந்த நாள் இனிய நாள். நல்லநாள், அன்பிற்கான நாள். அன்பை மாத்திரமே வெளிப்படுத்த வேண்டும் என்று மனத்திற்குள் சொல்லிப் பழகுங்கள்.

★ உங்களினும் பெரியவரிடத்தில் மட்டுமல்லாது சிறியவரிடத்தும் வெளிப்படுத்தும் அன்பே உங்களுக்குச் சிறப்பைத் தரும்.

★ யார் முதலில்? என்ற போட்டிக்கு இடம் தராமல், அன்பை முதலில் வெளிப்படுத்துகிறவர் நீங்களாகவே இருங்கள்.

★ உங்களுடன் சிறிய மன வருத்தம் அல்லது மனஸ்தாபத்திலிருக்கும் சக அலுவலர் அல்லது நண்பரிடத்தில் நீங்கள் இயல்பாக வெளிப்படுத்தும் பகைமை பாராட்டாத நல்லவார்த்தைகள் வீணான சங்கடங்கள், தேவையில்லாத பிரச்சனைகளிலிருந்து உங்களை விடுவிக்கும்.


★ உறவினரோ, சக நண்பரோ உடல் நலமில்லாதிருக்கும்போது நீங்கள் வெளிப்படுத்தும் உற்சாகமான பேச்சு அவர் உட்கொள்ளும் எல்லா மருந்துகளை விடவும் சீரியதாய் செயல்பட்டுப் பயனளிக்கும்.

★ அவர் கோபப்பட்டதால் தான் நானும்... என்று மற்றவரின் இயல்பை நீங்கள் பெறுவதற்குப் பதிலாக, அமைதியாய் இருப்பதன் மூலம் உங்களின் நல் இயல்புகளுக்கு அவரை மாற்றுங்கள்.

★ எல்லா சந்தர்ப்பங்களிலும் உங்கள் தரப்பு நியாயங்களை மாத்திரம் நினைத்து செயல் படாமல், மற்றவர் தரப்பு நியாயங்களையும் உணர்ந்து செயல்படுவதன் மூலம் உங்களின் கடுங்குணங்கள் மட்டுப்பட்டு நற்குணங்கள் வெளிப்படும்.

★ அன்பு இனிமையெல்லாம் பயிற்றுவிக்கப்பட்டு வருவதல்ல! அன்றாடச் செயல்களினூடே பழக்கத்தில் வர வேண்டும்.

# பேனா நண்பர்கள்



பெயர்: எஸ்.கபீர்
வயது: 20
முகவரி: காக்கா முனை-6
கிண்ணியா
பொழுது போக்கு:
பத்திரிகை,
தொலைக்காட்சி.



பெயர்: கே.சாந்தினி
வயது: 17
முகவரி: 136, சிதம்பரபுரம்
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனாநட்பு.

# இந்தவாரம் உங்கள் பலன்

10.12.2000 முதல் 16.12.2000வரை

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம் :**
மகிழ்ச்சியான வாரம். கடன் தொல்லைகள் நீங்கி பணவரவு கிட்டும். சண்டை சச்சரவுகள் எனபன குறையும். பரீட்சை முடிவுகள் கல்வி முன்னேற்றங்கள் பலன் தரும். புதன்கிழமை பெரிய வருமான வசதிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 12, 16.

**இடபம் :**
தொழில் மூலம் வருமான வசதிகள் பெருகும். நினைத்த காரியங்கள் நடைபெறும். எனினும் நோய்துன்ப மருத்துவச் செலவுகள் காணப்படும். திருமணப் பேச்சுகளில் தடைகள் நீங்கி, நல்ல சுபகரும காரிய முடிவுகள் வார இறுதியில் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 13, 14.

**மிதுனம் :**
மனதில் அச்சம் காணப்படும். தொழில் தடங்கலால் பணத் தட்டுப்பாடு ஏற்படும். வெளியோரின் உதவிகள் கிட்டும். சில செய்திகளால் நன்மை ஏற்படும். இரும்பு, அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர்கள் பெரிய நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 11, 16.

**கடகம் :**
பல பிரச்சனைகள் குறையும். சகோதரர்களின் உதவி கிட்டும். வெளியிடச் செய்திகளால் நிம்மதி கிடைக்கும். புதிய பொருட்கள் வந்து சேரும். பயண முயற்சிகள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**சிம்மம் :**
மனதில் நிம்மதியும், முன்னர் இருந்த கஷ்டங்கள் தீர்வதுடன் பிரச்சனைகள் முடிவுக்கு வரப்பெறும். பெரிய வெற்றிகள் பணவசதிகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலை தென்படும். மக, பூர நட்சத்திரருக்கு பயண வாய்ப்புக்கள் உள்ளன.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

**கன்னி :**
குடும்ப அங்கத்தவர்களால் தொல் லைகள் ஏற்படும். கல்வி மற்றும் முக்கிய முடிவுகளில் சிக்கல்கள் வரப்பெறும். சிறுவர் களுக்கு நல்ல வசதி வாய்ப்பு, பெயர் புகழ் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் எதிர்கால வாய்ப்புகள் நன்றாக இருக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

**துலாம் :**
கவலைகள் நீங்கும். நெடுநாள் காதல் திருமணப் பிரச்சனைகள், முடிவுபெற்று நல்ல மகிழ்ச்சி தரும். எதிர்பார்த்த முக்கிய விடயங்கள் கைகூடும். பணச்செலவும் வரவு மாக அமையும். சுவாதிக்காரர் குடும்பசந் தோஷம் கொள்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண் நிறம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

**விருச்சிகம் :**
செயற்பாடுகள் வெற்றியாக அமையும். நோய்துன்ப நிவர்த்தி காட்டும். குடும்பத்தில் உள்ளவர்களின் பயண முயற்சிகள் முழுமையாகத் தொடரும், கேட்டைக்காரர் பணவசதியும் புகழும் அடை வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்

**தனுசு :**
பயண முயற்சிகள் இருப்பிடமாற்றம் என்பன மேற்கொள்ளக் கூடும். கல்வி முயற்சிகள் சீராக அமையும். எதிர் பார்த்த முடிவுகள் நன்றாக அமையும். பணவசதிகள் பெருகும். முத்த சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : கருநீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

**மகரம் :**
புதிய நண்பர்கள் உறவினர்கள் சந்திப்புக்கிடமுண்டு. முக்கிய திட்டங்கள் நடைமுறைக்கு வரக்கூடிய நிலை தென்படும். உடல்நிலை இடையிடை பலப்படையும். திருவோணக்காரர் குடும்பவசதிகள் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 11, 15.

**கும்பம் :**
அலைச்சல், செலவுகள் தென்படும். முடிவுகளில் மாறுபாடுகளைக் கொடுப்பதுடன், எதிரிகள் செயற்பாடுகளில் சிக்கல்கள் வரப்பெறும். கல்வி, பரீட்சை முடிவுகள் பரீட்சைகள் வெற்றி தரும். சதயக்காரர் கவனமாக செயற்படவும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**மீனம் :**
பிரயாண ஏற்பாடுகள் மும்முரமாக அமையும். பல சந்தோசமான முடிவுகள் எடுக்கும் காலமாக அமையும். பிரிந்த சகோதரர்கள் ஒன்று சேர்வார்கள். ஆலயதரிசனமும் பெரியோர்களின் ஆசீர்வாதமும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 11, 12..

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## மசக்கையைத் தவிர்க்க...



கருத்தரித்த 3 மாத காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் வாந்தி, குமட்டல் போன்ற கோளாறுகளுக்கு 'மசக்கை' என்று பெயர். இதை ஆங்கிலத்தில் 'மோர்னிங் சிக்னஸ்' என்பார்கள்.

காலையில் எழுந்ததில் இருந்து வயிறு குமட்டல், வாந்தி போன்றவை ஏற்படும். சாப்பிடப் பிடிக்காது. சில உணவுப் பொருட்களை நிறையச் சாப்பிடவும், சில பொருட்களை வெறுக்கவும் தோன்றும்.

படுக்கை அருகில் கொழுப்புச் சத்தற்ற கோதுமை பிஸ்கட்களை வைத்துக் கொள்ளவும். காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குமட்டல் ஏற்படும். அதற்குமுன்பாக ஒரு மணி நேரம் இரண்டு பிஸ்கட்டுக்களையாவது சாப்பிட்டு விடவும். அதற்குப் பிறகு அரைமணி நேரமாவது ஓய்வாகப் படுக்கையிலேயே படுத்திருந்து விட்டுப் பிறகு மெதுவாக எழுந்திருக்கவும்.

நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை பெரிய அளவில் நிறைய உணவு சப்பிடுவதை விட, சிறு சிறு அளவுகளாகக் குறைந்த கால இடைவெளியில் சாப்பிடுவது நல்லது.

கூடுமானவரை மாவுச்சத்து, புரதம் மிகுந்த உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

சோயா பீன்ஸ், பச்சைப்பயறு கலந்த உணவு, தோசை, இட்லி. இடியப்பம், அப்பம் போன்ற உணவு வகைகள் நல்லது.

கொழுப்புச்சத்து மிகுந்த மசாலா சேர்த்து வறுத்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அதிகம் வாந்தி எடுத்தால் நீர்ச்சத்து குறைந்திருக்கும். அதனால் நிறைய தண்ணீர் குடிக்கலாம். சாப்பிடும் சமயத்தில் மட்டும் நீர் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

குமட்டல் அதிகமாக இருந்தால் எலுமிச்சம்பழத்தை நறுக்கி அந்த மணத்தை நுகரலாம். பால் கலக்காத தேனீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடிக்கலாம்.

இஞ்சியைத்தட்டி, சாறு எடுத்து அத்துடன் எலுமிச்சம்பழச்சாறு கலந்து சிறிதளவு பருகி வர வாந்தி எடுப்பது குறையும். தேனீரிலும் சிறிதளவு இஞ்சி தட்டிப்போட்டு பருகலாம்.

கருவுற்ற பெண்கள் மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். கவலைப்படக்கூடாது. அதிக பதற்றம், கவலை போன்றவற்றாலும் 'மோர்னிங் சிக்னஸ்' ஏற்படும் என்று கூறப்படுகிறது.

## கண்களைச் சுற்றி கருவளையமா?



சில பெண்களுக்கு கண்களைச்சுற்றி கரு வளையம் ஏற்படும். சிலருக்கு மரபு வழியாக கருவளையம் ஏற்படும். சிலருக்கு தூக்கமின்மை, மன அழுத்தம், ஓய்வின்மை போன்றவற்றால் கருவளையம் ஏற்படும். இந்த கருவளையத்தை போக்க சில எளிய வழிகள் மூலம் முயற்சிக்கலாம்.

❊ பாதாம் கிரீம்கள் அல்லது பாதாம் எண்ணெய், ஆகியவற்றை இரவில் தூங்கப் போகும் முன்பாக பூசிக் கொண்டு படுக்கவும்.

❊ பால் ஏடு எடுத்து இதில் பன்னீர் சேர்த்து நன்கு கலந்து அதை பூசிச் சிறிது நேரத்தில் பாலில் தோய்த்த பஞ்சின் மூலம் சுத்தம் செய்யலாம். இவ்வாறு அடிக்கடி செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

❊ பாலேட்டுடன் வெள்ளரித்துருவல் சேர்த்து பூசலாம். அல்லது உருளைக்கிழங்கு துருவல் சேர்த்து பூசலாம்.

❊ பப்பாளிப்பழம் பால் கலந்து பசை போலாக்கி தடவலாம்.

❊ உருளைக்கிழங்கு வில்லை மற்றும் வெள்ளரி வில்லைகளை கண்களின் மீது வைத்துக்கொண்டாலும் நல்ல பலன் கிடைக்கும்.

❊ மசாலா உணவுகளை தவிர்க்க வேண்டும்.

❊ பச்சை காய்கறி சாலாட், பழங்கள் நிறைய சாப்பிட வேண்டும்.

❊ மருத்துவரிடம் ஆலோசனை பெற்று, விட்டமீன் ஈ சத்து மாத்திரைகள் சாப்பிட்டு வரலாம். அல்லது விட்டமின் ஈ கிறிம்களை கருவளையம் மீது தடவலாம்.

❊ நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். தேனீர், கோப்பி அதிகம் குடிப்பதை தவிர்க்க வேண்டும்.

❊ இரவில் நிம்மதியாகத் தூங்க வேண்டும்.

❊ தூசி நிறைந்த சூழலில், கடும் வெயிலில் சுற்றவதை தவிர்க்க வேண்டும்.

❊ சூரிய ஒளியில் வெளியே செல்லும்போது குளிர்கண்ணாடி அணிந்து செல்வது நல்லது.


❊ புத்தகங்கள் படிக்கும் போது, வெளிச்சம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கக் கூடாது. சரியான அளவில் வெளிச்சம் இருக்க வேண்டும்.

❊ மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❊ காலையிலோ, மாலை அல்லது இரவில் தூங்கப் போகும் முன்பாகவோ சிறிது நேரம் நடை பயிற்சி செய்து வருவது நல்லது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IS

பெயர்:............................

முகவரி:............................

............................

தொழில்:............................

கையொப்பம்:............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-12-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

**66**

# மோனிக்கா என் மோனிக்கா

தன்னுடைய உற்ற சினேகிதியாகக் கருதி கிளின்ரனுக்கும் தனக்குமிடையில் ஏற்பட்ட நெருக்கமான உறவுகளைப் பற்றி லிண்டா ட்ரிப்பிடம் ஒளிவு மறைவு இல்லாமல் மோனிக்கா கூறியிருந்தாள். கிளின்ரனுடன் ஏற்பட்ட உறவு பற்றி நினைக்கும் போதெல்லாம் இன்பக்கிளுகிளுப்பில் மிதந்து கொண்டிருக்கும் மோனிக்கா, அவற்றையிட்டு லிண்டாவிடம் கூறும் போதும் ஒரு தனி மகிழ்ச்சியைப் பெற்றாள்.

இந்த இன்ப நெகிழ்ச்சிலேயே லிண்டா ட்ரிப்பிடம் இரைமீட்டி இரசிப்பதைப் போல் றிட்ஸ் கார்டன் உணவு விடுதியில் வைத்து லிண்டாவிடம் சகலவற்றையும் சொன்னாள். இவ்வாறு ஜனவரி மாதம் 13ம் திகதியன்று கூறியதனால் ஏற்படப் போகும் பின் விளைவுகளைப் பற்றி மோனிக்கா எதுவுமே அறிந்திருக்கவில்லை.

ஜனாதிபதி கிளின்ரனுக்கு எதிரான வைற் வோட்டர் காணி விவகாரத்தில் கிளின்ரனுக்குக்கும் அவர் மனைவிக்கும் எதிராக மாட்டி விடுவதற்காக கென்னத் ஸ்ரார் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் கிளின்ரன் மோனிக்கா விவகாரம் தொடர்பான சான்றுகள் கென்னத் ஸ்டாரிடம் சிக்கின. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், கென்னத் ஸ்ரார் ஜனவரி 15ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றத்தில் மற்றுமொரு அனுமதியைப் பெற்றார். வைற் வோட்டர் விசாரணைகளுடன் கிளின்ரன் மோனிக்கா தகாத உறவு பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கு உரிய அனுமதியைத்தான் அவர் பெற்றார். இந்த இரு விவகாரங்களிலும் ஜனாதிபதி கிளின்ரனுடைய நண்பரான வேர்னன் ஜோர்டனையும் இணைத்து விடுவதற்கும் ஆதாரங்கள் கிடைத்திருந்தன.

## இருபத்தொன்பது ஆண்டுகள் சிறைவாசம்!



பவுலா ஜோன்ஸ் வழக்கிலும் மோனிக்கா பொய்யான சத்தியக்கடதாசியை சமர்ப்பிப்பதற்கும் ஜோர்டன்தான் மோனிக்காவுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார் என்று நிரூபிக்கவும் வழி கிடைத்திருந்தது.

லிண்டா ட்ரிப் கடந்த சில மாதங்களாக கிளின்ரனுக்கு எதிராக வழக்குகளைச் சோடிக்கும் சுதந்திரவழக்கறிஞர்கள் அமைப்பு மற்றும் F.B.I புலனாய்வுத்துறைஅதிகாரிகள் சிலருடன் இணைந்து பின்னிய சதிவலைக்குள் மோனிக்காவை மாட்டிவிடுவதற்கு பல ஏற்பாடுகளைச் செய்திருந்தாள்.

வேர்ஜியா மாநிலம்- ஆர்லிங்டனிலுள்ள பெண்டகன் சிட்டியில் உள்ள றிட்ஸ் கார்டன் ஹொட்டேல் பத்தாவது மாடி 1012 ஆம் இலக்க அறையில் 1998ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதியன்று மோனிக்காவை அழைத்துக் கொண்டு லிண்டா ட்ரிப் போய்ச் சேர்ந்தாள். மோனிக்கா எதிர்பாராத வகையில் அங்கு பலபுதுமுகங்களைக் கண்டாள். அவர்களில் சிலருடைய முகத்தோற்றத்திலிருந்து அவர்கள் மத்திய புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொண்டாள். தன்னையும் அறியாமல் ஒரு சதிக் கிடங்கில் தன்னுடைய சினேகிதியாலேயே தள்ளப்பட்டு விட்டதாக அப்போதுதான் உணர்ந்தாள். மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் இருவருடன் கென்னத் ஸ்டாரின் சுதந்திர வழக்கறிஞர்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் அங்கு நின்றிருந்தனர்.

மோனிக்கா அங்கு போய்ச் சேர்ந்ததும் அங்கிருந்த ஓர் இருக்கையில் அமரும்படி அவருக்கு சைகை காட்டினார்கள். அமர்ந்து கொண்டதும் தன்னுடைய சினேகிதி லிண்டா ட்ரிப்பை ஒரு தரம் திரும்பிப்பார்த்தாள். அவளுடைய முகத்தில் எத்தகைய உணர்ச்சியையும் மோனிக்காவால் கண்டுகொள்ள முடியவில்லை. இருப்பினும் தன்னை மிக நெருக்கடியான நிலைக்கும் லிண்டாவே மாட்டி விட்டிருக்கிறாள், என்பதை உணர்ந்து கொண்டாள்.

'என்னை ஒரு பயங்கரமான சூழலுக்குள் தந்திரமாக மாட்டிவிட்டிருக்கும் இவள் இங்கிருந்து வெளியேறிப் போகவேண்டியதில்லை. எனக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை இக்கிராதகி இருந்து பார்க்கட்டுமே.'

மோனிக்கா அமர்ந்திருக்கும் போது, கென்னத் ஸ்டார் தலைமையில் இயங்கும் சட்ட வல்லுநர்களுள் ஒருவரான மைக் எம்மிக் என்பவர் மோனிக்காவின் எதிரில் நின்றவாறு அவரைக் கூர்மையாக உற்றுப்பார்த்தாள். ஆறடி உயரமான கரடுமுரடான முகத்தோற்றமுடைய அவரைப் பார்த்ததும் மோனிக்காவுக்கு குலை நடுக்கம் ஏற்பட்டது. எம்மிக் பேச ஆரம்பித்தார். குரல் இனிமையாகத்தானிருந்தது. அவருடைய முகத்தோற்றத்துக்கும் குரலுக்குமிடையில் கடுமையான வேறுபாடு உள்ளது. மிக மென்மையான குரலில் "அட்டோனரி ஜெனரல் ஜெனட் ரேனோ மத்திய அரசின் குற்ற விசாரணைகள் நடத்துவதற்கு பொறுப்பாகவுள்ள சுதந்திர வழக்கறிஞர் அமைப்பைச் சேர்ந்த கென்னத் ஸ்டார் அவர்களுக்கு வழங்கியுள்ள ஆணையின் அடிப்படையில் உம்மை இங்கு தருவித்திருக்கிறோம்!" என்று அழுத்தமாக, ஆனால் மெதுவாக மோனிக்காவிடம் மைக் எம்மிக் கூறினார்.

கென்னத் ஸ்டார் என்ற பெயரைக் கேட்டதும் தலையிலேயே இடிவிழுந்ததுபோல் ஓர் உணர்ச்சி மோனிக்காவுக்கு ஏற்பட்டது. இருப்பினும், 'இந்த மனுசனுக்கு என்னிடம் என்ன வேலை இருக்கிறது. ஜனாதிபதிக்கும் எனக்குமிடையிலேற்பட்ட எனது உறவினை மறைப் பதற்காக நான் முயற்சி எடுக்கிறேன். இந்தச் சிறிய பிரச்சனையில் கென்னத் ஸ்டார் போன்ற ஒருவர் ஏன் தலையிட வேண்டும்?' என்று மோனிக்காவின் உள்ளத்தில் புயல் வீசத் தொடங்கியது.

எம்மிக் மீண்டும் மோனிக்காவிடம் உரையாடத் தொடங்கினார். "மோனிக்கா, நீ பல குற்றங்களை தெரிவித்திருக்கிறாய். நீதி விசாரணைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்திருக்கிறாய். நீதிக்கு விரோதமான சதிதிட்டத்தில் ஈடுபட்டிருக்கிறாய்" என்று சற்றுக் கடுமையாகக் கூறிய எம்மிக், இதற்காக நீ இருபத்தியொன்பது ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கப்பட வேண்டிய தண்டனை உனக்குக் கிடைக்கும்.

இந்தக் குற்றச் சாட்டிலிருந்து நீ விடுதலைப் பெறவேண்டுமானால், விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு ஒத்துழைத்தால், தண்டனை குறைக்கப்படும் அல்லது நீ வழங்குகின்ற உண்மையான தகவல்களின் அடிப்படையில் உனக்கு விடுதலைக்கிடைக்க வேண்டும்!" என்று எம்மில் சொன்னார்.

மோனிக்காவின் உடல் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது. கண்களிரண்டில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் சொட்டியது. தன்னுடைய நிலைபற்றி பின்னர் அவள் விவரித்த போது, எனக்கு ஏற்பட்ட பயத்தின் காரணமாக எம்மூச்சே நின்று விடும் போலிருந்தது. என்னுடைய வயிறு வெட்டிப்பிளக்கப்பட்டு அதற்கும் எரி திராவகம் ஊற்றப்பட்டது போலிருந்தது. இவையெல்லாம் எவ்வாறு நடைபெற்றன என்பதை என்னால் உணர முடியவில்லை.'

இத்தனைக்கும் மத்தியில், தன்னை இத்தகைய நெருக்கடிக்குள் மாட்டி விட்ட லிண்டா ட்ரிப்பை ஒரு முறை பார்த்தாள். இத்தனைக்கும் எதுவிதமான உணர்ச்சியுமற்ற பிண்டம் போல் ஓராசனத்தில் அவளமர்ந்திருந்தாள். எம்மிக் தான் கூற வேண்டிய எல்லாவற்றையும் கூறிவிட்டு. அந்த அறையின் மற்றொரு பக்கம் சென்று அங்கிருந்தவர்களிடம் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில் மோனிக்காவின் எண்ணங்கள் கிளின்ரனைச் சுற்றி வட்டமிட்டன.

அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டேயிருந்தது. இருக்கையிலிருந்து சரிந்து விடாமலிருக்க தன் கைகளால் தன்னுடலை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கையில் திடமாக அமர்ந்துக் கொண்டாள். 'என்ன ஆனாலும் சரி, என் வாழ்நாள் முழுவதும் நான் சிறையில் வாட நேர்ந்தாலும் என் அன்புக்குரிய அழகரை காட்டிக் கொடுத்து விடமாட்டேன். இவற்றுக்கெல்லாம் ஒரே ஒரு மார்க்கம் தானிருக்கிறது. என்னுயிரை மாய்த்துக் கொள்ளுவது. அவ்வாறானால் ஜனாதிபதி பற்றி என்னிடமிருந்து எத்தகைய தகவல்களையும் எவரும் எடுக்க முடியாது. என்னால் அந்த மனிதருக்கு எந்தப் பிரச்சனையும் நேரப் போவதில்லை. இவ்வாறு அவர் எண்ணியவாறு அந்த அறையைச் சுற்றி நோட்டமிட்டாள்.

கண்ணாடிச் சலாகைகள் போட்ட யன்னல்கள் அங்கே காணப்பட்டன அவற்றின் ஒன்றினூடாக தான் வெளியே பாய்ந்தால், பத்து மாடிகள் கொண்ட அக்கட்டடத்தின் தரையில் மோதி என் எலும்புகளும் நொறுங்கிப் போய் விடும். அறையில் நின்றிருந்த மத்திய புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு கண்ணாடி யன்னலருகிலும் இருவர் வீதம் நின்றிருந்ததையும் அவள் கண்டாள்.

அன்றையதினம் லிண்டா ட்ரிப்பின் அழைப்பை ஏற்று அந்த ஹொட்டல் கட்டடத்துக்கு தான் வந்த சேர்ந்த போது, ஹோட்டல் வாயிலும் எதிர்ப்புறத்திலும் பலர் துப்பாக்கிகள் சகிதம் நின்றிருந்ததையும் அவள் அவதானித்திருந்தாள். இந்த ஏற்பாடு தன்னை இத்தகையதொரு சூழ்நிலைக்கு உடன் படுத்துவதற்காகவே திட்டமிட்டு செய்யப்பட்டிருந்தன என்பதை இப்போதுதான் உணர்ந்து கொண்டாள். மற்றுமொரு யோசனையும் மோனிக்காவுக்கு அப்போது தான் தட்டுப்பட்டது. கிளின்ரன்-பவுலா ஜோன்ஸ் வழக்கில் கிளின்ரன் தன்னுடைய வாக்கு மூலத்தை அடுத்த நாள் தான் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்போகிறார், என்ற எண்ணம் தோன்றியது. இதன் முன்னதாகவே தன்னிடம் விசாரணை நடத்துவதற்கு கென்னத் ஸ்டார் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை உணர்ந்தாள்.

இந்த இக்கட்டான வேளையில் எம்மிக் மீண்டும் "மோனிக்காவின் அருகில் வந்தார். மோனிக்கா இப்பொழுது உனக்கு வேண்டியவர்களுக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து பேசுவதற்கு அவகாசம் தருகிறோம். உன் தாயாருக்கோ, ஜனாதிபதியின் செயலாளர் பெட்டி கியூரிக்கோ, வேர்னண் ஜோர்டனுக்கோ நீ தொலைபேசியில் பேசலாம். ஆனால் உன் பேச்சுக்கள் அத்தனையையும் ஒலிபதிவு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்!" என்று கூறியதும் மற்றுமொரு அதிகாரி சற்றுத் தொலைவிலிருந்தவாறே, "ஏன் ஜனாதிபதி கிளின்ரனை கூட தொலைபேசி அழைப்பெடுத்துப் பேசலாம்!" சற்று முரட்டுத்தனமாகவே கூறினார்.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — பெ. தனலட்சுமி, எஸ். 67, நலன்புரிநிலையம், சிதம்பரபுரம், வவுனியா.


பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இரும்பு மனிதன்

## பாப்பா முரசு சிறுகதை



முன்னொரு காலத்தில் ஆபிரிக்காவில் முட்டாள் ராஜா ஒருவன் இருந்தான். அவனுக்கு திடீர் திடீர் என்று பல ஆசைகள் தோன்றும். அதை உடனே நிறைவேற்றும்படி தான் நினைப்பவர்களிடம் கட்டளையிட்டு பாடாய் படுத்துவான். நிறைவேற்றாத வரை குடும்பத்துடன் கொன்று விடுவான். இதனால் இந்த ராஜாவின் முன் நிற்பதற்கே அஞ்சுவர் மக்கள்.

ஒருநாள் இரும்புக் கொல்லரை அழைத்தான் ராஜா. 'போச்சுடா இன்று நமக்குக் கெட்ட நேரம்,' என்று பயந்தபடியே அவன் முன் சென்றார்.


"இப்போதே எனக்கு இரும்பினால் மனிதனை செய்து கொண்டு வா. அந்த மனிதனுக்கு மூளை, இரத்த ஓட்டம் எல்லாம் இருக்கணும். மொத்தத்தில் நம்மை போலவே இருக்கணும். அதற்கு என்னென்ன பொருட்கள் தேவையோ, எவ்வளவு பணத்தேவை என்றாலும் என்னிடம் கேள் நான் தருகிறேன்," என்றான். நொந்து போன இரும்பு கொல்லன் துக்கத்துடன் வீட்டிற்கு வந்தான். கணவனின் துக்கம் கண்டு "என்ன விஷயம்?" என்று விசாரித்தாள் மனைவி. "நாம் குடும்பத்துடன் அழியப் போகிறோம்," என்றபடி விஷயத்தைச் சொன்னான் இரும்பு கொல்லன். 'இவ்வளவுதானே விஷயம்?' என்றபடியே அவன் காதில் கிசுகிசுத்தாள் மனைவி.

மறுநாள்-

அரசவைக்குச் சென்ற கொல்லன் "அரசே! உயிருள்ள இரும்பு மனிதன் செய்ய நூறு குடம் கண்ணீரும், நூறு வண்டி நிறைய முடியை எரித்த சாம்பலும் வேண்டும். அதை கொடுத்தால் அடுத்த நாளே உயிருள்ள இரும்பு மனிதன் தயார்," என்றான்.

உடனே அரசன் கட்டளையிட, மக்கள் நாள். முழுவதும் அழுது அழுதும் ஒரு குடம் கண்ணீருக்கு மேல் பிடிக்கமுடியவில்லை. பிறகு மக்கள் அனைவரும் தங்கள் தலையை மொட்டையடித்து எரித்த சாம்பல் ஒரு குடத்திற்குமேல் தேறவில்லை. மன்னனும் எவ்வளவோ அழுது பார்த்தான். கண்ணீர் எல்லாம் காய்ந்து போனதே அன்றி, பிடித்து வைக்க முடியவில்லை. ஒருவழியாக கஷ்டத்தை உணர்ந்த மன்னன் கொல்லனைக் கூப்பிட்டு, உயிருள்ள இரும்பு மனிதனை செய்ய வேண்டாம். எனக்கு பிடிக்கல," என்றான்.

இரும்பு கொல்லரும், அவன் குடும்பத்ினரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அதிலிருந்து முட்டாள் மன்னன் முட்டாள்தனமாக எதைக் கேட்டாலும் மக்களும் முட்டாள்தனமாக அவன் போக்கிலேயே போக நாளடைவில் தன்னுடைய முட்டாள்தனத்தையே விட்டு விட்டான் மன்னன்.






**இங்கே 3 பட்டங்கள் பறக்கின்றன. ஆனால் குமரன் விடுவதோ ஒரேயொரு பட்டம். எது அந்தப் பட்டம்?**

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.12.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **372**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 370

பரிசுக்குரியவர்:
பிரதாப் சதீஷ்குமார்,
நு/புனித ஜோன் பொஸ்கோ, அட்டன்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சு.சத்தியதர்ஷன்,<br>சரஸ்வதி கனிஷ்ட, வித்தியாலயம், பதுளை. | ரெனுஜா மிசேல்,<br>இரட்ணசோதி அருத்மாவத்தை வீதி, கொழும்பு 15. |
| ஆ.டில்ஷான்,<br>நம்மாதா பாடசாலை, நுவரெலியா. | டெரன்ஸ் ஸ்பென்ஸர்,<br>றோ.க.தமிழ் கலவீன் வித்தியாலயம், இராஜகிரிய. |
| க.தயாளன்,<br>தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா. | கே.கமல்கண்ணா,<br>க/ஒல்பிகோக் தமிழ் வித்தியாலயம், புஸ்ஸல்வா. |
| ஜெ.ஷங்கா,<br>ஹைலெவல் ஆங்கில பாடசாலை, அட்டன். | எஸ்.கவிஷாலினி,<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| எஸ்.பி.ராஜ்,<br>பரி.தோமா கனிஷ்ட பாடசாலை, கொழும்பு 3. | ரா.நிர்மல்ராஜ்,<br>நீர்/அல்ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |

## குட்டிச் செய்திகள்

☞ மெக்ஸிக்கோ நாட்டினர் வழிபாட்டின் போது தங்களது செல்லப் பிராணிகளையும் வழிபாட்டுத்தளங்களுக்கு அழைத்துச் செல்வார்கள்.

☞ மகாத்மா காந்தி தன் வாழ்நாளில் ஒரு முறை கூட விமானத்தில் பயணம் செய்ததில்லை. கப்பலில் தான் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்.

☞ கினியா பிக் என்பது கினியா நாட்டைச் சேர்ந்த பன்றி கிடையாது. இது தென் அமெரிக்காவில் காணப்படும் ஒருவகைப் பெருச்சாளி ஆகும்.

☞ இந்தியாவில் வருடம் ஒன்றுக்கு ஒரு கோடி சைக்கிள்கள் தயாரிக்கப்படுகின்றன. இவையாவும் ஐரோப்பிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க, தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

☞ ஜூபிடர் கிரகம் பூமியில் இருந்து 64 கோடி கிலோமீட்டர் தொலைவில் இருக்கின்றது.

☞ ஹவாய் தீவில் உள்ள வைலியலி என்ற மலைப்பகுதியில் கிட்டத்தட்ட எல்லா நாளும் மழை பெய்து கொண்டே இருக்கிறது. இங்கு வருடத்திற்கு 15 நாட்கள் மட்டும் மழை பெய்வதில்லை.

☞ உலக மக்கள் தொகைகளில் 4 வீதம் பேர் இடது கையால் எழுதும் பழக்கம் கொண்டவர்கள்.

☞ ஒரு கிலோ எடையுடைய இரும்புக் குண்டை உலகின் மிக ஆழ்கடல் பகுதியான மரியானா ஆழியில் போட்டால், அது தரை மட்டத்தைச் சென்றடைய 1 மணி நேரம் பிடிக்கும்.

☞ சிலருக்கு படுக்கையைக் கண்டால் பயமாக இருக்கும். இந்தப்பயத்திற்கு ஆங்கிலத்தில் 'கிளினோ ஃபோபியா' என்று பெயர்.

☞ பாம்புகள் 13 கோடி வருடங்களாகப் பூமியில் உயிர் வாழ்ந்து வருகின்றன. மூவாயிரத்திற்கு அதிகமான வகைப்பாம்புகளில் 175 வகைப் பாம்புகள் மட்டுமே விஷம் கொண்டவை.

தொகுப்பு : ஜி.மலர்விழி-கொழும்பு 06.

## பழக்கங்கள் பலவிதம்

➠ கங்காருகளும் கலை மான்களும் தாங்கள் பெண் விலங்குகளுடன் நெருக்கமாகப் பழகும் காலத்தில், மனிதர்கள் யாரையும் அருகே வர விடாது. தங்களுக்கு இடைஞ்சலாக மனிதர்கள் இருப்பார்கள் என்று நினைத்து மனிதர்களைக் குறிப்பாக ஆண்களைக் கண்டாலே விரட்டியடிக்க முயற்சி செய்யும்.




↓ ஹெரான் இனப் பறவைகளில் பெண் பறவை, ஆண்பறவையைத் தன் அருகே நெருங்க விடாது. விரட்டியடித்துக் கொண்டே இருக்கும். பலமுறை இந்தத் துரத்தல் நடந்த பின்புதான், பெண்பறவை ஆண்பறவையுடன் நட்பாகப் பழக ஆரம்பிக்கும்.





↑ நாரைகள் வடக்கு ஐரோப்பாவில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு இடப்பெயர்ச்சி செய்கின்றன. கூட்டம் கூட்டமாகப் பல மைல்கள் தூரம் பறந்து சென்றாலும், தங்களது ஜோடிப்பறவைகளுடன் மட்டுமே வாழ்கின்றன.



## மர்மத் தொடர்

# ரேகாவின் மோகம்

02

சென்னை.

அதிகாலை நான்கு மணி. நகரின் மையத்தில் இருந்த அந்தக் கல்யாண மண்டபம், காலை ஒன்பது மணி முகூர்த்தத்திற்கு சோம்பலாய் தயாராகிக் கொண்டிருந்தது. வாத்தியக் கோஷ்டி வேஷ்டிகளையே போர்வையாக்கிக் கொண்டு உறக்கத்தின் பிடியில் சிக்கியிருக்க, கல்யாணத்துக்கு வந்திருந்த உறவுகளும் மொத்தமும் கிடைத்த இடங்களில் நித்திராதேவியை தழுவியிருந்தார்கள்.

மாப்பிள்ளை தேவேந்திரன் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கட்டிலுக்கு சாய்ந்தபடி ஒரு சிகரெட்டை புகையாய் மாற்றிக் கொண்டிருந்தான். சீட்டாடிய களைப்பில் நண்பர்கள் தூங்கிக் கொண்டிருக்க, அறைக்குள் ஜீரோவாட்ஸ் வெளிச்சம் பரவியிருந்தது.


சிகரெட்டின் கடைசி சென்டி மீட்டரை ஆஷ்ட்ரேயில் இட்டு நசுக்குவதற்காக தேவேந்திரன் திரும்பிய விநாடி.

'லொட்...'

முதுகில் எதுவோ வந்து விழ, சட்டென்று திரும்பி குனிந்து பார்த்தான்.

சின்னதாய் ஒரு காகித உருண்டை. நீட்டி உருண்டு கிடந்தது.

'ஜன்னல் வழியே யாரோ வீசிவிட்டுப் போயிருக்கிறார்கள்....!'



காகித உருண்டையை கையில் எடுத்துக் கொண்டவன், வேகவேகமாய் வெளியே போய் எட்டிப் பார்த்தான்.

வெளியே-

யாருமில்லை.

குழப்பத்தை முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டு, கையில் இருந்த காகித உருண்டையைப் பிரித்தான். உள்ளே பால் பாயிண்ட் பேனாவால் எழுதப்பட்ட இரண்டு வரிகள்.

மிக அவசரம்.

உங்களோடு பேச வேண்டும். கல்யாண மண்டபத்துக்கு பின்புறம் இருக்கும் மரத்தடிக்கு வரவும்.

**மணப்பெண் நிகிலா.**

பதட்டமானான் தேவேந்திரன். கடிதத்தை மறுபடியும் காகித உருண்டையாக்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டவன், வேகவேகமாய் நடந்து மண்டபத்தின் பின்பக்கப் பகுதியை நோக்கிப் போனான்.

வேண்டாத பொருள்கள் கொட்டி வைக்கப்பட்டிருந்த பகுதி அது. வேப்பமரம் ஒன்று கிளைகளைப் பரப்பிக் கொண்டு இருட்டில் அடர்த்தியாய்த் தெரிய, மரத்துக்குப் பின்னால் பட்டுப் புடவை அசைந்தது. காற்றில் மல்லிகை மணந்தது.

பக்கத்தில் போனான் தேவேந்திரன் கூப்பிட்டான்.

"நிகிலா!"

மெல்ல பட்டுப் புடவை திரும்பியது.

அது நிகிலா இல்லை.

ஓர் ஆண்முகம். பெரிதாய் மீசை வைத்த முகம். அந்த உருவத்தின் வலது கையில் ஒருஅடி நீளத்தில் கத்தி ஒன்று அந்த இருட்டிலும் மினு மினுத்தது. தேவேந்திரனின் கால்கள் பூமியோடு ஒட்டிக் கொண்டன.

இன்ஸ்பெக்டர் குணசேகரும் சப் இன்ஸ்பெக்டர் கார்வண்ணனும் ஜீப்பை விட்டு இறங்கி இந்தப் பழைய சிமெண்ட் பெயர்ப்பலகைக்கு முன்பாய் போய் நின்றார்கள். அதில் கோணல்மாணலாய் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் கல்லறைத் தோட்டம் என்று சொன்னது.

குணசேகர் பெருமூச்சொன்றை விட்டபடியே தோள்களைக் குலுக்கினார்.

"கார்வண்ணன்....! நாய் ஷீபா இந்த மயானத்துக்குள்ளே போயிருக்கு. இங்கே பிரச்சனைக்கு விடை கிடைக்குமா....? இல்ல பிரச்சனை பெரிசாகுமான்னு தெரியலை. சாதாரண ஆக்ஸிடெண்ட் கேஸ்தானேன்னு ஸ்பாட்டுக்கு வந்தா, கேஸ் ட்ரில் வாங்குது...."

மயானத்துக்குள் ஷீபாவின் குரைப்புச் சத்தம் கேட்டது.

இருவரும் உள்ளே போனார்கள். டாக் ட்ரெய்னர் மோசஸ் ஷீபாவுக்கு பின்னால் ஓடிக் கொண்டிருந்தார். ஷீபா சிதிலமான கல்லறைகளைத் தாண்டி யாரையோ பார்க்கப் போகிற அவசரத்தோடு ஓடியது. கார்வண்ணனும் குணசேகரும் தொடர்ந்தார்கள்.

கல்லறைத் தோட்டம் அவ்வளவு சுத்தமாக இல்லை. பார்த்தீனியமும், சப்பாத்திக் கள்ளியும் பார்ட்னர்ஷிப் போட்டுக் கொண்டு மயானத்தை ஆக்ரமித்திருந்தது. கால்நடைகளின் கழிவுகள் ஆங்காங்கே காய்ந்து தெரிந்தது.

வேகமாய் ஓடிக்கொண்டிருந்த ஷீபா இப்போது வேகத்தை குறைத்துக் கொண்டு மெதுவாய் நடைபோட்டு மண்ணை முகர்ந்தது.

டாக் ட்ரெய்னர் மோசஸ் ஷீபாவுக்கு சின்னச் சின்ன கட்டளைகளாகக் கொடுத்துக் கொண்டு அடியொற்றி நடை போட்டார்.

ஷீபா யோசித்து யோசித்து நடந்தது பின் அந்தச் சப்பாத்திக் கள்ளி புதருக்கு பக்கமாய் வந்து நின்று, மண்ணை முன்னங்காலால் பிறாண்டிக் காட்டி விட்டு படுத்துக் கொண்டது.

மோசஸ் மணலை கிளறிப் பார்த்து விட்டு குணசேகரிடம் நிமிர்ந்தார்.

"ஸார்... இங்கே மணல் இளகியிருக்கு. இந்த இடத்துல குழி தோண்டப்பட்டிருக்கலாம்ன்னு நினைக்கிறேன்."

குணசேகர் தன் கனமான பூட்ஸ் காலால் மண்ணை மிதித்துப் பார்த்தார். மண் கீழே இறங்கியது.

"கார்வண்ணன்...."

"ஸார்...."

"இந்த இடத்தை தோண்டிப் பார்க்கணும். நீங்கள் ஜீப்பை எடுத்துகிட்டுப்போய் ஆட்களையும் ஸ்பாட்போஸ்ட்மார்ட்டம் பண்ண ஒரு டாக்டரையும் கூட்டிட்டு வந்துடுங்க!"

"யெஸ்..... ஸார்....." கார்வண்ணன் அந்த இடத்தை விட்டு வேகமாய் நடந்து போக குணசேகர் தன் பார்வையைத் துரத்திச் சுற்றுமுற்றும் பார்த்தார். தொலைவில் ஒருகுடிசை தெரிந்தது.

"மிஸ்டர் மோசஸ்! நீங்க இங்கேயே இருங்க. கார்வண்ணன் ஆட்களைக் கூட்டிட்டு வர்றதுக்குள்ளே அந்தக் குடிசையில் யார் இருக்காங்கன்னு பார்த்து ஒரு விசாரணை பண்ணிட்டு வந்துடறேன்."

மோசஸ் தலையாட்ட, குணசேகர் சிதிலமான கல்லறைகளுக்கு மத்தியில் முளைத்திருந்த பார்த்தீனிய செடிகளை மிதித்துக் கொண்டு தொலைவில் தெரிந்த குடிசையை நோக்கிப் போனார்.

பத்து நிமிஷ நடைக்குப் பின் அந்தக் குடிசையை சமீபித்தார். வாசலில் இரண்டு ஆடுகள், கட்டிப்போடப்பட்டிருக்க குடிசையின் கதவு சாத்தப்பட்டிருந்தது.

குணசேகர் கதவின் மேல் கையை வைத்து தள்ளிப் பார்த்தார். உட் பக்கமாய் தாழிடப்பட்டிருந்தது.

மெல்ல தட்டினார்.

"டொக்..... டொக்....."

குணசேகர் காத்திருக்க, அரை நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு கதவு மெல்ல பின்வாங்கி உள்ளே போயிற்று.

ஓர் இளம்பெண் பார்வைக்கு கிடைத்தாள். இடுப்பில் சிணுங்கும் கைக் குழந்தை, குணசேகரின் யூனிஃபார்மை பார்த்ததும் தன் பெரிய கண்களில் மிரட்சியைக் காட்டினாள். பயமாய் எச்சில் விழுங்கிக் கொண்டு கேட்டாள்.

"யார் வேணுங்க....?"

"உம் பேர் என்ன.....?"

"வடிவு....ங்க...."

"வீட்ல உம் புருஷன் இருக்கானா....?"

"அ.... அவரு.... கோழி கூவுறப்பவே எந்திரிச்சி வேலைக்கு போய்ட்டாங்க...."

"உம் புருஷனுக்கு என்ன வேலை..."

"வயற்காட்டு வேலைதாங்க..... அவர்க்கு தப்பு தண்டா வேலை எதுவும் தெரியாதுங்க...."

"இதோ பார்.... நான் கேக்கிற கேள்விகளுக்கு ஒழுங்கான பதிலைச் சொல்லணும்.... இந்த கல்லறைத் தோட்ட மயானம் இப்ப யார் பொறுப்புல இருக்கு...."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. ரெண்டு வருஷத்துக்கு முந்தி வரைக்கும் 'மரியகோஸ்' ன்னு வயசான பெரியவர் ஒருத்தர் அந்தக் கல்லறையை பராமரிப்பு பண்ணிட்டிருந்தார். அவர் செத்துப் போயிட்டதுக்குப்புறம் வேற யாரும் இங்கே வரலை. செத்தவங்களை அடக்கம் பண்ணக்கூட இப்ப இங்கே யாரும் வர்றதில்லை. மொதல்ல பார்க்க மாதிரி இருந்த கல்லறைத் தோட்டம் இப்போ பாழ்பட்டு போச்சு."

"நேத்து ராத்திரி இந்த மயானத்துக்குள்ளே யாராவது இருந்ததை நீயோ உன் புருஷனோ பார்த்தீங்களா?"

"இல்லீங்க... நாங்க யாரையும் பார்க்கலை. ஏழு மணிக்கு கதவைச் சாத்திட்டா அதுக்கப்புறம் நாங்க விடிஞ்ச பின்னாடிதான் கதவைத் தொறந்துகிட்டு வெளியே வருவோம்...."

"பக்கத்துல வீடுங்க ஏதாவது இருக்கா?"

"இல்லீங்க... வீடுகளை பார்க்கணும்னா ரெண்டு கல்லு தொலைவு போகணுங்க......"

"உம் புருஷன் வேலையிலிருந்து எப்ப திரும்பி வருவான்....?"

"பொழுது சாயும் போது வந்துடுவார்ங்க...." பயத்தோடு சொன்னவளை, குணசேகர் மேலும் சில நிமிஷங்கள் விசாரணை நடத்தி விட்டு மோசஸ் இருந்த இடத்துக்கு திரும்ப வந்தபோது சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணன் இரண்டு ஆட்களோடும் டாக்டர் ஒருவரோடும் வந்து காத்துக் கொண்டிருந்தார்.

கேட்டார்.

"ஸார்! தோண்டிடலாமா....?"

"ம்.... ஆரம்பிங்க...." குணசேகர் தலையசைத்ததும் ஆட்கள் மண் வெட்டியோடும் கடப்பாறியோடும் களத்தில் இறங்கினார்கள். மண் வேகவேகமாய் தோண்டப்பட்டு ஒரு ஓரமாய் குவிக்கப்பட குழி வாயை திறக்க ஆரம்பித்தது.

குழியின் ஆழம் மூன்றடியைத் தொட்ட போது மண்ணோடு சேர்த்து பிசையப்பட்ட வேஷ்டியும் சட்டையும் இரத்தக்கறையோடு வெளிப்பட அதை எடுத்து மேலே போட்டு விட்டு மறுபடியும் இரண்டடி ஆழம் தோண்டியபோது உடலின் முதுகுப் பாகம் பார்வைக்குக் கிடைத்தது.

மண்ணை பரபரவென்று விலக்கி விட்டு உடலை இழுத்தார். கொஞ்சம் கொஞ்சமாய் உடல் மேலே வந்தது.

கெடாத திடகாத்திரமான உடல். இளைஞனின் நெற்றியில் விழுந்திருந்த கத்திக் குத்துக் காயம் ஒரு ஆழமான குழி மாதிரி தெரிந்தது.

"யாரிவன்....?"

குணசேகர் குனிந்து இளைஞனின் உடலை மும்முரமாய் பார்த்துக் கொண்டிருக்க, குழி வெட்டிய இரண்டு பேரில் ஒருவன் கூப்பிட்டான்.

"அய்யா..."

திரும்பினார்.

"என்ன..?"

"இதுவும் குழிக்குள்ளே இருந்ததுங்கய்யா...." அவன் நீட்டியதை வாங்கிப் பார்த்தார் குணசேகர்.

அது ஒரு சிறிய பாக்கெட் டயரி. ஒட்டியிருந்த மண்ணைத் துடைத்து விட்டு முதல் பக்கத்தைப் புரட்டினார்.

முகம் வியப்புக்கு போக பார்வை ஆணியடித்த மாதிரி அந்தப் பக்கத்திலேயே நிலைத்தது.

**மர்மம் தொடரும்....**

கிரைம்சக்கரவர்த்தி

**ராஜேஷ்குமார்**

# இதுவும் ஒரு நடிகையின் கதை

(02)

சில திரைப்படங்களில் கதாநாயகிகளைப்பார்த்து அவர்கள் பெறும் பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று மூக்கின் மேல் விரலை வைக்காத எவருமிருக்க முடியாது. சுவரொட்டிகளிலும் விளம்பரங்களிலும் அந்த நாயகியின் உருவத்தைப் பார்த்து கனவு காணும் இளைஞர்கள் எத்தனைபேர்? ஆனால் அந்த அழகு ஜொலிப்பில் பெண்ணின் வாழ்க்கையின் பின்னால் மறைந்துகிடக்கும் மர்மமான சோகங்களைப் பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. பணமும் புகழும் படைத்த பல நடிகைகள் தற்கொலை செய்து தங்கள் உயிரையே மாய்த்து விடுகிறார்கள்.இன்று முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள் பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும் கதைகள் சிறிதளவு கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.

"ரொம்ப நடிக்காதே.... இதையெல்லாம் ஷூட்டிங்குல வச்சுக்க.... நாலு படமாவது கிடைக்கும்...."

பசியைவிட அம்மாவின் பதில் கொடூரம். அதன் பிறகு அபிதாவுக்குப் பசிக்கவே இல்லை.

பசித்தாலும் வாய் திறப்பதில்லை.

அம்மா ஏற்படுத்திய காயத்தை குத்திப் புண்ணாக்கினாள் கணக்கு டீச்சர். வசுமதியின் பென்சில் பாக்ஸ் காணாமல் போனது ஒரு நாள்.

'அழகா இருக்கு' என்று என்றோ ஒரு நாள் ஆசைப்பட்டதால் பழி அபிதா மேல்.

"சத்தியமா நான் எடுக்கலை டீச்சர்...." என்கிற போதே அபிதாவின் டெஸ்க்கிலிருந்து பென்சில் பாக்ஸ் கண்டெடுக்கப்பட்டது. இது எப்படி இங்கே வந்தது? யோசிப்பதற்குள் டீச்சர் பிரம்பைக் கையில் எடுத்திருந்தாள்.

"ஒண்ணுமே தெரியாத மாதிரி நடிச்சேயே.... இப்ப என்ன சொல்றே?"

"எனக்குத் தெரியாது டீச்சர்...."

"நடிக்காதே....."

டீச்சரின் அடி தாங்க முடியாமல் அழுதாள். குரூரக் கண்ணாடி அணிந்திருந்த டீச்சருக்கு அதுவும் நடிப்பதாகவே தெரிந்தது.

இளமையின் அடையாளங்கள் அபிதாவிடம் தென்படத் தொடங்கியதும், கதாநாயகி வாய்ப்பு வந்தது. பேபி அபிதாவை விட குமாரி அபிதாவுக்கு சீக்கிரமே சிவப்புக் கம்பளம் விரித்தது சினிமா உலகம்.

அதற்கு அபிதா தந்த விலை...... உடம்பு! குழந்தையாய் இருந்தபோது, மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சிய கதாநாயகன்களுக்கே அவளை இரவு உணவாக்கினாள் அம்மா.

கோரப்பற்களை சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு திரியும் ஓநாய்கள் அவர்கள். அதில் படங்களில் அப்பாவியாய் நடித்தே பேர் வாங்கிய கதாநாயகன் இரக்கமே இல்லாத சாடிஸ்ட்! அபிதாவை ருசித்த முதல் ஓநாய்! அவுட்டோர் ஷூட்டிங் என்று ஊட்டிக்குக் கூட்டிப்போய்.....

"விஸ்கி சாப்பிடுவியா?"

"பழக்கமில்லை," என்றவளை, பலாத்காரப்படுத்தி வாயில் ஊற்றினான். தொண்டையில் திராவக எரிச்சல்! முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

"நடிச்சது போதும்.. வா கண்ணு....!"

சரேலென புடவையை உருவினான்.

இதே ரீதியில் நிறைய இரவுகள்! ஒவ்வொரு ஓநாயும் அவள் தவிப்பை, விம்மலைக் கொஞ்சமும் கண்டுகொண்டதில்லை. அவர்களின் பார்வையில் அபிதாவின் ஒவ்வொரு அசைவும்.... நடிப்பு! அபிதா என்பவள் நடிகை!

அவளை மனுஷியாய் பார்த்த, முதல் ஆண் ஜவஹர். அவனது ஊறுகாய் கம்பனியின் விளம்பரப் படத்தில் நடிக்கக் கேட்டு அணுகினான்.

பேச்சு, அணுகுமுறை எல்லாமே புதுசாக இருந்தது.

ஆண்களில் இப்படிப்பட்ட கண்ணியமானவர்களும் உண்டா?

ஆச்சரியம், அன்பு, காதல் என்றாகி கல்யாணத்தில் முடிந்தது. அரிதாரத்தை நிரந்தரமாகக் கலைத்துவிட்டு அவன் பின்னால் வந்தாள்.

வாழ்க்கைத் துவக்கம் விவரிக்க முடியாத சந்தோஷம். அபிதாவை தேவதையாகை பூஜித்தான். பூரிப்பில் மிதந்தாள் அபிதா.



அத்தனையும் ஒரே நிமிஷத்தில், ஒரே வார்த்தையில், அஸ்தமனம்!

"சாப்பிட்டாச்சா?"

"என்ன மாமா... இப்படி கேக்குறீங்க? நீங்க இல்லாம எப்பவாவது சாப்பிட்டிருக்கேனா?"

தன் பதிலில் என்ன நடிப்பைக் கண்டான்? அவனோடு சேர்ந்து சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டது தவறா?

'ஆபிஸ் எரிச்சலை என் மீது காட்டுகிறானா? அல்லது பத்திரிகைகள் ஏதாவது என்னைப் பற்றி எசகு பிசகாக எழுதி, அது அவன் பார்வையில் பட்டிருக்குமா? எதுவாகவும் இருக்கட்டும்.... என் உணர்வை நடிப்பு என்று அசிங்கப்படுத்தியதை மன்னிக்க முடியாது'.

ஜவஹரைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. ஓநாய்! அவனைப் பார்க்கக் கூடாது. அவன் முகத்தில் முழிப்பதே பாவம்.

அறைக்குள் புகுந்து கதவை சாத்திக் கொண்டாள்.

'யாருக்கு என்ன பாவம் செய்தேன்? அன்பை ஊட்ட வேண்டிய அம்மாவே சாக்கடை வாழ்க்கையில் தள்ளிவிட்டாள். ஆறுதலாக இருக்க வேண்டிய புருஷன் ஆத்திரத்தைக் கொட்டுகிறான். என் அன்பை நடிப்பென்று அசிங்கப்படுத்துகிறான்'.

அபிதாவுக்கு வாய்விட்டுக் கதற வேண்டும்போல் இருந்தது. அழுதாள். வெகு நேரம் உடம்பு குலுங்கியது. இனி அழுவதற்குக் கண்ணீர் இல்லை. அமைதியானாள். அசையாது உட்கார்ந்திருந்தாள்.

**ஜெ.பிஸ்மி**

எதிரிலிருந்த அகலமான கண்ணாடியில் பார்வை சூன்யமாக நிலைத்திருந்தது. உள்ளுணர்வின் இடறலில் சரேலென நிமிர்ந்தாள்.

கண்ணாடியைப் பார்த்தாள்.

அழுது வீங்கிய முகம், சிவந்த கண்கள், கலைந்த கேசங்கள், அவள் உட்கார்ந்திருந்த நிலை.....

மண்டைக்குள் மின்னல் வெட்டியதுபோல் உணர்ந்தாள்.

ஏதோவொரு படத்தில் உணர்ச்சிமயமாய் அவள் நடித்த காட்சியில் போல்.... அந்தக் காட்சியையே மறுபடி நடித்தது போல் இருந்தது. கண்ணாடி காட்டிய அபிதாவின் பிம்பம்.

சுய இரக்கம் துக்கமாய் நெஞ்சுக்குள் இறங்க, மீண்டும் அழத் தொடங்கினாள் அபிதா. கூடவே அவளுடைய பிம்பமும்..... (வளரும்)

# பதுளையில் கலைவாணரின் இரு நாடகங்கள்

பதுளை மாநகரிலுள்ள பதுளுப்பிட்டி மைதானத்தில் நாடக மேடை அமைக்கப்பட்டது. மைதானத்தைச் சுற்றி தகரங்கள் கொண்டு பெரிய வேலியும் நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் பிரமாண்டமான பணியினைப் பொறுப்பேற்று துரிதகதியில் செய்து முடிந்தவர்கள் பதுளை திராவிட முன்னேற்றக் கழகத்தினர். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இந்த நிர்மாணப் பணியில் இரவு பகல் பாராமல் உழைத்தனர்.

தி.மு.கவில் செயலாளராகவிருந்தவர் திரு.எம்.காசிநாதன், துணைச் செயலாளராகப் பணிபுரிந்தவர் திரு.அ.தங்கராசன் அவர்கள், பொருளாளராக கடமையாற்றியவர் மு.வே.பெசாமி அவர்கள். இவர்களுடன் ஏராளமான தோழர்கள் தொண்டு புரிந்தனர். அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடுவது சாத்தியமல்ல. இருப்பினும் ஒரு சில தோழர்களையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். திருவாளர்கள் ஆரு.அன்பழகன், சத்தியசீலன், காசிம், ஆரு.ஆசைத்தம்பி, பி.எம்.மலையப்பன், ஆகியோரை இங்கு குறிப்பிடலாம்.

மேடை அமைப்புடன் மட்டுமல்லாமல், நாடகத்துடன் தொடர்புடைய வேறு பல பணிகளிலும் இவர்கள் ஒத்துழைத்தனர். அவசர அவசரமாக மேடையமைக்கப்பட்டமையினால் மேடைப் பலகைகளை ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஆணிகள் சில, நாடகம் தொடங்கும்போது கவனிப்பாரற்ற நிலையில் சிதறிக் கிடந்தன. காட்சி ஆரம்பித்ததும், சி.எஸ்.பாண்டியனுடன் மேடையில் தோன்றிய கலைவாணர் இந்த ஆணிகளைக் கண்டு விட்டார்.

சமயோசிதமாகவும் நகைச்சுவையோடும், "பாத்தியா.... பாத்தியா.... தரையில ஆணியெல்லாம் கிடக்கு கவனமாக காலவைச்சு வா?" என்று கூறியபடி குனிந்து ஆணிகளைப் பொறுக்கி எடுத்தார்.


எங்களுடைய நாடகமான 'இழந்த காதல்' மேடையேற்றப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே, சைவ பரிபாலன சங்கத்தினர், மோடர்ன் தியேட்டரில் 'பணம்' என்ற நாடகத்தை மேடையேற்றினர். இந்த நாடகம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போதே கலைவாணர் தனது நாடக வசனங்கள் ஊடே, நாங்கள் நடத்தப்போகும் 'இழந்த காதல்' நாடகம் நான்கு நாட்களில் நடைபெறவிருக்கிறது, என்ற விபரத்தையும் கூறிவிட்டார்.


இக்கட்டுரையில் ஏற்கனவே பதுளை, பதுள்ள என்ற இரு பெயர்களும் வெவ்வேறு இடங்களிலுள்ளன என்று கலைவாணர் அவர்கள் கருதியிருந்தார் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.

'பதுளையில் சைவ பரிபாலன சங்கத்தாருக்காக 'பணம்' நாடகத்தை நடத்தி முடித்துவிட்டு மட்டக்களப்பு சென்று விபுலானந்த அடிகளார் மணிமண்டபம் நிதிக்கு இரு நாடகங்களை நடத்தி முடித்துவிட்டு மட்டக்களப்புக்கருகிலேயுள்ள 'பதுள்ளா' என்ற இடத்தில் பகுத்தறிவு இயக்கம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் நிதிக்காக நாடகம் நடத்துவதென கலைவாணர் குழுவினர் கருதியிருந்தனர்.


நாடகக் குழுவினர் கொழும்பு வந்திறங்கிய அன்றுதான் கலைவாணர் அவர்களுக்கு உண்மையான நிலைமையினை விளக்கினேன்.

எது எவ்வாறிருந்த போதிலும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலைகாரணமாக 'இழந்த காதல்' நாடகத்துக்கு எதிர்பார்த்தளவு வருமானம் கிடைக்கவில்லை. தோழர்கள் பட்ட பெரும்பாடுக்கு ஏற்ற சன்மானம் கிடைக்கவில்லை.





கலாபூஷனம், கவிமணி தமிழோவியன்



அ.துங்கராசன்

நாடகத் தினத்தன்று மட்டக்களப்பிலிருந்து திரு.செல்லையா இராசதுரை அவர்களும் வந்திருந்தார்.

நாடகத்துக்கு பதுளையின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி.டி கொத்தலாவலையும், திரு.எஸ்.ஏ.பீரிசும் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நாடக முடிவில் இராசதுரை அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்த உரையை செவிமடுத்த கலைவாணர் அவர்கள், பேச்சு முடிந்ததும், இருக்கையிலிருந்து எழுந்து தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொண்டார். அப்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக இல்லை.

முதன் முதலில் திரு.இராசதுரை அவர்களுடைய ஆற்றொழுக்குப் போன்ற உரையைக் கேட்ட பதுளை வாழ் மக்கள் பரவசமடைந்தனர். கலைவாணர் குழுவில் இணைந்து வந்த ஒருவராகவிருக்குமோ என்று கூட சந்தேகப்பட்டனர்.

கலைவாணர் அவர்கள் உரையாற்றும் போது, இராசதுரை அவர்களின் தமிழ் பேச்சையிட்டு வெகுவாகப் பாராட்டிப் பேசினார். கலைவாணர் அவர்கள் தங்கியிருந்த வழக்கறிஞர் திரு.கே.வி.நடராஜா அவர்களின் இல்லத்துக்கு வந்து அன்றிரவு விருந்தில் கலந்து கொள்ளுமாறு கலைவாணர் இராசதுரையை அழைத்துக் கொண்டு போனார்.

(1953ம் ஆண்டு நடைபெற்ற இச்சம்பங்கள் பல காலத்தால் மறைக்கப்பட்டுப் போயிருந்தன. பல முக்கியமான குறிப்புகளை கவிமணி தமிழோவியன் அவர்களும், திரு.அ.தங்கராசன் அவர்களும் எமக்கு உரிய காலத்தில் அனுப்பி வைத்து உதவினார்கள். அவர்களுக்கு எனது நன்றி)

கலைவாணர் குழுவினரின் நாடகத்துக்கு திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கொழும்பிலிருந்து வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது! ஆனால் அவரால் அப்போது பதுளைக்கு வரமுடியவில்லை.

இருப்பினும் நாடகம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் பண்டாரவளையில் நடைபெற்ற ஓர் இலக்கிய விழாவில் பங்குபற்றுவதற்காக வந்த திரு எஸ்.டி.எஸ். பதுளை மாநகருக்கும் வந்து, அங்கு நாடக மேடையேற்றத்துக்கான ஒழுங்குகளை பார்வையிட்டு சில அறிவுரைகளையும் கூறிவிட்டுச் சென்றான்.

கலைவாணர் அவர்கள் இலங்கை வந்து நாடகங்களை நடத்திவிட்டுச் சென்ற பின்னர், நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் தமது குழுவினருடன் இலங்கை வந்திருந்தார். அவரும் சில இடங்களில் நாடகங்களை நடத்தியதுடன் வில்லுப் பாட்டுக்கச்சேரிகளையும் நடத்தினார்.

ராஜேந்திரன் அவர்கள் இலங்கை புறப்படுவதற்கு முன்னர் கலைவாணர் அவர்களைச் சந்தித்து விட்டுத்தான் வந்தார்.

கலைவாணரைச் சந்தித்த போது, இலங்கையில் என்னையும் சந்தித்து சில அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு ராஜேந்திரன் அவர்களிடம் கலைவாணர் கூறியிருந்தார். இதன் பயனாக, இலங்கை வருவதற்கு முன்னர் திரு ராஜேந்திரனின் மைத்துனரான நடிகமணி டி.கே.நாராயணசாமி எனக்கு கடிதமெழுதினார். இதனடிப்படையில் ராஜேந்திரன் குழுவினர் இங்கு வந்ததும் அவர்களைக் கண்டு கருத்துக்களைப் பரிமாறினேன். திரு.ராஜேந்திரன் அவர்களுடன், அவருடைய மனைவி விஜயகுமாரியும் வந்திருந்தார்.

திரு.ராஜேந்திரன் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவருக்கும் கடவுள் நம்பிக்கை கிடையாது. இருப்பினும் இந்தியாவிலிருந்து வருபவர் எவரும் கதிர்காமம் சென்று அந்தத் திருப்பதியில் கால் வைக்காமல் திரும்புவதில்லை. ஆகவே வணக்கத்திற்காக என்று அல்லாமல் சும்மாவாவது அந்தப் பதிக்கு ஒரு தடவை சென்று வருமாறு கட்டாயப் படுத்தினேன்.

என்னுடைய கோரிக்கைக்கு ராஜேந்திரனும், விஜயகுமாரியும் குழுவில் இணைந்து வந்த வேறு பலரும் இணக்கம் தெரிவித்தனர்.

ஆனால் நாராயணசாமி அவர்கள் இதற்கு உடன்படவில்லை. "கதிர்காமம் போய் கந்தக் கடவுளைக் கும்பிட்டு வந்திருக்கான் திராவிடக் கட்சிக்காரனான ராஜேந்திரன்' என்று தமிழ் நாட்டில் கொட்டை எழுத்துக்களால் பத்திரிகைக்காரங்க போட்டுடுவாங்களே!" என்று கூறி கதிர்காமப் பயணத்தைத் தடுத்துவிட்டார். இதிலொரு உண்மையைப் புலப்படுத்துவதற்காகவே இந்த கருத்தை நான் வலியுறுத்துகின்றேன்.

என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களும் குழுவினரும் கதிர்காமம் சென்று திரும்பினர். சில மாதங்கள் கழித்து இங்கு நாடகங்கள் நடத்த வந்திருந்த டணால் கே.ஏ.தங்கவேலு, சரோஜா குழுவினரும் கதிர்காமம் சென்று திரும்பினர்.

1966ம் ஆண்டு இலங்கை வந்திருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், சரோஜாதேவி அவர்களும் கதிர்காமம் சென்று திரும்பினர்.

எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாடு திரும்பியதும், "நீங்கள் கதிர்காமத்துக்கும் போனீர்களாமே, அங்கு என்ன கண்டீர்கள்!" என்று கிண்டலாகவே பத்திரிகைக்காரர்கள் கேட்டனர். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள், "என் தாயைக் கண்டேன்!" என்று பதிலளித்தார்.

எம்.ஜி.ஆர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்; இருப்பினும் தனது தாயாரைத் தெய்வமாகவே கருதி வணங்கி வந்தார்.

சென்னையிலுள்ள ராமாவரம் என்ற இடத்தில் அமைந்துள்ள அவருடைய எம்.ஜி.ஆர். தோட்டத்தில், அவர் தங்கும் மாளிகையின் முன்புறத்தில் ஒரு கோவில் அமைத்து அதில் அவருடைய அன்னையாரின் படத்தைப் பிரதிஷ்டை செய்து, அவர் வெளியே போகும் போதும் வரும் போதும் வணங்கி விட்டே செல்வார்.

மேற்குறிப்பிட்டதைப் போல் கலைவாணர், தங்கவேல், எம்.ஜி.ஆர் போன்றவர்கள் கதிர்காமம் சென்றே நாடு திரும்பினர். அவர்கள் அனைவரும் திரையுலகில் மென்மேலும் சிறப்புடன் பிரகாசித்தனர். ஆனால் கதிர்காமத்தை புறக்கணித்த எஸ்.எஸ்.ஆர். அவர்கள் தொடர்ந்து திரைப் படங்களில் தோல்வியையே கண்டார். (இன்னும் வரும்)

இரா.பத்மநாதன்

---

# திரை உலகில் கருணாநிதி

11

மஞ்சள் திரையை விலக்கிக் கொண்டே ஓர் உருவம் அவர்கள் இருந்த இடம் நோக்கி வந்தது!

மழுமழு என்று மொட்டைத் தலை. இடையிலே காவியாடை. தோளிலே பாவித்துண்டு. கழுத்தில் உத்திராட்ச மாலை. நெற்றி நிறைய விபூதி.

'இவர்தான் பண்டாரம்!' என்றார் என்.எஸ்.கே.,

'சாமிக்கு எந்த ஊர்?' பண்டாரத்தைக் கேட்டார் கருணாநிதி.

பண்டாரம் பதில் சொல்லவில்லை.

கலைவாணர் சொன்னார்: 'சாமிக்கு காது கேட்காது. நான் சொல்கிறேன். சாமிகள் ரஷ்யாவிலிருந்து வருகிறது!'

"ரஷ்யா நாத்திக பூமியாயிற்றே? அங்கே இப்படி பட்டை தீட்டிக் கொண்டு கொட்டை கட்டிக் கொண்ட பண்டாரங்கள் உண்டா?" என்று கேட்டார் கருணாநிதி.

பண்டாரத்தைப் பார்த்தார் கலைவாணர்.

"உண்மையைச் சொல்லட்டுமா?'

பண்டாரம் தலையை ஆட்டினார்.

'போராட்டங்களில் ஈடுபட்டு அதனால் அரசாங்கத்தால் தேடப்படுகிற கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலர் 'அண்டர் கிரவுண்ட்' (தலை மறைவு) வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களில் ஒருவரான ஜீவானந்தம் தான் இவர், என்று புதிரை விடுவித்தார் கலைவாணர்.

தி.க.,விலும் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து நாளெல்லாம் நாத்திகம் பேசிய ஜீவானந்தத்திற்கு, ஆபத்துக் காலத்தில் அபயம் கொடுத்தது விபூதி பட்டையும், உத்திராட்சக் கொட்டையும் தான் என்பது சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது!

"பராசக்தி' படம், தீபாவளியன்று 1952ம் ஆண்டு திரைக்கு வந்தது. வாய்த்துக் கொண்டால் கிழவியும் பந்தடிப்பாள்," என்று கருணாநிதியே ஒரு முறை சொன்ன பழமொழிக்கு ஒப்ப, இந்தப் படத்திலே கிளைமாக்ஸ் காட்சியாக கோர்ட் சீன் அமைந்து விட்டது. அப்புறம் என்ன, கேட்கவா வேண்டும்? கருணாநிதி அள்ளி வீசினார் துள்ளு தமிழ் வசனங்களை. திருவாவடுதுறை ராஜரத்தினத்தின் நாதஸ்வரத்திலிருந்து பொரிகிற பிர்க்காக்களைப் போல ஒரே 'படபட'தான்.



இந்தப் படம் வெளிவருவதற்கு முன்பே கருணாநிதி தனது சொந்த சிந்தனைகளை, 'சிந்தனை ஆழி' என்றொரு சிறு புத்தகமாக வெளியிட்டிருந்தார். அதில் மொழி, நாடு, காதல், கடவுள் என்கிற தலைப்புகளிலே தனது கருத்துக்களை எழுதியிருந்தார். 'கடவுள்' என்ற தலைப்பில் 'பக்தியின் பெயரால் பணம் பறிக்கும் கொள்ளைக் கூட்டத்தை வளரவிட்டது யார் குற்றம்? பஞ்சத் தின் குற்றமா? பஞ்சத்தை மஞ்சத்துக்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா? கடவுளின் பேரால காம லீலைகளை நடத்தும் போலிப் பூசாரிகளை நாட்டிலே நடமாட விட்டது யார் குற்றம்? கடவுளின் குற்றமா? அல்லது கடவுளின் பெயரைச் சொல்லி காலாட்சேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா?' என்று எழுதியிருந்தார்.

அந்த வசனக் கைவரிசைகளை எல்லாம் 'பராசக்தி' படத்தில் இடம்பார்த்துப் புகுத்திவிட்டார்.

படத்தில் கருணாநிதி, தமிழ் நாட்டுப்பெண்களின் வாழ்க்கை நிதர்சனத்தை 'சிக்'கென்று இரண்டே வரியில் படம்பிடித்துக் காட்டினார், தனது வசனத்தால்!

பார்வதி: விதவைக் (கல்யாணியிடம்) 'ஒரு சாதாரண இட்லிக் கடை வைத்தால் வயிறு வளர்க்க முடியாமலா போகும்?'

கல்யாணி: (திடுக்கிட்டு) 'ஆ, இட்லிக் கடையா?'

பார்வதி: 'தமிழ்நாட்டிலே தாலி அறுத்தவர்களுக்கெல்லாம் அதுதானே தாசில் உத்தியோகம்?'

படம் வெளிவந்து இன்று 43 வருடங்களான பிறகும் தமிழ்நாட்டில் கணவனை இழந்த பெண்களின் நிலை இதுவாகவே இருக்கிறது என்பதும், இட்லிக்கு பதில் தையல் மெஷின் ஈடுசெய்கிறது என்பதும் தானே உண்மை!

'பராசக்தி' படத்தில்தான் 'திராவிட நாடு' என்னும் பிரகடனம் முதன் முதலாக, திரைப்படம் ஒன்றில் செய்யப்பட்டது. 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற பாரதிதாசன் பாடல் டைட்டில் சாங் (தலைப்புப் பாடல்) ஆக இடம்பெற்றது.

நடிகர் எஸ்.வி.சகஸ்ரநாமம் சொல்லுகிறார்: 'பராசக்தி, படத்தின் போது காட்சிக்கு காட்சி உரையாடல்களை ஸ்டுடியோவிற்கு வந்து நேரில் எழுதிக் கொடுப்பார் கருணாநிதி. இயக்குநருக்கும், தயாரிப்பாளருக்கும் திருப்திகரமாக இல்லை என்று தெரிந்தால், அவர்கள் முழுமனதோடு அந்தக் காட்சியை ஏற்றுக் கொள்ளும் வரையில் எழுதித் தருவார்.

நல்ல சுறுசுறுப்பு, தீர்க்கமான சிந்தனை - உரையாடல்கள் நடிப்பவர்களுக்கு உணர்ச்சியூட்டுபவையாக, பாவத்துடன் அவர்களை இயங்க வைக்கும். சிவாஜிகணேசன் வாதாடும் நீதிமன்றக் காட்சிக்கு மட்டும் பத்துப் பதினைந்து முறை இயக்குநரும், தயாரிப்பாளரும் ஏற்றுக் கொள்ளும் வரை எழுதிக் கொடுத்திருக்கிறார்.

அப்போதும் அடிக்குறிப்பில் ஒருவரி எழுதிவிட்டு அவசரமாக பொதுக் கூட்டத்திற்கோ, கட்சியின் மற்ற அலுவல்களிலோ கலந்து கொள்ளப் போய் விடுவார். அடிக்குறிப்பில் எழுதியிருப்பது என்ன தெரியுமா? 'இந்தக் காட்சியை மாற்றி எழுதியிருக்கிறேன். இது உங்களுக்குத் திருப்தியாக இல்லையென்று மனம்விட்டுச் சொன்னால் மீண்டும் மீண்டும் எழுதித்தர தயங்கமாட்டேன்,' என்று குறிப்பிட்டிருக்கும்.

இதே கருணாநிதி எழுதிய ஒரு வசனத்தை, 'இது என் கொள்கைக்கு முரணாக இருக்கிறது. அதனால் இந்த வசனத்தை நான் பேச மாட்டேன்,' என்று தூக்கி எறிந்தார் ஒரு நடிகை.

இது நடந்தது 'குறவஞ்சி' படப்பிடிப்பில்.

இளம் பெண்ணொருத்தி வில்லனிடம் சிக்கிக் கொள்கிறாள். அவனிடமிருந்து தப்பிட அவள் எவ்வளவோ முயற்சிக்கிறாள். பயனில்லை. அந்தக் கட்டத்தில் அவள், 'அட கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?' என்று சொல்லிக் கதற வேண்டும்.

சம்பந்தப்பட்ட நடிகை அந்த வசனத்தை சொல்ல மாட்டேன் வேறு ஏதாவது மாற்றுங்கள் என்று சொல்லிவிட்டார்.

இயக்குநர் எவ்வளவோ சொல்லி பார்த்தார். அந்த நடிகையோ, 'கடவுளை தூஷிக்கும் அந்த வசனத்தை நான் பேச மாட்டேன்,' என்று அடியோடு மறுத்து விட்டார்.

பக்கத்து 'செட்'டில் வேறோர் படப்பிடிப்பிலிருந்த நடிகை பண்டரிபாய். நிலமையை உணர்ந்து, 'இது ஆண்டவனிடம் மனப்பூர்வமாக, சந்நிதானத்திலே கூட அல்ல; நடிப்புக்கு தூர்குணிடமிருந்து விடுபடும் ஒரு காட்சிக்காகத் தானேம்மா நீ சொல்லப்போகிறாய். பேசாமல் அந்த வசனத்தைப் பேசி நடியம்மா!' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

ஆர்.சி.சம்பத்

அப்போதும் தனது கொள்கையிலே உறுதியாக நின்று, 'நாத்திக வசனம் பேசமாட்டேன்'. என்றார் அந்த நடிகை.

அந்த நேரம் பார்த்து கருணாநிதி எதேச்சையாக அங்கே வந்து விட்டார். 'என்ன, அந்த வசனத்தைப் பேசி நடிக்க மாட்டார்களா?' என்று கேட்டார்.

(வருவார்)

# 'அனுபவம்'

என்னமாதிரி துடி துடிப்பான பிள்ளை... ஒன்று இரண்டு நாட்களைத் தாக் காட்டுவதும் கஷ்டம் என்கின்ற மாதிரி துவண்டு கிடக்குது....

"ஜனா..... என்னம்மா செய்யுது?"

அந்த இலவச வைத்தியசாலைக் கட்டிலில் இரு கைகளையும் ஊன்றி குழந்தையின் முகத்துக்கு அருகே நெருங்கிக் கேட்கின்றேன்.

குழந்தையின் தந்தையும் தாயும் தூக்கத்தையும் ஊனையும் மறந்து பல நாட்கள் ஆகிவிட்டன என்பதை அவரவர் உருவ இலட்சணமே எடுத்தியம்பியது.

குழந்தை என்னை உற்றுப்பார்த்தபடி, கலங்கிப் போயிருந்தாள்.

"பிள்ளைக்கு என்னம்மா செய்யுது...?" எனது கேள்விக்கான பதிலை பிள்ளையிடமிருந்து பெற தாயாரான ராஜி அக்கா முயல்கிறாள். குழந்தையின் கண்கள் கலங்கி, விழிநீர் கன்னங்கள் வழியே விழுகின்றது. உதடுகள் விம்முகின்றன.

ராஜியக்கா அழுதபடியே பேசுகின்றாள்....

"பிள்ளைக்கு மனோ பெரிதாக காய்ச்சல் என்று இல்லை. வயிற்றில் ஏதோ ஒரு பிரச்சனை இருக்குது. ஒரு கிழமையாகச் சாப்பாடு இல்லாமல் இருந்தும் வயிறு வீக்கமாக இருக்கின்றது. 'சேலைன்' தொடர்ந்து ஏற்றப்படுகின்றது."

"கவலைப் படாதையுங்கோ அக்கா.... கடவுள் எங்களுக்கு அப்படி சிறிய சிறிய சோதனைகளைத் தருவது நாங்கள் பெரிய சிக்கல்களில் மாட்டுப்பட்டு விடாதபடி முன் எச்சரிக்கையாக இருப்பதற்காகத்தான். ஜனாவுக்கு விரைவில் சுகம் வந்துவிடும். நீங்களும் எதிர்காலத்தில் பிள்ளையில் கூடிய அக்கறை எடுக்கலாம்...."

வெளிநாடு போய் எனது எதிர்கால துணைவருடன் இணைந்து கொள்வதற்கு ஏதுவாக தலைநகரில் தங்கியிருந்து 'பாஸ்போர்ட்', 'மெடிகல்', 'விசா' என்று அலைந்து திரியும் எனக்கு பக்கத்து 'போர்சனில்' வாழ்ந்து வரும் ராஜியக்கா குடும்பம் சிறிய கால சினேகிதம்தான். ஆனால் நாங்கள் குழந்தையின் அன்னியோன்யம் காரணமாக அன்பினால் பிணைந்திருந்தோம்.

ராஜியக்காவும் கணவரும் தொழிலுக்கு புறப்பட்டு விட, மூன்று வயதும் நிரம்பாத ஜனாவை பராமரிக்கும் பொறுப்பு பத்து வயதே நிரம்பிய வேலைக்காரச் சிறுமி ஒருத்தியினுடையதாய் இருந்தது.

ஜனா குறும்புகள் செய்து..... விளையாடி..... அடம் பிடித்து அழுவதும்.... பருவமடையாத மற்றொரு சிறுமி பொறுப்பெடுத்து அவனை சமாளிக்க போராடுவதும் எனக்கு மிகுந்த கவலையை அளித்தது.

கணவன்-மனைவி இருவரும் உத்தியோகம் பார்ப்பதனால் பிள்ளைகளுடைய உடல் நலமும் மன நலனும் ஒருங்கே பாதிப்படையவே செய்யும்....

ராஜியக்கா உத்தியோகம் என்று போய் பெரிதாக எவ்வளவு தொகை சம்பாதித்து விடுவாள்? கணவனின் சம்பாத்தியத்தில் சிக்கனமாக வாழப் பழகி விட்டாலே, குடும்பத்தை நன்றாக நிர்வகித்து குழந்தையையும் கவனமெடுத்து வளர்த்து நல்ல நிலைக்கு, கொண்டு வரலாம். அவ்வைத்தியசாலைக்



கான பார்வையாளர் நேரம் முடிவடைந்தமையை உணர்த்த மணி ஒலித்தது. ராஜியக்காவிடமும் குழந்தையிடமும் விடை பெற்று மனப் பாரத்துடன் வெளியேறினேன்.

மறுநாள் குழந்தையின் நிலை மேலும் மோசமடைந்தது.... நான் வைத்தியசாலைக்குச் சென்றபோது பிள்ளையை 'சேர்ஜனுடைய' 'வார்ட்டுக்கு' மாற்றி விட்டிருந்தார்கள்.

'எக்ஸ்ரே', 'ஈ.சீ.ஜீ. என்று எல்லா 'ரெஸ்ரும்' எடுத்துப் பார்த்தார்கள். 'ரியூப்' மூலம் வயிற்றிலிருந்து அழுக்குகள் பச்சை நிறத்தில் திரவமாக வெளிவந்தன. ஆனால் நோய் என்ன என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

பதினான்கு நாட்களுக்கு மேலாக எந்த வித ஆகாரமுமில்லாமல், குழந்தை பிடுங்கிப் போடப்பட்ட பூந்தளிர் போல வாடிக்கிடக்க....

'சேர்ஜன்' கூறினார்...... "சத்திரசிகிச்சை செய்துதான் நோயைக் கண்டு பிடிக்க வேண்டும். உங்களுடைய முடிவைச் சொல்லுங்கோ?"

ராஜியக்காவுக்கு தலை சுற்றியது. எனது மடியில் சாய்த்துக் கொண்டாள். பரிகாரம் என்பது வேறு.... நாங்கள் கொஞ்சி அணைத்து முகர்ந்து அன்பு பாராட்டுகின்ற குழந்தையில் கத்தி வைப்பது என்பது...? அதை எந்த பாசமுள்ள தாயால்தான் தாங்கிக் கொள்ள முடியும்...?

"அக்கா... இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டாம். நோய்க்குத்தான் சத்திரசிகிச்சை பரிகாரமாக இருக்க வேண்டும். சத்திர சிகிச்சை செய்துதான் நோயைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால், அது இவர்களுடைய தகுதியின்மையைத்தான் வெளிப்படுத்துகின்றது. குழந்தையை நாங்கள் பணயம் வைக்க இயலாது."

நான் கூறவும் ராஜியக்கா தனது கணவரை நிமிர்ந்து பார்த்தாள்.... "நாங்கள் பிறைவேட்'டுக்கு குழந்தையை மாற்றுவம்."

"ஓம் அப்படித்தான் செய்வம்"

"தாமதிக்க முடியாது.... அதுதான் சரி..."

சிகிச்சைக்கு எதிராக குழந்தையை 'டிஸ்சார்ஜ்' செய்வதாக கையொப்பம்....

தனி வாகனத்தில் குழந்தையை எனது மடியில் வைத்து மூவரும் விரைந்தோம்.... தனியார் வைத்தியசாலை.... அவசரசிகிச்சைப் பிரிவு....

குழந்தை பாரம் எடுக்கப்பட்டது.

'மொபைல் ரெலிஃபோன்' உரையாடல்கள்..... 'ஸ்பெசலிஸ்ற்' 'சேர்ஜன்ஸ்', தாதிமார்... பலதரப்பட்ட 'ரெஸ்ற்'....

ஒரு சில நிமிடங்களில் நோய் 'டயக்நோஸிஸ்' பண்ணப்பட்டு எமக்கு முடிவு கூறப்பட்டது.

'அப்பெண்டிசைஸுக்கான' சத்திர சிகிச்சை உடனே செய்ய வேண்டும். ராஜியக்கா எனது தூண்டுதலில் நம்பிக்கையுடன் அனுமதி தெரிவித்து கையொப்பமிட்டார்.

மெல்லிய வெள்ளை வெளேரென்ற 'கிளவுஸை' கைகளில் மாட்டியபடியே, அந்த மிக மிக இளவயதினரான 'சேர்ஜன்' அண்மித்து கூறினார்.... "அப்பெண்டிசைடிஸ் ஆபரேசன்' சாதாரணமாக பதினைந்தே நிமிடங்களில் முடிந்து விடும். ஆனால் இந்த 'கேஸில்', 'அப்பெண்டிக்ஸ்' வெடித்துவிட்டது. ஆபத்து எதுவும் இல்லை. ஆனால் சத்திர சிகிச்சை நேரம் ஒன்றரை மணித்தியாலயங்கள் கூட எடுக்கலாம். அதற்காக நீங்கள் பயப்படத் வேண்டியதில்லை."

"ஒப்பரேசன் சக்ஸஸ்!' ஆனால் ஆறு நாட்கள் சென்றும் உடலிலிருந்து கழிவுகள் இயற்கையாக வெளியேறவில்லை. எங்கோ தவறு நேர்ந்திருக்க வேண்டும்."

மீண்டும் சத்திரசிகிச்சை....!

எல்லாவற்றுக்கும் குழந்தை ஒத்துழைத்தது இல்லை.... இல்லை... உயிர் உடலுடன் ஒட்டிக் கொண்டு ஒத்துழைத்தது....

'சேர்ஜன்' இப்போது கூறினார்....' "எல்லாம் பெர்பெஃற், நாங்கள்தான் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டோம்."

'பில்லில்' அந்த சத்திரசிகிச்சைக்கான கட்டணம் போடப்படவில்லை!

ஒருவாறு நல்லபடியாக வீடு வந்து சேர்ந்தோம். குழந்தை காயங்கள் ஆறி தேறி வந்தாள். ராஜியக்காவின் கணவர் அலுவலகம் செல்ல தொடங்கியிருந்தார்....

ஒரு நாள் தனது ஆடைகள் சிலவற்றை எனது அறைக்கு எடுத்து வந்த ராஜியக்கா கூறினாள்..... "மனோ.... ஜனா என்னை வேலைக்குப் போக வேண்டாம் என்று அடம் பிடிக்கிறாள். நீங்கள் கொஞ்சநேரம் போய் அவளுக்கு விளையாட்டு காட்டுங்கோ... நான் இங்கிருந்தே வெளிக்கிட்டு போனால் பிறகு வேலைக்காரி சமாளிப்பாள்."

அரைமனத்துடன் சம்மதித்து, நான் ஜனாவைப் பார்க்கப்போனேன். குழந்தையின் கையிலிருந்த 'சொக்கோ நட்ஸ்' மிட்டாய்கள் தவறி தூசி படிந்த நிலத்தில் உருள, குழந்தை அவற்றைப் பொறுக்கி எடுத்தபடி என்னை ஒரு கேள்விக் குறியுடன் பார்த்தது.

அவற்றை வாயிலிடலாமா ஆகாதா? என்பதனை அவள் அறியாள்.... ஆனால் தன்னை நலத்துடன் இருக்கும் வண்ணம் பராமரிக்க அம்மா அவசியம் என்ற அனுபவத்தை அந்தக் குழந்தை பெற்றுவிட்டது.....

அம்மா....? ■

**திருமலை வீ.என்.சந்திரகாந்தி**

# முதல் இரவு

ரெஜிஸ்றேஷன், கல்யாணவீடு என்று இரண்டுமே ஒரே நாளில். சலிப்பாக இருந்தது. குளித்துவிட்டு தலையைத் துவட்டிக் கொண்டுவந்தேன். திறந்திருந்த ஜன்னல் ஓரமாக மழைச்சாறல் உள்ளே அடித்துக் கொண்டிருந்தது. கதவைப்பூட்டிவிட்டு சிகரட்டொன்றைப் பற்ற வைத்துக் கொணடேன். ஓர் ஆணின் எதிர்பார்ப்பெல்லாம் அவனது மனைவிதான். அந்த எதிர்பார்ப்பை எதிர்பார்த்தபடி காத்திருந்தேன். கதவு திறந்து பூட்டும் சத்தம், என் மனைவி தலைகுனிந்து வந்து கொண்டிருந்தாள். வந்தவளை அருகில் அமருமாறு சைகை செய்தேன். அவள் இடைவெளிவிட்டு அமர்ந்து கொண்டாள். அவளது உடம்பில் ஏதோ ஒருவித நடுக்கத்தை உணரமுடிந்தது. "என்ன ஃபேனை நிறுத்தட்டா?", அவளுடைய பதிலுக்குக்காத்திராமல் அப்படியே செய்தேன்.


அந்த மெல்லிய வெளிச்சத்தில் எந்தவித அலங்காரமுமின்றி அவள் முகம் பளபளத்தது. நிலவிய மௌனத்தை உடைத்தவனாய் "எனக்கு எல்லாமே ஃப்ராங்காத்தான் கதைச்சுப் பழக்கம்!" என்று அவளைப்பார்த்தேன். அவள் அப்படியே இருந்தாள். "நான் கொஞ்சம் கோபக்காரனெண்டு சொல்லுவினம்... றிங்ஸ் அப்பப்ப எடுப்பன், ஐம் ஏ செயின் ஸ்மோக்கர்" சிகரெட்டை இழுத்து விட்டு ஆஷ்றேயில் புதைத்தேன். அவளிடமிருந்து பதிலில்லை. முதுகுப்புறம் காட்டி அமர்ந்திருந்தவளை மெதுவாகத் தொட்டுத் திருப்பினேன். அவள் முகம் சிவந்திருந்தது; கன்னங்களில் கண்ணீர் முத்துக் கோர்த்திருந்தது. "நீ சொன்னா றிங்ஸ், ஸ்மோக்கிங் எல்லாத்தையும் விட்டுர்றன்!" நான் படபடக்க, அவளது விம்மல் அதிகரித்தது. "நான் மனம் நோகும்படியா ஏதாவது....?" முடிக்கு முன் அவள் குறுக்கிட்டாள். "நான்தான் உங்கட மனம் நோகும்படியா நடந்து கொண்டுவிட்டன்!" சொல்லியவாறு என் காலில் விழுந்தவளை, அருகில் அமர்த்தி அமைதிப்படுத்த முயன்றேன்; முடியவில்லை. அவள் கன்னத்தை கைகளில் ஏந்தி கண்களை உற்றுப்பார்த்தேன். அவள் சொன்னாள்; திடீரென்று என் மூளையில் மின்னலொன்று வெட்டியது போலிருந்தது.

'ஆம், என் மனைவி, இன்னொருவனின் முன்னாள் காதலி'

"நானும் கரனும் முதல்ல சந்திச்சுக் கொண்டது 'ஏ' லெவல் படிக்கேக்க. அவன் ஒருநாள்தன்னும் என்னை பார்க்காம இருக்கமாட்டான். சந்திக்காட்டி ஒரு ஃபோனாவது பண்ணுவான். அந்த மூன்று வருஷமும் எங்களுக்கு சொர்க்கமாகத்தானிருந்தது." நிறுத்தி என் முகம் பார்த்தவள், எழுந்து ஜன்னலோரமாகப்போக, என் உதட்டில் ஒரு சிகரெட் ஏறியது. ".... ஈ-ஃபக்கல்ற்றி கிடைச்சதுக்குப்பிறகு என்னை சந்திக்கிறதையே தவிர்க்கத் துவங்கினான். என்னால அந்தப்பிரிவை ஜீரணிக்கமுடியாம இருந்துது. எத்தனை நாள் தூக்கமில்லாம, பட்டினியாக்கூட இருந்திருக்கிறன். ஆனா... காலம் எதையும் மாத்திடுமெண்டு சொல்லுவினம், இப்பப் பழசையெல்லாம் நினைக்கேக்க எவ்வளவு மோட்டுத்தனமெண்டு விளங்குது. ஆனா இதையெல்லாம் உங்களுக்குச் சொல்லும்வரைக்கும் ஏதோ ஒரு குற்ற உணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருந்துது!" முடித்தாள். ஏன் மணவறையில்கூட அவள் சந்தோஷமாயில்லை. இப்போது காரணம் புரிந்தது. 'கரனுக்கு என்ன நடந்தது?', நான் கேட்குமுன்னரே அவளிடமிருந்து பதில் வந்தது. "போன வருஷம்தான் அவனுக்கும் மில் முதலாளியின்ர மகளுக்கும் கல்யாணம் நடந்ததுன்னு கேள்விப்பட்டன்!" மெல்லிய குரலில் சொல்லிவிட்டு, ஒரு குழந்தை பார்ப்பதுபோல என்னைப் பார்த்தாள்.

"ஏன் இதை எங்கட கல்யாணத்துக்கு முதலே சொல்லேல்லை?" கண்டிப்பான குரலில் நான் கேட்டது! அவளைப் பதட்டத்துக்குள்ளாக்கியிருக்க வேண்டும். "அது வந்து... நான்..." பதறினாள்.

"அப்ப சொல்லி யிருந்தா, இந்தக் குற்ற உணர்வு அப்பவே இல்லாமப்போயிருக்குமே!" புகைந்துகொண்டிருந்த சிகரெட்டை ஆஷ்றேயில் அணைத்தேன். அவள், "நீங்கள் என்ன சொல்றீங்கள்?" என்பதுபோல் பார்ப்பது புரிந்தது. "எந்தப் பிரச்சனையையும் மனதில வச்சு அலட்டிக்கக்கூடாது. அது ஒருவகையில நாமே நமக்கு கொடுத்துக்கொள்ளுற தண்டனைதான். எத்தனையோ கணவன் மனைவிமாரைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொருவருக்குள்ளேயும் ஆயிரம் ரகசியங்கள்; அதால ஆயிரம் பிரச்சனைகள். ஆனா நான் அதிஷ்டசாலிதான் நீ எனக்கு மனைவியானதில!", நான் கூறிமுடிக்கவும் அவள் என்னைத் தழுவிக்கொள்ளவும் சரியாக இருந்தது. நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்கும். என்நெஞ்சில் சாய்ந்திருந்த அவள் முகம் பார்த்தேன். இதுதான் நிம்மதியான முதல் இரவு என்பது போல அவள் உறங்கிக்கொண்டிருந்தாள். ■




**க. ராகுலன் -வெள்ளவத்தை**

தாய் அன்பிற்கு ஈடு இணை இல்லை என்பது எத்தனைபேருக்கு புரிகிறது? பெற்ற தாயையே பொறுப்பென எண்ணுபவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

ஒரு சனிக்கிழமை ஓவர்ரைம் வேலைக்கு சென்று வீடுதிரும்பிய விதவை தாயிடம், பத்துவயது மகன் ஒரு துண்டை நீட்டினான். வாங்கிப்படித்தாள் தாய். அதில் இப்படி எழுதியிருந்தது.

'அம்மா இன்று காலை நான் படித்த பத்திரிகையில் 'ஒவ்வொரு உழைப்பிற்கும் அதற்கான ஊதியம் வழங்கப்படல்வேண்டும்' என எழுதியிருந்தது. அதனால் இதனை எழுதுகிறேன்' என்று தான் அன்று செய்த வேலைகளையும் அதற்கு அவன் தாய் கொடுக்க வேண்டிய கூலியையும் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தான்.

# பெத்த கடன்



**பொன்னன்**

1. இன்று அதிகாலை புகையிரத நிலையம் வரை உனக்கு பாதுகாப்பாக வந்தது -ரூ 2.00
2. தம்பிப்பாப்பாவிற்கு பால் கொடுத்தது -ரூ 1.00
3. அழுது அடம்பிடித்த தம்பியை பாட்டுப்பாடி தூங்கவைத்தது -ரூ 1.00
4. நீ தோய்த்து காயப்போட்ட உடுப்புகளை மடித்து வைத்தது -ரூ 2.00
5. குசினிக் குப்பைகளை குப்பைவண்டிக்காரரிடம் தூக்கிக்கொடுத்தது -ரூ 2.00
6. நீ தைத்த சட்டைகளை ராதா அன்ரியிடம் கொண்டுபோய் கொடுத்தது -ரூ 2.00

மொத்தம்-ரூ 10.00

படித்த தாயின் கண்கள் பனித்தன. அதேதாளில் கீழ்வருமாறு எழுதினாள்:

1. நீ கருவானது முதல் 9 மாதங்கள் உன்னை சுமந்தது - இலவசம்
2. நீ பிறந்தது முதல் தவழ்ந்தது நடந்ததுவரை பாதுகாப்பாக இருந்தது - இலவசம்
3. உனக்கு அகரம் முதல் பாடசாலை ஆரம்பம் வரை போதித்தது - இலவசம்
4. நோய் கண்டபோதெல்லாம் கண்விழித்து உன்னை காத்தது - இலவசம்
5. உன் தந்தை இறந்தபின் உனக்கு தாயும் தந்தையுமாய் இருப்பது - இலவசம்
6. நீ கம்பியூட்டர் இஞ்சினியராக வரும்வரை பாடுபடப்போவது - இலவசம்

தாய் மகனிடம் துண்டை நீட்டினாள். வாங்கிப் படித்தான் தனயன். இப்போது அவன் கண்கள் பனித்தன. அதேதாளில் தான் எழுதிய கணக்கு விவரத்தின் கீழ் மிகப் பெரிய எழுத்தில் பின்வருமாறு எழுதினான்.

'நான் என்தாய்க்கு செய்த, செய்கின்ற, செய்யப் போகும் அனைத்து சேவைகளுக்கும் முன்பணம் ஏற்கனவே முழுமையாக செலுத்தப்பட்டுவிட்டன.

என் தாயின் கடனைத்தான்; நான்பட்ட கடனைத்தான் செலுத்த வேண்டும்'.

அந்த பிஞ்சு மனம் புடம் போடப்பட்டுவிட்டது. இனி அவன் தன் தாய்க்கு செய்யும் சேவைக்குக் கூலி எதிர்பார்க்கமாட்டான். ஆனால் இன்று எத்தனையோ பேர் தம் தாய்க்கு தாம் செய்யவேண்டிய கடமையை மறந்ததால்தான் அன்னையரை நாம் அனாதை விடுதிகளிலும் வயோதிப மடங்களிலும் காண்கிறோமா?

# காதலாகிக் கசிந்துருகி...

**இலக்கிய நயம்**

**தருவது முழுடில்யன்**



"**கே**ட்ட பொழுதில் பொருள்
-கொடுப்பான்; சொல்லுங்
கேலி பொறுத்திடுவான்; -எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான்; என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை
-இஃதென்று
நான் சொல்லும் முன் உணர்வான் அன்பர்
கூட்டத்திலே இந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுளரோ?"

பெருங்குரலெடுத்துப் பாடிக் கொண்டிருந்தான் அபயன். தன்னை மறந்து கண்களை மூடிக் கிறங்கிய நிலையில் அமர்ந்திருந்தான். இமை ஓரங்களில் நீர் கசிந்தது.

"அபயா என்ன நடந்து விட்டது? நீ பாடும் சத்தம் கேட்டு இங்கு வந்தேன்.... ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?"

விழிகளைத் திறந்த அபயன், எதிரே எழிலரசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

"வா எழில்..... இந்த பாரதி மகா பாக்யசாலி, அன்பில் நெகிழ்ந்து பரவசமுறும் பல தருணங்களை அவன் அனுபவித்திருக்கிறான். நட்பின் பிணைப்புக் கயிறாகவும் அன்புதான் தெரிகிறது அவனுக்கு...."

அபயன் அருகில் வந்தமர்ந்து கொண்டான் எழில்.

"உயிர்த் தோற்றத்திற்கு அத்திவாரமே அன்புதானே. எல்லா இன்பங்களுக்கும் மூலமும் அதுதான். குஷி மூடிலிருக்கிறாய் போலும். பாட்டெல்லாம் ஒரே அமர்க்களமாயிருக்கிறதே! கண்ணீர்த்துளிவர உள்ளுருக்கியிருக்கிறது பாரதி பாடல்...."

"மனதில் எப்படி மச்சான் உண்டாகுது இந்த அன்பிற்கான தூண்டல்? கடவுளிடம் கொண்ட அன்பு மேலிட்டால் அடியார்கள் கண்ணீர் கசிந்துருகிப் பாடியதையெல்லாம் கேட்டால் நமக்கும் இதயம் பொங்கி இரு விழியாலும் வழிகிறதே...!"

"அன்பெனும் தாய் பெற்றெடுக்கும் குழந்தை தானாம் அருள். வள்ளுவர் சொல்கிறார். அன்பைப் பொங்க விடுகிறபோது, உள்ளம் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுகிறது. காரணங்களை ஆராய்ந்து கொண்டிராமல் கரைந்துருகிக் கண்ணீர் உகுத்து உடல் முழுவதும் இதயமாகித் துடிக்கும் நெகிழ்வுக்குள் நம்மைக் கிடத்தி விடுகிறது...."

"கடவுளிடத்தில் அன்றுற்பு பெருகிய அடியார்களுக்கெல்லாம் ஏன் காதலியாகவோ காதலனாகவோ அவர் தோன்றுகிறார்?"

"வேறு உறவுகளிடம் தோன்றமுடியாத அந்நியோன்யம் காதல் உறவில்தான் இருக்கிறது. 'தொடர்புடையார் கண் உண்டாவது அன்பு' என்றார் அன்புடைமை அதிகாரத்தை அறிமுகப்படுத்தி உரையெழுதுகிற பரிமேலழகர். ஆனால் தொடர்பே இல்லாதவர்களிடத்தில் தொடர்பை ஏற்படுத்தி விடுவதாகவும் காதல் இருக்கிறது. பேரையும் ஊரையும் கேட்டுக் கொண்ட மாத்திரத்தில் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு பெயர்த்தும் அவனுக்கே பிச்சியாகி விடுகிற அழுத்தத்தைக் காதல்தான் கொடுக்கிறது. 'மானிடர்க்கென்று பேச்சுப் படில் வாழ்கில்லேன் கண்டாய்' என்று திருவரங்க நாதரை நாயகராய் வரித்துக் கொண்ட ஆண்டாள் முரண்டு பிடிக்கவும் காதல்தான் சொல்லிக் கொடுக்கிறது...."

"இந்தக் காதலின் உச்ச நிலை மிக மோசமான வெறிக்கெல்லாம் இட்டுச் சென்றுவிடுகிறது. கண்ணை அப்புகிறார்கள், கழுத்தை யானையின் காலால் இடறச் சொல்கிறார்கள், பிள்ளையைக் கறி சமைத்துக் கொடுக்கிறார்கள். தலைமுடியைப் பிடுங்கி கோயில் விளக்கெரிக்கிறார்கள், கொல்ல வருபவனை அறிந்தும் கும்பிட்டு உபசரிக்கிறார்கள்...."

"ஆமாம், 'விருப்புறும் அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற்றெ....' அன்பால் துடிப்புறும் அவஸ்தைதான் காதல் அடியார்களுக்கு அதுதான் பக்தி. 'மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாவதும், காற்றிலேறி அவ்விண்ணையும் சாடிவிட்டு வரலாம்' என்று தோன்றுவதும் இந்த வெள்ளக்காற் பெருக்கினால் தான்...."

"இந்த வெள்ளப்பெருக்கு, தாகம் எல்லாம் எதனால் உண்டாகிறது என்று நினைக்கிறாய்?"

"அவளில்லாவிட்டால் இந்த நுரையீரலும் ஒரு குறைமீரல் என்று ஒரு திரைக்காதலன் பாடுவதைக் கேட்டிருக்கிறாயல்லவா? எல்லா உயிர்களும் குறையுடன் தான் தோன்றுகின்றன போலும். ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் முழுமையடைந்து கொள்வதற்காகத் தேடுகிறார்கள். ஒரு படி மேலே சென்றுவிட்டவர்கள் இறைவனோடு இணைந்து விடுவதில்தான் முழுமை பெறமுடியும் எனத் துடிக்கிறார்கள். அனேகமாய் எல்லா மதங்களிலும் பக்தி இலக்கியங்களில் இந்த நாயக நாயகி பாவத்தில் பாடித்துதிப்பது இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க மதத்தில் யேசுநாதரை தொண்டர்கள் நாயக-நாயகி பாவத்தில் பாடி வழிபடும் ஸ்தோத்திரங்கள் உண்டு. இஸ்லாம் மதத்திலும் உண்டு. தன் ஆண்டானைக் காதலித்து அவனோடு ஒன்றி ஐக்கியமாகிவிட, வேண்டும் என்ற ஆசையை குணங்குடி மஸ்தான் பாடல்களில் நாம் காணமுடியும்.

"வேதாந்தமெல்லாம் விட்டேறியே கடந்து
காதலித்து நின்றேன் என் கண்ணே றகுமானே!
மாதா பிதாவும் என்னை மயக்கி மயக்கி உனைக்
காதலிக்க வொட்டார் என் கண்ணே றகுமானே!
போத மயமாக எங்கும் பூரணித்த காரணத்தைக்
காதலித்து நின்றேன் என் கண்ணே றகுமானே!
பேதலித்தேன் உன்னடிமை பேதமில்லாமல்
-உனைக்
காதலித்தேன் ஆண்டருள் செய் கண்ணே
-றகுமானே!"

என்று பாடுகிறார் குணங்குடி மஸ்தான், படித்திருக்கிறாயா?"

"இல்லை, ஆனால் பாரதி பாடல்களில் இந்தக் காதல் பரவசத்தைக் கண்டிருக்கிறேன்..."

"ஆமாம், வள்ளலாரிடம் இந்தக் காதல் பரவசம், நல்ல உவமை ஒன்றோடு வருகிறது. உதவும் நட்பு எப்படி இருக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறாரில்லையா? இடுப்பிலிருந்து ஆடை நழுவுகிறபோது, எப்படி வேகமாகச் சென்று நம்மையறியாமலே கை பிடித்து விடுகிறதோ, அப்படி உதவவேண்டும் என்கிறாரல்லவா? அந்தக் கை சென்று பிடிக்கும் வேகத்தை விட விரைவாக மனம் தியாகராஜரிடம் சென்று விடுகிறதாம்! காதல் பரவசத்தில், அவிழ்ந்த ஆடையைக் கை பற்றிப் பிடிக்கும் முன், மனம் விழுந்து கூத்தாடி அவரிடம் போய் விடுகிறதாம். பாடலைக் கேள்:

செழுந்தென் கடற் தெள்ளமுதனையார்
தியாகர் எனும் ஓர் திருப்பெயரார்
கொழுந்தன் பொழில் சூழ் ஒற்றிநினார்
கோலப்பவனி என்றார் நான்
எழுந்திங் கவிழ்ந்த கலைபுனைந்தங்
கேகு முன்னர் எனை விடுத்தே
அழுந்து நெஞ்சம் விழுந்து கூத்தாடி
அவர்முன் சென்றதுவே.

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை-தெ.ஆபிரிக்க மோதல்

**இ**லங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. அங்கு இலங்கை அணி 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் தென்னாபிரிக்க அணியுடன் மோதுகிறது. இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு.

**டெஸ்ட் போட்டிகள்**

| | | |
|---|---|---|
| முதலாவது டெஸ்ட் | டிசம்பர் 26-30 | டேர்பன் |
| இரண்டாவது டெஸ்ட் | ஜனவரி 02-06 | கேப் ரவுண் |
| மூன்றாவது டெஸ்ட் | ஜனவரி 20-24 | செஞ்சூரியன் பார்க் |

**ஒருநாள் போட்டிகள்**

| | | |
|---|---|---|
| முதல் போட்டி | டிசம்பர் 07 | சென் ஜோர்ஜ் பார்க் (பகலிரவு) |
| 2வது போட்டி | டிசம்பர் 17 | ஈஸ்ட் லண்டன் |
| 3வது போட்டி | ஜனவரி 09 | பார்ல் (பகலிரவு) |
| 4வது போட்டி | ஜனவரி 11 | கேப் ரவுண் (பகலிரவு) |
| 5வது போட்டி | ஜனவரி 14 | புளும் பொன்டெய்ன் |
| 6வது போட்டி | ஜனவரி 17 | ஜொகானஸ் பேக் (பகலிரவு) |

## வோவ் விளையாடமாட்டார்



**தொ**டர்ச்சியாக 12 டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிவென்று சாதனை படைத்திருக்கிறது. இந்தச் சாதனையைப் படைத்திருக்கும் அவுஸ்திரேலிய அணிக்கு தலைமை தாங்கியவர் ஸ்டீவ்வோவ்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதல் இரண்டு டெஸ்ட்போட்டிகளிலும் வென்று சாதனை படைத்திருக்கும் அவுஸ்திரேலிய அணி மே.இ.தீவுகள் அணிக்கெதிராக விளையாடும் 3வது டெஸ்ட் போட்டியில் கப்டன் ஸ்டீவ் வோவ் விளையாடமாட்டார் எனத் தெரியவருகிறது.

ஸ்டீவ் வோவிற்கு ஏற்பட்டிருக்கும் காயம் காரணமாக டிசம்பர் 15ம் திகதி அடிலெய்ட் நகரில் தொடங்கும் 3வது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார். ஸ்டீவ் வோவிற்குப் பதிலாக அவுஸ்திரேலிய அணியின் உபதலைவர் அடம் கில்கிறைஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை வரும் இங்கிலாந்து

**த**ற்போது பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி வரும் வருடம் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. வருகின்ற ஜனவரி 31 முதல் மார்ச் 28 வரை இலங்கையுடன் இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

# சிந்தியா பதில்கள்

▶▶ **பண்டாரவளையில் நடந்தேறிய கொடூரம் பற்றி?**

எஸ்.ஜெயக்குமார், அருப்பொல., எம்.ரமேஷ்,பண்டாரவளை., ந.தினேஷ், லிந்துலை., பி.எம்.சிவா, பசறை.

பேரினவாதத்தின் மற்றுமொரு கோரத் தாண்டவம். திட்டமிட்டவர்கள், செய்தவர்கள் சிங்கள இனவாத அமைப்புக் குண்டர்களாக இருந்தாலும், பொறுப்பேற்க வேண்டியது போலிசாரும் அரசாங்கமுமே!

▶▶ **அண்மையில் இலங்கையணிக்கு ஏதாவது கிரிக்கெட் போட்டி உள்ளதா?**

ஏ.எல்.முஹம்மட் நஸ்மி, அட்டாளைச்சேனை-02.

அதுதான் தென்னாபிரிக்கா சென்று விட்டார்களே. மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், ஆறு ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவிருக்கிறார்கள். நீங்கள் இந்தப் பதிலைப் படிக்கும் போது முதல் போட்டி ஆரம்பமாகியிருக்கும்.

▶▶ **"ன்றேகிக்லிதகா னைன்உ ன்நா"?**

ஆர்.நித்தியானந்தன், நாவலப்பிட்டிய.

!ம்லாகச்சியோ குறபி டுண்கொ துய்செரிச ச்தைப்பருபிம்ழகு.

▶▶ **'அந்தரங்கம் யாவுமே சொல்வதென்றால் பாவமே...' என்ற பாடல் இடம்பெற்ற படம் எது? நாயகன் யார்?**

ஆர்.கே.சீனு ஜெயா, திருகோணமலை.

படம் 'ஆயிரம் நிலவே வா' அந்தப்பாடலுக்கு இரட்டை வேடத்தில் நடித்தவர் நவரசநாயகன் கார்த்திக்.

▶▶ **தேவயானியின் வரவிருக்கும் படம் எது? அவரின் விலாசத்தையும் தயவு செய்து தருவீர்களா?**

வ.சுதா, மகா இறம்பைக்குளம்.

விஜய்யுடன் நடித்த 'ஃப்ரெண்ட்ஸ்', விலாசத்தை ஏறாவூர் ஏ.மூபாறக்கும் கேட்டிருக்கிறார். இருவருக்குமாக தேவயானியின் சென்னை முகவரி:

7/8, பிரின்ஸ் வில்லா 101,
ராஜாமன்னார் தெரு,சென்னை 600 017.

▶▶ **அமெரிக்க தேர்தல் குளறுபடி எப்படி?**

சி.துஷ்யந்தன், மண்டூர்.

அமெரிக்க தேர்தல் முறைக் கோளாறுகள் இம்முறை உலகம் முழுவதன் கவனத்துக்கும் தெரியவந்துள்ளது. அங்கு மக்கள் வாக்களித்து முடிந்தவுடன் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு விடுவதில்லை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதன் மக்கள் தொகை அடிப்படையில் இத்தனை எலக்டர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். மக்கள் வாக்களிப்பு (Popularvote) முடிந்த பிறகு, அதனடிப்படையில் அந்தந்த மாநில எலக்டர்கள் தான் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது Electoral College முறை எனப்படுகிறது. பல சமயங்களில் 'Popularvote' வெற்றிபெற்றவர், Electoral College வாக்கில் தோற்பதுண்டு. அந்த வகையில்தான் மக்கள் வோட்டில் வென்ற அல்கோர் எலக்டர் வோட்டில் தோற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் தற்போதைய இந்த தேர்தல் முறை 200 ஆண்டுகளுக்கு முன்னால் அடிமைச் சமுதாயம் இருந்தபோது உருவாக்கப்பட்டது தான். அடிமைகளுக்கு வாக்குரிமை இல்லை என்ற நிலையிலிருந்து படிப்படியாக கறுப்பர்களுக்கு, பெண்களுக்கு எல்லாம் வாக்குரிமை வந்தபிறகும் கூட மக்கள் போட்ட வாக்குகளின் அடிப்படையில் மட்டுமே நாட்டின் தலைமைப் பொறுப்புகளைக் கொடுத்துவிடக் கூடாது என்று அமெரிக்கர்கள் கருவதின் விளைவே

இந்த குளறுபடித் தேர்தல் முறை. "நம்மிடமிருந்து அமெரிக்கா கற்றுக் கொள்ள நிறையவே உண்டு. யோகா, கம்ப்யூட்டர் நிபுணர்களை மட்டுமல்ல, தேர்தல் கமிஷன் அலுவலர்களையும் அமெரிக்கா இறக்குமதி செய்து கொள்ளலாம்!" என்று எழுதியிருக்கிறார் இந்தியப் பத்திரிகையாளர் ஞாநி.



பிரியங்கா சோப்ரா

▶▶ **பிரியங்கா சோப்ரா?**

அ.வள்ளி நாயகி, கொழும்பு-13.

கம்ப்யூட்டர் எப்படி என்று சொன்னார்கள் அவர்கள், மூக்கில் விரலை வைக்கும் படி அதற்கான நிபுணர்களை உருவாக்கித் தந்துகொண்டிருக்கிறார்கள் இவர்கள். அழகிக்கு இலட்சணங்களை அவர்கள் சொன்னார்கள்; உற்பத்தி செய்து அனுப்பிவண்ணமிருக்கிறார்கள் இவர்கள்.

▶▶ **முகத்தில் கைகளில் முடி வளருகின்றன. நீங்கள் ஒரு பதிலில் மஞ்சள் பூசச் சொன்னீர்கள். மஞ்சள் பூசியும் முடி கொட்டவில்லை. வேறு ஏதேனும் முறைகள் அல்லது கிறீம் இருந்தால் தயவு செய்து சொல்வீர்களா? எவ்வாறு இந்த முடிகளை அகற்றுவது? ஜோக் எதுவும் சொல்லாமல் தயவுசெய்து பதில் தாருங்கள்!**

ஆர்.கலா, இறக்குவானை.

மஞ்சள் பூசுவதெல்லாம் சிறு மென்மயிர்களை மறைப்பதற்கான விளையாட்டுத்தான். அதைப் பெரிதாக நம்பாதீர்கள். நாளமில்லாச் சுரப்பிகளான அட்ரீனல் சுரப்பிகளின் கோளாறால் வளரும் இந்த முடிகளை அகற்ற கிறீம் வகைகளும் உதவ முடியாது. சவரம் செய்ய எண்ணவே எண்ணாதீர்கள். மீண்டும் அவை கருகருவென வளர்ந்துவிடும். மருத்துவர்களிடம் செல்லுங்கள். இந்த முடிகளை அகற்றுவதற்கு இப்போது Cosmetic Surgery உண்டு.

▶▶ **நன்மை செய்தோரின் உயிர்கள் சுவர்க்கத்தையும், தீமை செய்தோரின் உயிர்கள் நரகத்தையும் அடைவதாகக் கூறுகிறார்களே, இவ்வுலகினைத் தவிர சுவர்க்கம் நரகம் என்று உலகங்களும் உண்டா? கர்மவினை என்பது என்ன? விளக்கமான பதில் வேண்டும்.**

சரவணமுத்து நவேந்திரன், ஏருவில்.

கர்மவினைப்பயனை தீவிரமாக நம்பும் தேரன்பத் என்று ஒரு மதப்பிரிவு இந்தியாவில் இருந்திருக்கிறது. அது கூறுவதைக் கேளுங்கள். 'ஒரு கிணற்றோரமாய் நீங்கள் போய்க் கொண்டிருக்கும்போது யாரோ ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து விடுகிறார். "என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்!" என்று கத்துகிறார். நீங்கள் உங்கள் காதிலேயே விழாதது போலப் போய்க் கொண்டிருக்க, வேண்டும். ஏனென்றால், தான் கடந்த பிறவியில் செய்த ஏதோ தவறுக்காகத்தான் அவர் இவ்விதம் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் உதவி செய்து காப்பாற்றினாலும் அவர் மறுபடி விழவேண்டி இருக்கும். ஏனெனில் அது அவர் விதி. அதில் நீங்கள் குறுக்கிடுவது தேவையற்றது. அவரது கடந்த பிறவியின் பயன்களை அவர் அனுபவித்தே ஆக வேண்டும். நீங்கள் காப்பாற்றிய அந்த மனிதர் மறுநாளே ஒரு கொலை செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது நீங்களும் விதியின் விளைவுகளை அனுபவிக்க வேண்டியவராவீர்கள்...' இப்படிச் செல்கிறது அந்த கர்மவினைப் பயன் கோட்பாடு.

இந்த அபத்தங்களை எனக்கு ஏற்க முடிவதில்லை. இன்றைக்கு நான் செய்த பிழைக்கு இன்றைக்குத்தான் சுடும்; அடுத்த பிறவியில் அல்ல' என்பவர்களின் கட்சி நான்!

▶▶ **ஜோதிகா இப்போது நடித்துக் கொண்டிருக்கும் திரைப்படம் எது?**

ஐ.எப். ஜெரோஸா, புதியகாத்தான்குடி-06.

பிரசாந்துடன் நடிக்கும் 'ஸ்டார்' மற்றும் ஹாலிவுட் நடிகர் மிட்சம் உடன் நடிக்கும் ஆங்கிலப் படம் 'லிட்டில் ஜான்'.

▶▶ **'முகவரி' படத்தில் ஹரிஹரன் பாடிய, 'கீச்சு கிளியே என் காதில் ஃப்பிடிதானா?' அல்லது என் காதல் ஃப்பிடிதானா? எது சரி?**

எம்.ஜி.கே.ரஹ்மான், கல்பிட்டிய.

அடடா! மற்றைய புதுப் பாடல் வரிகளெல்லாம் விளங்கி விட்டதா உங்களுக்கு! உங்களைச் சந்திக்க வேண்டுமே நான்!

▶▶ **இலட்சியவாதிகள் ஆசைப்படக்கூடாது என்கிறார்களே..?**

பி.விக்னேஸ்வரன், அட்டன்.

இலட்சியத்திலுமா?

▶▶ **சிந்தியா சுவர்ண ஒலியில் தங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எது?**

வி.ருத்ரா, கொழும்பு-10.

பிடித்தது 'சுவர்ண கானம்' பிடிக்காதது அவர்கள் நிகழ்ச்சிகளுக்கு வைக்கும் பெயர்கள்!

# மன்னாதி மன்னன்

35

## கணவனைக் கொன்ற காதகி!

அரச குமாரனான சன்மார்க்கனும், அமைச்சரின் மகனான குண பத்திரனும் சோழநாட்டை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தபோது, இரு பட்சிகள் பேசிய பேச்சினை செவிமடுத்தான் மந்திரி குமாரன் குணபத்திரன். பட்சிகளோ, மிருகங்களோ பொய்யான வாக்குகளைக் கூறமாட்டா என்பதை அவன் நன்குணர்ந்தவன். இரண்டாவது தடவையாக அதேபட்சி, பின்னே செல்பவன், மரணமடையப் போகிறான் என்று கூறியதும் தன் நடையைத் தளர்த்தி, அரசகுமாரனுடன் முன்பின் என்றில்லாமல் இருவரும் சமமாகவே நடந்து செல்லத் தீர்மானித்தான்.

பட்சிகளின் வார்த்தைகள் எப்படியும் அறுபது நாழிகைக்குள் நடத்தேறிவிடும் என்ற உண்மையினையும் குணபத்திரன் அறிந்திருந்தான்.

சோழ நாட்டரசன் குசன் தனது மருமகன் சன்மார்க்கனையும் அவன் தோழனையும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தான். இருவரும் தங்குவதற்கு தனித்தனி மாளிகைகளை ஏற்பாடு செய்து கொடுத்தான்.

அரச குமாரனான சன்மார்க்கனுக்கு, பட்சி சொன்னது போல் ஏதாவது தீங்கு நடைபெற்றுவிடக் கூடாதே என்பதற்காக தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த மாளிகையில் அரசகுமாரனைத் தங்க வைத்துவிட்டு, அரசகுமாரனுக்காக ஒதுக்கப்பட்ட மாளிகையில் குண பத்திரன் தங்கினான். இவ்வாறு மாளிகையில் மாற்றம் செய்வதற்கான உண்மையான காரணத்தை சன்மார்க்கனிடம் கூறாமல் வேறு சாக்கினைச் சொல்லி விட்டான். தாங்களிரு வரும் இடம் மாறி தங்கியிருப்பதையும் மன்னன் குசனிடமும் அரண்மனையைச் சேர்ந்தவர்களிடமும் மந்திரிகுமாரன் கூறிவிட்டான்.

சன்மார்க்கன் நீண்டதூரம் பயணம் செய்து வந்திருந்மையினால் களைப்படைந்திருந்தான்.



எனவே மாளியையில் போடப்பட்டிருந்த மஞ்சத்தில் போய் படுத்ததும் தூங்கி விட்டான்.

சோழ மன்னனின் மகள் சரசவல்லி தாட்டில் சுவையான தின்பண்டங்களையும் பால், பழம் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு தயங்கியபடியே கணவன் சன்மார்க்கன் படுத்திருக்கும் அறையை அடைந்தாள். அங்கு தன் கணவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு நிம்மதி, பெருமுச்சுவிட்டாள்.

தான் கொண்டு வந்திருந்த தின்பண்டங்களையும் பாலையும் அறையிலேயே வைத்து விட்டு மெல்ல வெளியேறினாள். அவள் மாளிகையை விட்டு வெளியேறி சற்றுத் தூரத்துக்கப்பால் இருந்த ஒரு மடத்தையடைந்தாள். அரசகுமாரிக்குத் தெரியாமல் குணபத்திரன் அவளைப் பின் தொடர்ந்து சென்றான். அந்த மடத்தில் ஒற்றைக் கால் முடமான ஓரிளைஞன் இருந்தான். அவனைக் கண்டதும் அரசகுமாரி ஓடிச் சென்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவளுடைய கைகளை உதறி விட்ட அந்த முட இளைஞன், அரசகுமாரி மீது வசைமாரி பொழிந்தான். அவன் "உன் கணவன் வந்துவிட்டாரல்லவா? இனி இந்த ஏழை முடவனை ஏனென்றும் நீ வந்து பார்க்கப் போவதில்லை. நீ உன் அன்புக் கணவரிடமே போய்ச் சேரு!" என்று அவளைத் திட்டினான்.

அரசகுமாரி அழுதாள். "நான் பருவமடைந்த காலம் முதல் உங்களைத்தானே விரும்பி, உங்களோடு அன்பாகப் பழகி வருகிறேன். இன்று அவர் வந்துவிட்டார். ஆனால் உடனடியாகவே அவர் படுத்துறங்கி விட்டார். என்னை திருமணம் முடித்த கையோடு, தன்நாடு திரும்பியவர் இன்றுதான் வந்திருக்கிறார். வந்ததும் என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஒரு துளி எண்ணம் கூட இல்லாமல் அவர் படுத்துறங்கிவிட்டார். அவருக்கு என் மீது எவ்வாறு துளிகூட அன்பு இல்லையோ, அதேபோன்று எனக்கும் அவர் மீது எதுவித பற்றும் பாசமும் கிடையாது. ஆகவே அவர் நம்முடைய அந்தரங்கமான உறவுக்குப் பங்கமாக இருக்கமாட்டார் என்றே நம்புகிறேன். இருப்பினும் நாம் சற்றுக் கவனமாகத்தான் நடந்து கொள்ள வேண்டும்!" என்று அந்த முட இளைஞனை கட்டியணைத்துக் கொஞ்சினாள். இருவரும் சிறிது நேரம் மகிழ்ச்சியாக இருந்தபின்னர், அரசகுமாரி தன்னிருப்பிடம் செல்லப் புறப்பட்டாள். சரசவல்லி புறப்படும் போது அந்த இளைஞன் "நீ என்னை மறந்து விடுவதே நல்லது. நீ இங்கு வந்து என்னுடன் சரசமாடுவது வெளியே தெரிந்தால், என்னை உயிரோடு விட்டு வைக்க மாட்டார்கள்!" என்று கூறினான். இதனைக் கேட்ட சரசவல்லி அழுத வண்ணம், அந்த இளைஞனுடைய கால்களைக் கட்டிப் பிடித்தாள்.

"உங்களைக் காணாவிட்டால் என்னால் எப்படி உயிர்வாழ முடியும்? ஆகவே நாமிருவரும் எப்போதும் ஒன்றாக இருப்பதற்கு ஒரு வழிதேட வேண்டும்!" என்று சரசவல்லி கேட்டாள்.

இதற்கு பதிலிறுத்த அந்த இளைஞன், "உன் கணவரைக் கொன்றொழிப்பதைவிட வேறு எந்தவிதமான மார்க்கமும் இல்லை. அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது, வாளால் ஒரே வெட்டாக அவனுடைய தலையைச் சீவி விடு. நீண்ட நாட்களுக்குப் பின்னர். உன்னிடம் திரும்பி வந்த உன் கணவரை நீதான் கொன்றாய் என்ற பழிச்சொல் வராமல் பக்குவமாய்ப் பார்த்துக் கொள்!" என்று அவன் சொன்னான். தன்னுடைய கணவனைக் கொன்று விடும்படி அவளுடைய கள்ளக் காதலன் கூறியதைக் கேட்ட சரசவல்லி, எதுவிதமான அதிர்ச்சியும் கொள்ளாமல், மகிழ்ச்சியாகவே அதனை ஏற்றுக் கொண்டு அரண்மனை நோக்கிப் புறப்பட்டாள்.

கணவன் படுத்திருந்த அறைக்கு வந்து பார்த்தாள். அப்போதும் அரசகுமாரன் சன்மார்க்கன் தூக்கம் கலையாமல் படுத்திருந்தான்.

அமைச்சர் மகன் குணபத்திரன், சரசவல்லி அவள் கணவன் படுத்திருந்த அறையிலிருந்து வெளியேறி முட இளைஞனிடம் சென்று சரசமாடியதையும் அவர்களுக்கிடையில் இடம் பெற்ற உரையாடல்களையும் மறைந்திருந்து கேட்டான். மடத்திலிருந்து சரசவல்லி வெளியேறியதும் அவளைப் பின் தொடர்ந்து அரண்மனைக்குச் சென்றான். குணபத்திரன் அரண்மனைக்கு வந்து சேர்ந்து, அவனுடைய நண்பன் சன்மார்க்கன் படுத்திருந்த அறைக்குச் சென்ற அதே நேரத்தில் சரசவல்லி சன்மார்க்கனுடைய உடைவாளை எடுத்து ஒரே வீச்சில் அவனுடைய தலையை வெட்டினாள். இதனைக் கண்ட குணபத்திரன் ஓடோடிச் சென்று சரசவல்லியின் கைகளைப் பற்றி "அடிபாவி உன் கணவனையே உன் கள்ளக் காதலுக்காக வெட்டிக் கொன்று விட்டாயே பாதகி!" என்று கத்தினான்.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத சரசவல்லி துணுக்குற்றாள். எனினும், உசாரடைந்தவளாக வாளைக் கீழே போட்டாள்.

"ஐயோ! என் கணவனை இந்தப் படுபாவி வெட்டிக் கொன்று விட்டானே!" என்று பலத்த சத்தமாகக் கத்திக் கொண்டு பழியை குணபத்திரன் மீது போட்டாள். அவள் போட்ட பலத்த சத்தத்தைக் கேட்ட காவலர்கள் அரண்மனைக்குள் ஓடோடி வந்தார்கள். தலை கொய்யப்பட்டு அரசகுமாரன் இரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்ததைக் கண்டு, சரசவல்லி கூறியபடி, குணபத்திரன்தான் இக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். அவனைக் கைது செய்து அரசனிடம் இழுத்துச் சென்றனர். இதற்கிடையில் அரசகுமாரி சரசவல்லி தனது தந்தையாரிடம் ஓடிச் சென்று தன் கணவனை அவனுடைய சிநேகிதன் குணபத்திரன் வாளால் வெட்டிக் கொன்று விட்டான் என்று அழுது புலம்பி முறையிட்டாள்.

தன் மருமகனை அவனுடைய நண்பன் குணபத்திரன் வெட்டிக் கொன்று விட்டான் என்று தனது மகள் கூறிய கூற்றை அப்படியே நம்பிவிட்ட மன்னன், வேறு எந்த விசாரணையும் இல்லாமல் குணபத்திரனை கொண்டு சென்று தூக்கிலிடுமாறு கட்டளையிட்டான்.

குற்றவாளியாக்கப்பட்ட குணபத்திரனை தூக்கிலிட்டுக் கொல்லுமாறு அரசன் கட்டளை பிறப்பித்திருப்பதைக் காவலர்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறி குணபத்திரனை அவரிடம் ஒப்படைத்தனர். அமைச்சர் குணபத்திரனை உச்சி முதல் உள்ளங்கால்வரை நன்றாகப் பார்த்தார். ஆனால் அவன் குற்றமற்றவன் என்பதை அவனுடைய தோற்றத்திலிருந்தே அமைச்சர் கண்டு கொண்டார். "குணபத்திரா, உன்னைப் பார்த்தால் நீ உன் சிநேகிதனை வெட்டிக் கொன்றிருப்பாய் என்பதை என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. உண்மையாக நடந்ததைக்கூறும்!" என்று கேட்டுக் கொண்டார்.

குணபத்திரன் தான் தனது நண்பன் அரசகுமாரன் சன்மார்க்கனுடன் புறப்பட்டதிலிருந்து கொலைக்குற்றம் சாட்டப்பட்ட சம்பவம் வரை அனைத்து உண்மைகளையும் எடுத்துரைத்தான்.

இவற்றையெல்லாம் பக்குவமாகக் கேட்ட அமைச்சன், "நீ கூறுவது உண்மையானால், இக்கூற்றை உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார்.

"ஆமாம் அமைச்சர் அவர்களே! இன்றிரவு தாங்கள் என்னுடன் அரண்மனைக்கு அருகிலுள்ள மடத்தடிக்கு வருவீர்களானால் உங்கள் கண்களாலேயே உண்மைச் சம்பவங்களை காணமுடியும்!" என்று கூறினான்.

அமைச்சரும் அதற்கு ஒப்புக்கொண்டார். குணபத்திரன் அமைச்சரிடம் மற்றொரு வேண்டுகோளையும் வெளியிட்டான்.

சன்மார்க்கன் கொலையில் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளி கண்டுபிடிக்கப் படும்வரை தனது நண்பனின் உடலை தீமூட்டி எரிக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்," என்று கேட்டுக் கொண்டான். அதற்கு அமைச்சரும் ஒப்புக் கொண்டார்.

அன்றிரவு அமைச்சருடன் குணபத்திரனும் முடஇளைஞன் தங்கியிருந்த மடத்துக்குச் சென்று எவரும் காணாமல் பதுங்கியிருந்தனர். நள்ளிரவில் தன்னந்தனியாக அரசகுமாரி சரசவல்லி மடத்துக்கு வந்து சேர்ந்தாள். முடஇளைஞனும் சரசவல்லியும் கட்டியணைத்து பரவசமாக இருந்தனர். அப்போது சரசவல்லி, இளைஞனிடம், "இனிமேல் நாம் எதற்கும் பயப்படத்தேவையில்லை. நீங்கள் சொன்னபடி என் கணவன் சன்மார்க்கனை இரவே வெட்டிக் கொன்று விட்டேன். அவரைக் கொன்றபழியை அவருடைய நண்பன், குணபத்திரனின் மீது போட்டு விட்டேன்!" என்று மகிழ்ச்சியாகக் கூறினாள். *(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

# காதில பூ கந்தசாமி



இஞ்சாருங்கோ,

என்ன கூப்பிடுறது கேக்குதில்லையே. இஞ்சாருங்கேவன்....

அட்டா தெனாலி படத்து ஞாபகத்தத் தூண்டிட்டனோ! நோ நோ, நெவர்! இது தெனாலி இல்லை. காதிலைபூ கந்தசாமி! ஃபொகெட் த தெனாலி. அன்ட் கம் டு மை பொயின்ட். நான் சொல்லுறத மட்டும் கேளுங்கோ. நான் ஞாபகப் படுத்திறத மட்டும் ஞாபகப்படுங்கோ. (சரியா தமிழ்? எனது தமிழ் இப்படித்தான். நாட்டுத்தமிழ் வீட்டுத்தமிழ் காட்டுத்தமிழென்று அடிக்கடி மாறும். கண்டுகொள்ளாதேங்கோ) இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னால், உங்கள் முன்னால், இந்தப் பத்திரிகையின் பின்னால், உங்கள் கண்ணால், கண்டு களித்த, அந்நாள் ஆசாமிதான் இந்நாளில் வந்து நிக்கிறேனென்று சொன்னால் நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாவிட்டால் பின்னால் வரும் விளைவுகளுக்கு என்னால் பொறுப்புச் சொல்ல முடியாதென்பதைச் சொல்லிவைக்கிறேன் முன்னால். (அது என்ன வீளைவு எண்டு யோசிக்கத் தொடங்கி விடாதேங்கோ. நான் யோசிக்கச் சொல்வதைவிட நீங்கள் உங்களுக்கென்று தனியாக யோசிக்க எந்த உரிமையும் அற்றவர்கள் என்ற சத்தியப் பிரமாணத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இந்தப் பகுதியை வாசிக்க நான் அனுமதி தருவேன், என்பதை முதலில் உங்களுக்கு உணர்த்தி வைக்க விரும்புகிறேன். சரி, நான் சொல்வதை நம்பாவிட்டால் விளைவு என்னவாகும் என்றால்.... நீங்கள் உண்மையை உணர்ந்து விடுவீர்கள்! உண்மை எவ்வளவு ஆபத்தான தென்பது உங்களுக்குத் தெரியுமல்லளவா?)

நானும் ஒரு சத்தியப்பிரமாணத்துடன் தான் இங்கே பேச வந்திருக்கிறேன். என்னவாக இருக்கும் என்று யோசிக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அப்படி யோசிக்கும் உரிமை இல்லை என்பதை மறுபடி நான் ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. எனவே, எனது சத்தியப்பிரமாணம் என்னவென்பதை நான் நானாகவே சொல்லிவிடுகிறேன். அதாவது, நான் பேசுவதெல்லாம் பொய், பொய்யைத் தவிர வேறு ஒன்றுமில்லை, என்பதே எனது மதிப்புக்குரிய சத்திய வாக்கியம். அதனால் நான் சொல்லுவதை நீங்கள் நம்பித்தான ஆக வேண்டியது கட்டாயமாக எழுதிவைக்கப்பட்ட விதி. நம்புவதென்பது பெரிய கஷ்டமான காரியமல்ல நானே நான் சொல்வதை நம்பிக்கொண்டு, அதை நீங்கள் நம்பியதாக நம்புகிறபோது நீங்கள் நான் சொல்வதை நம்பாவிட்டால் அது நம்பிக்கைத் துரோகமாகிவிடும்.

சரி விடயத்துக்கு வருவோம். நீண்ட நாட்களின் பின் மீண்டும் வந்திருக்கும் எனக்கு, நீங்கள் அளிக்கும் செங்கம்பள வரவேற்புக்கு நன்றி. தயவு செய்து மாலைகள் வேண்டாம். நான் மாலைகள் விடயத்தில் படு கவனம். மேடைகள் பற்றியும் தான். மேடையில்லாமல், மாலையில்லாமல், முன்னால் யாருமில்லாமல் பேசுவதற்கு ஏற்பாட்டைச் செய்து தந்த இந்த தினமுரசு பத்திரிகைக்கு முதற்கண் நன்றி. இன்று ஒரு மங்களகரமான பொன்னாள். அதனால் நான் ஒரு நற்செய்தியை தெரிவித்து விட்டு அடுத்ததடவை அனேக செய்திகளுடன் திரும்ப வருகிறேன். என்ன அந்த மகிழ்ச்சிகரமான செய்தி? என்னவென்றால், பேச்சுவார்த்தைக்காக கூட்டணி விதித்த நிபந்தனைகள் யாவற்றையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டுவிட்டனர். தமிழீழ தேசத்தின் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் இந்த முன்னேற்றகரமான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க அண்டை நாட்டு தலைவி சந்திரிக்கா அம்மையார். விருப்பம் தெரிவித்துள்ளார். இதைக் கண்டு மகிழ்ச்சி தெரிவித்த யு.பி. மகேஸ்வரன் தனது சொத்தை எல்லாம் ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப் போவதாகவும், அதற்காக தன்னை அடுத்ததேர்தலில் நிறுத்தும்படியும் இருதரப்பாரையும் மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்.

நீண்ட நாட்களாக காட்டுக்குள் இருந்து கறுத்துவிட்டதற்கு கவலைப்படாத கூட்டணியின் கொரில்லாப்படைத் தலைவர் (மன்னிக்கவும் கெரில்லாப்படைத் தலைவர்) ஆனந்தசங்கரி, தமது 'கூட்டணியின் கூக்குரல்' என்ற தலைமறைவு வானொலியில் ஆற்றிய ஆக்ரோஷமான உரையில், தாம் தமது ஆயுதங்களை கையளிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், இந்நாட்டில் லஞ்சம் வாங்கும் உரிமை, ஊழல் செய்யும் உரிமை, பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசும் உரிமை, போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதே தமது ஆயுதப்போராட்டத்தின் இறுதி இலக்கெனவும் உறுதியாகத் தெரிவித்தார். மாவட்டச்சுரண்டல், மாநில சுரண்டலென முன்மொழியப்படும் அரைகுறை தீர்வுகள் தம்மை திருப்தி செய்யப்போவதில்லை என்றும் தாம் தொடர்ந்தும் தமது மொத்த நாட்டுச் சுரண்டல் கொள்கையை கைவிடாமலே பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நல்லது, இந்தச் செய்தியை அப்படியே நம்பிக்கொண்டு அடுத்த இதழில் சந்திக்க வரும் வரை சிந்திகாது இருக்கும்படி மறுபடி வலியுறுத்திக் கொண்டு விடை பெறுபவர்- வேறுயாருமல்ல, உங்கள் அபிமானத்துக்குரிய காதில பூ கந்தசாமி!

**குறிப்பு :** *முன்னர் ரீல் சுத்தி, கயிறு திரித்து, கதையளந்து பழக்கமுள்ள ஐடியா மன்னர்கள் யாரும் இருந்தால் உடனடியாகத் தொடர்பு கொண்டு ஐடியாக்களை அள்ளி வழங்கினால் மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்கிக் கொள்ளத் தான் தயாரென்று காதில பூ கந்தசாமி அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.*

# தலைப்பும் மலைப்பும்!

**'மக்கள் வங்கி-ஏலவிற்பனை'**

-விளம்பரம்-

*வங்கிக் கட்டடம் மட்டுமா, அல்லது அதில் பணிபுரியும் ஊழியர்களும் ஏலத்தில் விற்கப்படுவார்களா? என்று வினவுகிறார் நமது சில்லறைக்கடை சில்வா முதலாளி!*

**'பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்கள் கலைப்பு'**

-செய்தி-

*பதிவு செய்யப்படாத விளையாட்டுக் கழகங்களுக்கு இடம் கொடுக்கப்போலும்!*

**ஊர்காவல் படை வீரர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்!**

-செய்தி-

*ஊரைக் காவல் செய்பவருக்கு நீரைக்காக்கத் தெரியவில்லையோ....?*

**'போராளிகளை பயங்கரவாதிகள் என்று கூறலாகாது'**

-மருதூர்கனி-பா.உ-

*இன்று போராளிகள் நாளை ஊராளவும் வாய்ப்புப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை அல்லவா?*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகளில் மின்னிப்பேசுகின்றன.

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
336337




# எக்ஸ்போ 2000




SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழை

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


→ ஹொலிவூட் கவர்ச்சிப் புயல், அல்ல அல்ல, பூகம்பம் ஷரன் ஸ்டோன் வயது நாற்பதைத் தாண்டினாலும் கவர்ச்சிக்கன்னியாக இன்றும் வலம் வருகிறார்.

80களில் நடிக்க ஆரம்பித்த ஷரனால் 90 களில் தான் கவர்ச்சி நட்சத்திரமாகப் பிரகாசிக்க முடிந்தது. அதுவும் 'பேஸிக் இன்ஸ்டிங்ட்' என்ற படத்தில் தனது கவர்ச்சி நடிப்பால் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்தி விட்டார்.

'பேஸிக் இன்ஸ்டிங்ட்' படத்திற்குப் பின் இவர் பல படங்களில் நடித்து விட்டாலும், அப்படத்தின் மூலம் கிடைத்த பெயரும் புகழும் வேறு எந்தப் படத்திலும் ஷரனுக்குக் கிடைக்கவில்லை என்பது நிஜம்.

இப்போது 'பேஸிக் இன்ஸ்டிங்ட்' இரண்டாம் பாகம் தயாராகி வருகிறது. இதிலும் ஷரன் தான் நாயகி. இன்னொரு பூகம்பத்தை எதிர்கொள்ள தயாராக இருங்கள்.

# பூகம்பம்



புத்தாயிரமாம்மாண்டை வரவேற்குமுகமாக கடந்த ஜூன் மாதம் ஜெர்மன் நாட்டின் ஹனோவர் நகரில் 'எக்ஸ்போ 2000' என்ற பெயரில் உலகக் கண்காட்சி தொடங்கப்பட்டு 5 மாதங்கள் வரை இடம்பெற்று ஒக்டோபர் மாதத்தில் முடிவடைந்தது.

உலகனைத்திலுமிருந்து 200 நாடுகள் வரை இக்கண்காட்சியில் பங்கேற்றன.

ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டின் சிறப்பம்சங்களை முதன்மைப்படுத்தி தத்தமது அரங்குகளை கவர்ச்சியாக அழகுபடுத்தியிருந்தன.

மேலுள்ள படத்தில் அரபு நாடு ஒன்றிலுள்ள கோட்டை எவ்வாறு அமைந்திருக்குமோ அதே பாணியைப் பின்பற்றி 'அரேபியன் எமிரேட்'டுக்குரிய காட்சியரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியைப் பார்க்க வந்த அனைவரும் இந்தக் கோட்டையைப் பெரிதும் விரும்பிச் சென்று பார்த்தனர். அவ்வளவு தத்ரூபமாக ஒரு பாலைவனத்தை உருவாக்கி அதன் நடுவே இவ்வரேபியக் கோட்டை நிர்மாணித்திருந்தனர்.



↓ நம்மைச் சுற்றியுள்ள எண்ணற்ற உயிரினங்களின் வாழ்க்கை நெறிமுறைகளை ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். சில பிராணிகளின் வாழ்க்கை முறையினை ஆராய்வது என்பது மிகவும் கடினமானதாகும்.

வண்ணத்துப் பூச்சிகள் தங்கள் வர்க்க விருத்திக்காக எவ்வாறு இணை சேர்கின்றன என்பதைக் கண்டறிய நடைபெற்ற ஆராய்ச்சியின் போது ஜப்பான் நாட்டின் 'யோக்கோஹாமா' பட்டினப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'கெண்டாரோ ஹரிக்காவா' என்பவரும் அவருடைய குழுவினரும் இணைந்து ஜப்பானின் மஞ்சள் வர்ண வண்ணாத்துப் பூச்சிகளை வைத்து ஆராய்ந்தனர்.


இப்பூச்சிகள் தங்கள் விருப்பதையோ, அதிருப்தியையோ வெளிப்படுத்துவதற்கு ஒரு வகையான ஒளியை வெளிப்படுத்தி தன் இணைக்கு சமிக்ஞை செய்கின்றனவாம். இக்க முறையில் ஒரு பூச்சி இணை சேர விருப்பமாக பட்சத்தில் அதனுடன் சேர நாட்டம் கொண்டு வரும் பூச்சி அடுத்த பூச்சியை வலுக்கட்டாயப்படுத்த முடியாமற் போய்விடுமாம்.

# வர்ணக் கலப்பு



ஜெர்மன் நாட்டில் உள்ள ஹனோவர் நகரில் 'எக்ஸ்போ 2000' நடைபெற்றமையினால் கண்காட்சி மைதானத்தின் மையப் பகுதியை ஜெர்மன் நாட்டின் காட்சியரங்கம் ஆக்கிரமித்துக் கொண்டது. இங்கிருந்து காட்சிமைதானத்தின் நாலா பக்கங்களையும் இணைக்கும் பாதைகள் இங்கிருந்தே தொடங்குகின்றன. கண்காட்சி பார்க்க வரும் மக்கள் எவரும் இந்த ஜெர்மன் நாட்டு அரங்கைப் பார்க்காமல் போக முடியாது என்ற முறையில் இந்த அரங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது ஒரு விசேட அம்சமாகும்.

இக்கண்காட்சியில் பங்கெடுத்துக் கொண்ட இலத்தீன் அமெரிக்க நாடான வெனிசுலா நாட்டின் காட்சியரங்குதான் படத்தில் காணப்படுகிறது. இந்த அரங்கின் உச்சியில் அலர்ந்த மலர் போன்ற ஓர் அமைப்பினை உருவாக்கியிருந்தனர். வெயிலைத் தாங்குவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்ட இம்மலர் மழையைத் தாங்கக் கூடிய சக்தியற்றது என்பதனால் மழைபெய்யும் அறிகுறி தென்பட்டால், உடனடியாக இதழ்கள் ஒன்றாகக் கூம்பி அரங்கினுள்ளே பணிந்து விடக்கூடிய முறையில் இந்த மலர் இருந்தது.



## 1வது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி அனிதா (05.12.2000)

[illegible] செல்வி அனிதா தனது 1வது பிறந்த நாளை [illegible] 05.12.2000 [illegible] 10.12.2000 அன்று [illegible] St-Petri [illegible] 28325 Bremen [illegible]

[illegible]



# விளையாட்டு

← அறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டும் தான் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் இருக்கிறது, என்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், நாம் எடுத்து வளர்க்கும் செல்லப் பிராணிகளும் நம்முடன் சேர்ந்து ஓரளவு சிந்திக்கும் ஆற்றலைப் பெற்று வருகின்றன என்று ஆய்வாளர்கள் இப்பொழுது கருத ஆரம்பித்து விட்டனர்.

பறவைகளும் மிருகங்களும் சிந்திக்கும் ஆற்றலற்றவை என்ற கருத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு திறந்த மனதுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் பல அரிய உண்மைகளைக் கண்டுள்ளனர்.

படத்தில் 'இரானி பெப்பர் பேக்' என்ற உயிரியல் வல்லுநர் ஆபிரிக்காவில் காணப்படும் சாம்பல் வர்ணப் பறவைக்கு நூறு வார்த்தைகளைப் புரிந்து, சிறு சிறு கட்டளைகளை நிறைவேற்றக் கூடிய பயிற்சியை அளித்துள்ளார். அலெக்ஸ் என்ற பெயருடைய இந்தக் கிளி வர்ணங்களின் பெயரைச் சொன்னால் அந்த வர்ணத்திலான பொருளைத் தேடிக் கண்டுபிடித்துத் தரவல்ல ஆற்றலைப் பெற்றிருக்கிறதாம்.

# கடிதார் பெண்கள்

→ சிரித்தபடி போஸ் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்தப் பெண்கள் ஆடை அலங்காரப் போட்டிக்கு வந்திருக்கும் மொடல் அழகிகள் என்று நினைத்து விடாதீர்கள்.

இவர்கள் அனைவரும் ஏயார் இந்தியா விமானத்தில் பணிவிடை செய்யும் பணிப்பெண்கள். பணிப்பெண்கள் என்றால் சாறி அல்லவா அணிந்திருப்பார்கள். நின்று கொண்டிருப்பவர்கள் கடிதார் அணிந்திருக்கிறார்களே என்று கேட்கிறீர்களா?

இப்போது இந்தியாவில் சாறியின் மவுசு குறைந்து விட்டது. கடிதார், பஞ்சாபி, சல்வார் கமீஸ்கள் தான் பிரபலம். இதனால்தானோ என்னவோ இப்போது எயார் இந்தியா நிறுவனம் பணிப்பெண்கள் கடிதார்களை அணிய ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

